**தலைப்பு 117 - போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 117 - போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 ஒக்தோபர் 24 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில்நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக்கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச்செல்வதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு, அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஓட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ, கூட்டாகவோ தாக்கமளிப்பதால், பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன், அதன் பொருன்மையான தனமையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு, பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தை இனங்காணும் போதும், மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச்செய்தல், மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை**

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) கடந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்**

**(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) அமைச்சினால் வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ளும் போது சிகாஸ் நிகழ்ச்சி திட்டத்தில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் குறியீட்டு இலக்க பட்டியலை பயன்படுத்தாது குறித்த மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால், 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக ஏசிஏ - 6 - நிதி அல்லாத சொத்துக்கள் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 5,410.59 மில்லியனான வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் சரியாக மதிப்பாய்வுக்கு உள்ளாக்கப்பட்டு இருக்கவில்லை. | நெடுஞ்சாலைகள் பிரிவு<br><br>CIGAS மூலம் வழங்கப்பட்டுள்ள சொத்துக்களின் குறியீட்டு இலக்கங்கள் அமைச்சின் அனைத்து சொத்துக்களிலும் தற்போது வழங்கப்பட்டுள்ள குறியீட்டு இலக்கங்களுடன் ஒப்பிடப்பட்டு குறித்து வைக்கப்பட்டுள்ளதுடன், அமைச்சின் நிலையான சொத்துக்கள் பதிவேட்டிலும் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கின்றேன். | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 38(1)(இ) இன் கீழ் கட்டமைப்பின் மீளாய்வில், விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் மற்றும் பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களை தெளிவாகவும் எளிதாகவும் அடையாளம் காண பொருத்தமான நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டு எழுத்துப்பூர்வ அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | போக்குவரத்து பிரிவு<br><br>பல பிரிவுகளின் இருப்பு பதிவேட்டில் உட்படுத்தப்பட்ட சொத்துக்கள் சிகாஸ் நிகழ்ச்சி திட்டத்தின் குறியீட்டு இலக்கமிடப்பட்டுள்ளதுடன், ஏனைய பிரிவுகளின் இருப்பு பதிவேட்டில் உள்ள சொத்துக்களை சிகாஸ் நிகழ்ச்சி திட்டத்தின் பிரகாரம் குறியீட்டுக்கு உட்படுத்தி வருடாந்த பொருள் மெய்மையாய்வினை அதன் மூலம் மேற்கொள்ள எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கின்றேன். | |
| (ii) | பௌதீக ரீதியாக உரித்தற்ற அமைச்சிற்கு சொந்தமான சொத்துக்கள் | | |
| | போக்குவரத்து பிரிவுக்கு சொந்தமான 15 மோட்டார் வாகனங்கள் தற்போது வேறு அரச நிறுவனங்களினால் பௌதீக ரீதியில் பயன்படுத்தப்பட்ட போதிலும் இதுவரையிலும் அந்த வாகனங்களை முறையாக ஒப்படைப்பதற்கு அல்லது மீள பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் கணக்கு வைக்கப்பட்ட ரூபா 33.7 மில்லியன் பெறுமதியான 08 வாகனங்கள், மற்றும் தொடர்ந்தும் கணக்கு வைக்கப்படாத 07 வாகனங்கள் உள்ளடங்கி இருந்தது. இதன் காரணமாக 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியாக அமைச்சின் சொத்துக்கள் கணக்கின் சரியான தன்மை கணக்காய்வினால் உறுதிப்படுத்தப்படவில்லை. | பதிவு உரித்தினை ஒப்படைப்பதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளன. ஜனாதிபதி செயலகத்தின் அத்தியாவசிய கடமை நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள வாகனம் அமைச்சுக்கு விடுவிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | உரிமை முறையாக மாற்றப்பட்ட வாகனங்களில் உரித்து முறைப்படி மாற்றப்பட வேண்டும். அதன்படி, சொத்துப் பதிவேடுகள் அவ்வப்போது புதுப்பிக்கப்பட வேண்டும். |

(iii) தொலைந்த வாகனங்கள்

| | | |
|---|---|---|
| முறையாக கைத்தவிர்க்கப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படாத அமைச்சின் பெயரில் பதிவு செய்துள்ள 10 மோட்டார் வாகனங்கள், 10 கேப் வண்டிகள், 02 ஜீப் வண்டிகள், 02 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் லொரி ஒன்று தற்போது பயன்படுத்தப்படும் தரப்பினர் தொடர்பில் தகவல்கள் வெளிப்படுத்த முடியாததாக காணப்பட்டது. போக்குவரத்துப் பிரிவினால் இது தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதுடன், இந்த வாகனங்கள் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியாக அமைச்சின் வாகன பட்டியலுக்கு மற்றும் சொத்துக்கள் கணக்கில் உள்ளடக்கப்பட்டிராத காரணத்தால் மீளாய்வாண்டின் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ள சொத்துக்களின் பெறுமதி குறை கணிப்பீட்டிற்கு உள்ளாகி இருந்தது. | அமைச்சிடம் காணப்படாத வாகனங்கள் சி.உ.செ. (நிறுவன நிர்வாகம்) இன் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவினால் ஆராயப்படும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், தொடர்ந்தும் கண்டறிவதற்கு முடியாத வாகனங்களாக 13 வாகனங்கள் 2023.04.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. | காணாமல் போன வாகனங்கள் தொடர்பாக, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 38(1)(ஏ) இன் படி சட்ட அமுலாக்க முகவர் நிறுவனங்களுக்கு புகார் அளிக்க வேண்டும். |

**(ஆ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் நட்டங்கள் தொடர்பில் அறிக்கையிடுவதற்கு குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கு இணங்க நட்டங்கள் பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டிய போதிலும், போக்குவரத்து பிரிவினால் வாகன விபத்துகளுக்கு உரியதாக மாத்திரம் நட்டங்கள் தொடர்பில் பதிவு செய்வதற்காக தற்காலிகமாக தயாரிக்கப்பட்ட பதிவேடு ஒன்று பேணிச் செல்லப்பட்டிருந்த போதிலும் அனைத்து நட்டங்கள் மற்றும் இழப்புகள் தொடர்பில் பதிவு செய்வதற்கு நட்டங்கள் பதிவேடு ஒன்று பேணி செல்லப்பட்டிருக்கவில்லை.

**(இ) கணக்காய்வுக்கான சான்றுகள் இல்லாதிருந்தமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016-2023 ஆண்டுகளுக்கு உரிய 08 வருடங்களுக்கான வ/ப அதிவேக பாதை போக்குவரத்து (தனியார்) கம்பனியில் ஏற்பட்ட அனைத்து | வ/ப அதிவேக வீதி போக்குவரத்து (தனியார்) கம்பனியினை கலைப்பதற்கு | நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்கள் உடனடியாக தயாரிக்கப்பட்டு |

| | | |
|---|---|---|
| கொடுக்கல் வாங்கல்களையும் உறுதிப்படுத்துவதற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் மற்றும் எந்த ஒரு சான்றும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க தவறியிருந்தது. | திட்டமிடப்பட்டுள்ளதால் கலைக்கும் நடைமுறையில் இதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கின்றேன். | அங்கீகரிக்கப்பட வேண்டும். தங்கள் பொறுப்புகளை புறக்கணித்த அதிகாரிகள் மற்றும் பணிப்பாளர் குழு உறுப்பினர்கள் அடையாளம் காணப்பட்டு, தாபனவிதிக் கோவையின் பகுதி II அத்தியாயம் XLVIII இன் பிரிவு 29 இன் படி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்தவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டுக்காக அமைச்சின் செலவின தலைப்பின் கீழ் மீண்டெழும் 02 செலவின விடயங்களுக்காக மற்றும் 20 மூலதன செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 55,433.7 மில்லியன் கூட்டுத்தொகையான மொத்த நிதியேற்பாடும் பயன்படுத்தப்படாது எஞ்சி இருந்தது. அரச செலவின கட்டுப்பாடு தொடர்பில் 2022 ஏப்ரல் 26 ஆம் திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் ஆண்டின் செலவினங்கள் மட்டுப்படுத்தப்பட்டமை, செயல்திட்ட முகாமைத்துவ அலகு மூடப்பட்டமை மற்றும் செயல்திட்டங்களுக்கு உரிய இடைக் கொடுப்பனவு சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் கடன் முகவரகத்தால் கடன் நிறுத்தப்பட்ட காரணத்தால் கொடுப்பனவுகளை மேற்கொள்ளாமை போன்றன இந்த நிதி ஏற்பாடு எஞ்சுவதற்கு காரணமாக அமைந்திருந்தது. | 02 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 20 மூலதன செலவிடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த நிதியேற்பாடான ரூபா 55,433.7 மில்லியன் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்படாது எஞ்சியிருந்தது. அதன் பல்வேறு செலவின விடயங்கள் நாட்டில் அப்போது நிலவிய நிதி நெருக்கடி காரணமாக அமைச்சின் கட்டுப்பாட்டினை மீறிய விடயங்களின் அடிப்படையில் அந்த நிதி ஏற்பாடு எஞ்சியிருந்தது. | துல்லியமான எதிர்வுகூறலுடன் மற்றும் சரியான நேரத்தில் புதுப்பித்தல்களுடன் செலவு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிகழ்ச்சி திட்டம் 01 இன் கீழான 17 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 03 மூலதன செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 151.82 மில்லியன் மற்றும் ரூபா 7.65 மில்லியன் நிதியேற்பாட்டில் முறையே ரூபா 114.84 மில்லியன் மற்றும் ரூபா 6.79 மில்லியன் | நிகழ்ச்சி திட்டம் 01 இன் கீழான 17 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 03 மூலதன செலவின விடயங்களுக்காக ஏற்பாடு | துல்லியமான எதிர்வுகூறலுடன் செலவு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதி ஏற்பாடு எஞ்சியிருந்தது. இந்த சேமிப்புகள் 50 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. ஆண்டில் செலவினங்களுக்கான தேவைப்பாடு ஏற்படாமை, செலவின கட்டுப்பாடு பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படாமை மற்றும் இராஜாங்க அமைச்சு மீள்கட்டமைக்கப்படல் ஆகிய காரணங்களால் நிதி ஏற்பாடு எஞ்சியிருந்தது. | செய்யப்பட்டிருந்த ரூபா 151.82 மில்லியன் மற்றும் ரூபா 7.65 மில்லியன் நிதியேற்பாட்டில் முறையே ரூபா 114.84 மில்லியன் மற்றும் ரூபா 6.79 மில்லியன் நிதி ஏற்பாடு எஞ்சியிருந்தது. | |
| (இ) | நிகழ்ச்சி திட்டம் 02 இன் கீழ் 25 மூலதன செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 64,252.65 மில்லியன் நிதி ஏற்பாட்டில் ரூபா 55,560.96 மில்லியன் எஞ்சியிருந்ததுடன் சில செயல்திட்டங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமை, பொருளாதார நெருக்கடி காரணமாக புதிய பணிகள் ஆரம்பிக்கப்படாமை, எதிர்பார்த்த பட்டியல்கள் கிடைக்காமை, கடன் பணம் கிடைக்காமை ஆகியவற்றின் அடிப்படையில் செயல்திட்டத்தின் விடயப்பரப்பு மட்டுப்படுத்தப்பட்டமை போன்றவற்றால் அந்த சேமிப்புகள் 50 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | நிகழ்ச்சி திட்டம் 02 இன் கீழ் 25 மூலதன செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 64,252.65 மில்லியன் நிதி ஏற்பாட்டில் ரூபா 55,560.96 மில்லியன் எஞ்சியிருந்தது. | துல்லியமான எதிர்வுகூறலுடன் செலவு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 69 செலவின விடயங்களுக்கான ஆரம்ப செலவின மதிப்பீடு ரூபா 68,860.7 மில்லியன் ஆன போதிலும் திருத்தப்பட்ட செலவின மதிப்பீடானது ரூபா 131,798.6 மில்லியனாக காணப்பட்டது. அதற்கமைய ஆரம்ப செலவின மதிப்பீடு மற்றும் திருத்தப்பட்ட செலவின மதிப்பீடு ஆகியவற்றுக்கு இடையே ரூபா 89,414.3 மில்லியனான வேறுபாடு ஒன்று காணப்பட்டதுடன் அது ஆரம்ப செலவின மதிப்பீட்டின் சதவீதமாக 50 சதவீதம் முதல் 119,878 சதவீதம் வரையான வீச்சினை கொண்டிருந்தது. உதாரணம்:-<br><br>**செலவின விடயம்** — **வேறுபாடு (%)**<br>117-2-3-7-2506-4 — 119,878<br>117-2-4-29-2506 — 1650<br>117-2-4-32-2105 — 551<br><br>எதிர்பாராதவாறு செலவினங்கள் ஏற்படல், அத்தியாவசியமான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டமை, அமைச்சின் | 69 செலவின விடயங்களுக்கான ஆரம்ப செலவின மதிப்பீடு மற்றும் திருத்தப்பட்ட செலவின மதிப்பீடு ஆகியவற்றுக்கு இடையே காணப்பட்ட வேறுபாடு ஆரம்ப செலவின மதிப்பீட்டின் சதவீதமாக 50 சதவீதம் முதல் 119,878 சதவீதம் வரையான வீச்சினை கொண்டிருந்தது. | துல்லியமான எதிர்வுகூறலுடன் செலவு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தீர்மானத்தின் அடிப்படையில் தாமத கொடுப்பனவுகளின் வட்டிக்காக நிதி கட்டணங்களை தீர்ப்பதற்கு நேர்ந்தமை ஆகிய காரணங்களால் அடிப்படை மதிப்பீட்டுக்கு பின்னர் நிதி தேவைப்பாடு ஏற்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக ஆரம்ப மதிப்பீடு திருத்தப்பட்டுள்ளது. | | |
| (உ) | 117 செலவின தலைப்பின் கீழ் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிறைவடைந்த ஆண்டுக்கான குறை நிரப்பு மதிப்பீடு நிதி ஏற்பாட்டின் மூலம் ரூபா 58,283.56 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ஆரம்ப மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கீடு மேற்கொள்ளாத 02 செலவின விடயங்களுக்காக ரூபா 3,677.06 மில்லியன் கூட்டுப்பெறுமதியுடைய குறை நிரப்பு மதிப்பீடு நிதி ஏற்பாட்டின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.<br>ஒப்பந்ததாரர்களின் நிலுவை பட்டியல்களை தீர்த்தல், அமைச்சரவையின் தீர்மானத்தின் அடிப்படையில் செயல்திட்டங்களின் செலவினங்களை மேற்கொள்ளும் தேவைப்பாடு காரணமாக இந்த குறை நிரப்பு நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. மேலும் 03 செலவின விடயங்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 54,606.5 மில்லியன் கூட்டுப் பெறுமதியுடைய குறை நிரப்பு மதிப்பீட்டு நிதி ஏற்பாட்டின் பெறுமதி ஆரம்ப மதிப்பீட்டிற்கு ஒப்பாக 101 சதவீதம் முதல் 42,377 சதவீதம் வரையிலான வீச்சினை கொண்டிருந்தது.<br>உதாரணம்:- | 2.1(இ) இன் கீழ் வழங்கப்பட்ட பதில் பொருத்தமானது ஆகும். | துல்லியமான எதிர்வுகூறலுடன் செலவு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

| **செலவின விடயம்** | **வேறுபாடு (%)** |
|---|---|
| 117-2-03-07-2506-3-17 | 673.64 |
| 117-2-04-51-2506-0-11 | 101.62 |
| 117-2-02-07-2506-04-11 | 42,377.50 |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளிற்கு உட்படல்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் அமைச்சு பெற்றுக்கொண்ட வழங்கல் மற்றும் சேவைகளுக்காக 2024 ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் செலுத்தப்பட்ட ரூபா 0.84 மில்லியன் | தவறுதலாக பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளுக்கு உள்ளடக்கப்படாமை | திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான பொறுப்புகளை |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதி 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியாக பொறுப்புக்களாக இனம் காணப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இடம்பெறாதிருக்க உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டது. | சரியாக அடையாளம் காண ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். திறைசேரியின் ஒப்புதல் இல்லாமல் கடன்கள் தீர்க்கப்படக் கூடாது. |
| (ஆ) | கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அதிவேக வீதி பெருந்தெருக்கல் மற்றும் பாலங்களை நிர்மாணிக்கும் செயல்திட்டங்களில் 04 செயல்திட்டங்களின் சிவில் பணிகளுக்காக 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக கொடுப்பனவுகள் நிலுவையாக உள்ள இடைக் கொடுப்பனவுகளின் பெறுமதி ரூபா 280.37 மில்லியனாக காணப்பட்டதுடன், சிவில் பணிகள் மற்றும் காணி சுவிகரிப்புகளுக்கு உரியதாக கொடுப்பனவுகள் நாளதுவரையாக இடம்பெறாத காரணத்தால் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான மேலதிக கடப்பாடுகளின் பெறுமதி ரூபா 78.81 மில்லியன் ஆக காணப்பட்டது. | 04 செயல்திட்டங்களின் சிவில் வேலைகளுக்காக 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக கொடுப்பனவுகள் நிலுவையாக உள்ள இடைக் கொடுப்பனவுகளின் பெறுமதி ரூபா 280.37 மில்லியன் மற்றும் சிவில் பணிகள் மற்றும் காணி சுவிகரிப்புகளுக்கு உரியதாக மேலதிக கடப்பாடுகளின் பெறுமதி ரூபா 78.81 மில்லியன் ஆகவும் செயற்திட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. | பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் சரியாக இனங்காண நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்பட்டுய்யது.

| | அவதானிப்புக்கள் | | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி ரூபா மில்லியன் | இணக்கமின்மை | | |
| (i) | 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய 02/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | - | i. பதிவு செய்யப்பட்ட உரிமை இல்லாத பயன்படுத்தப்படும் வகனங்கள் அவற்றின் பதிவு உரித்து உடைய நிறுவனத்தின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தமது நிறுவனத்தின் | அமைச்சுக்கு சொந்தமான ஓட்ட நிலைமையில் உள்ள வாகனங்கள் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலேயே காணப்படுவதால் கடமை தேவைப்பாடுகளின் அடிப்படையில் வீதி | சட்டரீதியாக பயன்படுத்த பொறுப்பேற்கப்பட்டுள்ள வாகனங்களின் சட்ட உரித்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | பெயருக்கு பதிவு செய்து கொள்வதற்கு அல்லது பதிவு உரித்துடைய நிறுவனத்திற்கு முறையாக ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எவ்வறான போதிலும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உரித்துடைய 09 வாகனங்கள் அமைச்சினால் பயன்படுத்தப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து ஒரு சில வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. 09 வாகனங்களை அமைச்சுக்கு சுவிகரிப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. | |
| | | 20 | ii. அமைச்சுக்கு சொந்தமான KQ-0690 இலக்கமுடைய ஜீப் வண்டி ஒன்று 2023 ஜூன் 21 ஆம் திகதி உரிமை சட்டப்படாது சனாதிபதி அலுவலகத்திற்கு தற்காலிகமாக மாற்றப்பட்டுள்ளது. | ஜனாதிபதி செயலாளரின் கோரிக்கையின் அடிப்படையில் சனாதிபதி செயலகத்திற்கு தற்காலிகமாக வழங்கப்பட்டுள்ளது. | சட்டரீதியாக பயன்படுத்த பொறுப்பேற்கப்பட்டுள்ள வாகனங்களின் சட்ட உரித்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவை – 2006 – 7.9.2 ஆம் பிரிவு | - | ஆக குறைந்த மதிப்பீட்டிற்கு உள்ளாக்கப்பட்ட பதிலளிக்கும் விலை கேள்வி ஒன்று பொறியியல் மதிப்பீட்டினை விட கருத்தை கொள்ளக்கூடிய அளவிலான விகிதத்தினை மிஞ்சுமாயின் பெருமை நிறுவனம் புதிய விலை கேள்வியினை கருத்தில் கொள்ள வேண்டும். அல்லாதுவிடின் திருப்திகரமான விலை | AB மற்றும் C ஒப்பந்தங்களின் பொதிகளின் விலை கேள்வித் தொகையானது பொறியியல் மதிப்பீட்டிற்கு ஒப்பாக முறையே 23.7%, 16.68% மற்றும் 24.09% ஆக அதிகரித்துள்ளது. | பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் அரசாங்கத்திற்கு ஆகக்கூடிய நலனை பெற்றுக் கொள்ளும் வகையில் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், பொறுப்பற்ற விதத்தில் செயல்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பில் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | கேள்வி ஒன்றினை பெற்றுக்கொள்ள முயற்சி செய்வதற்காக குறைந்த மதிப்பீட்டிற்கு உள்ளாகிய விலை கேள்வியாளருடன் கலந்துரையாடல் மேற்கொள்ள வேண்டும். எவ்வாறான போதிலும் அதற்கு முரணாக ரக்வான சூரிய கந்த ஏ 017 செயல்திட்டத்தின் A,B,C பொதிக்காக முறையே 34 சதவீதம் 26 சதவீதம் மற்றும் 33 சதவீதத்தினால் பொறியியல் மதிப்பீட்டினை விஞ்சி ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. | | தாபன விதி கோவையின் II ஆம் பிரிவின் XLVII ஆம் அத்தியாயத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகைகள் கையேட்டின் 14 ஆம் இணைப்பு | 29.23 | போக்குவரத்து இணைப்புகள் மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவ செயல்திட்டத்தின் ஒப்பந்த பொதியின் மொத்த கிரையத்தில் 14 சதவீதமான பெறுமதியினால் விலகல்கள் இலக்கம் 4 மற்றும் 5 ஆகியவற்றுக்கு உரிய அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாது ஒப்பந்தத்தின் ஆரம்ப விடய பரப்பு திருத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | இந்த ஒப்பந்தத்தின் விலகல்கள் ஒப்பந்தத்தின் கிரயத்தில் 17.79 சதவீதம் ஆகும். | ஆரம்ப கட்டத்திலேயே பணிகளின் சரியான விடய பரப்பு இனம் காணப்பட வேண்டும். பொறுப்புக்களை புறக்கணித்துள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பில் தாபன விதி கோவையின் II ஆம் பிரிவின் XLVII ஆம் அத்தியாயத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நோக்கு மற்றும் செயற்பணி

2023 ஆம் ஆண்டினுள் பெருந்தெருக்கள் பிரிவினால் அதன் நோக்கங்களை அடைந்துகொள்ளல் தொடர்பில் எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகளின் செயன்முன்னேற்றம் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய வீதிக் கட்டமைப்பில் வாகன நெரிசல் முகாமைத்துவத்திற்காக கொரிய அரசின் உதவியின் கீழ் KOICA நிறுவனத்தின் தலைமையில் மேம்படுத்தப்பட்ட வாகன நெரிசல் முகாமைத்துவ நடைமுறையொன்று (Advanced Traffic Management System) இலங்கைக்கு அறிமுகப்படுத்துவதற்கு உரிய சாத்தியவள கற்கள் மற்றும் விரிவான திட்டங்கள் தயாரித்தல் 2017 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டிருந்தது. தற்போதைய தேசிய தரை போக்குவரத்து கொள்கை வரை அதன் நோக்கமாக நுண்ணறிவு மிக்க போக்குவரத்து கட்டமைப்பொன்றினை நிறுவுவதற்கு தேவையான வழிகாட்டுதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதற்காக அமைச்சரவையின் கொள்கை ரீதியான வெளிப்பாடு ஒன்றினை பெற்றுக் கொள்வதற்கு இதுவரையிலும் தவறியிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | உரிய அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்வதற்கு செயற்திறனாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2023 வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் பிரகாரம் வீதி பராமரிப்பு நிதியம் ஒன்றினை நிறுவுவதற்காக முன்மொழியப்பட்டிருந்ததுடன், அந்த நிதியத்தினை நிறுவுவதற்காக 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் மூலம் ரூபா 100 மில்லியன் ஒதுக்கப்பட்டு இருந்தது என குறிப்பிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் வாகன அனுமதிப்பத்திர வருமானத்தின் அடிப்படையில் வரி ஒன்றினை அளவிடுவதற்காக தயாரிக்கப்பட்ட வரை போன்று அரச நிதி கொள்கைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்த நிதியத்தினை நிறுவுவதற்கு உரிய நடவடிக்கைகள் இதுவரையிலும் இடம்பெற்றதுடன் அதன் மூலம் | இதற்காக வாகன அனுமதி பத்திர வருமானத்தின் அடிப்படையில் வரி ஒன்றினை அறவிடுவதற்காக சட்ட வரைபொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அந்த சட்ட வரைபு 2023.08.28 ஆம் திகதி மேலதிக நடவடிக்கைகளுக்காக அரச நிதிக் கொள்கைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | அரச கொள்கைகள் திட்டவட்டமான காலப்பகுதியினுள் செயல் திறனாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் கீழான கட்டமைப்புகளை மீளாய்வு செய்யும் போது விசேட கவனம் செலுத்தி எழுத்து மூல அறிவுரை வழங்கப்பட |

| | | |
|---|---|---|
| எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு அமைச்சு தவறி இருந்தது. | | வேண்டும். |
| (இ) நெடுஞ்சாலைகளை நிர்மாணித்தல் தொடர்பில் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சிற்காக நெடுஞ்சாலைகளை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல், காணித்தல், தொழில்நுட்ப சிக்கல்களை மீளாய்வு செய்தல், திட்டங்களில் தொழில்நுட்ப கணக்காய்வினை மேற்கொள்ளுதல் ஆகிய பணிகளை நிறைவேற்றுதல் பொறியியல் பிரிவிற்கு சாட்டப்பட்டுள்ள போதிலும் தொழில்நுட்ப கணக்காய்வு ஒன்று 2019 ஆம் ஆண்டின் பின்னர் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட்டு இருக்கவில்லை. | ஒவ்வொரு பிரிவுகளும் நிறுவப்பட்டமைக்கான நோக்கங்களின் பிரகாரம் சாட்டப்பட்டுள்ள பணிப் பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்றப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் சான்று படுத்தப்பட வேண்டும். அதற்காக தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் கீழான கட்டமைப்புகளை மீளாய்வு செய்யும் போது விசேட கவனம் செலுத்தி எழுத்து மூல அறிவுரை வழங்கப்பட வேண்டும். |

### 3.2 பணிப்பொறுப்புகளை நிறைவு செய்யாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வீதி கட்டமைப்பு அபிவிருத்தி மதியுரை சபை<br>விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கு அறிவுரை வழங்குவதற்காக 2008 இன் 40 ஆம் இலக்க தேசிய பெருந்தெருக்கள் அதிகாரச் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் கீழ் வீதி கட்டமைப்பு அபிவிருத்தி மதியுரை சபையொன்று நிறுவப்பட்டதுடன் இந்த குழுவினால் பின்வரும் விடயங்கள் தொடர்பில் அமைச்சருக்கு அறிவுரைகள் வழங்கப்பட வேண்டும். | | |

- சிறந்த நெடுஞ்சாலைகள் கொள்கை ஒன்றினை தயாரித்தல்

- நெடுஞ்சாலைகளின் தரத்தினை மேம்படுத்துதல்

- நெடுஞ்சாலைகள் தொடர்பான ஆராய்ச்சிகள் வீதி திட்டங்கள் வீதி அபிவிருத்தி தொழில்நுட்பம் மற்றும் பாதுகாப்பு நடைமுறைகள்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| (i) | இந்த மதியுரை சபைக்காக உத்தியோகபூர்வ அதிகாரத்திால் நியமிக்கப்படும் 15 அங்கத்தவர்களும் அமைச்சரினால் பெயரிடப்படும் 5 அங்கத்தவர்களும் உள்ளடங்க வேண்டிய போதிலும், அமைச்சரால் நியமிக்கப்பட வேண்டிய அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டு இருக்கவில்லை. | உத்தியோகபூர்வ அதிகாரத்திால் நியமிக்கப்பட வேண்டிய 13 அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், கௌரவ அமைச்சரால் மேற்படி மதியுரை சபைக்காக நியமிக்க வேண்டிய 04 அங்கத்தவர் பதவிகளுக்கு நபர்கள் பெயரிடப்பட்டுள்ளனர். | அதிகார சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட நாளிலிருந்து மதியுரை சபை நிறுவப்படாது சட்டத்தின் 6(2) பிரிவின் கீழ் பணிப் பொறுப்புக்களை நிறைவேற்றுதல் தொடர்பில் பாராளுமன்றத்துக்கு அறிக்கை ஒன்றினை சமர்ப்பித்து, வழங்கப்படும் அறிவுரைக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | மேற்படி நியமிக்கப்பட்ட அங்கத்தவர்களை வரவழைத்து அதிகாரச் சட்டத்தின் 6(2) ஆம் பிரிவின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு அதன் தலைவராக உத்தியோகப் பூர்வ அதிகாரத்தினால் பொறுப்பு சாட்டப்பட்டுள்ள செயலாளர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வீதி கட்டமைப்பு அபிவிருத்தி மதியுரை சபையினை நிறுவுதல் முழுமையாக நிறைவடைந்திராத காரணத்தால் குழு கூட்டங்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. | அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளை கருத்தில் கொள்ளாது செயற்படல் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் தொடர்பில் தாபன விதி கோவையின் II ஆம் பகுதியின் XLVII ஆம் அத்தியாயத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுகாற்று நடவடிக்கை எடுப்பதற்கு உரிய ஒழுக்காற்று உத்தியோகத்தர்களுக்கு அறிக்கையிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மேற்படி மதியுரை சபைக்கு நியமிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களால் அதிகாரச் சட்டத்தின் 6(2) பிரிவின் பிரகாரம் சாட்டப்பட்டிருந்த பணிப் பொறுப்புக்கள் தொடர்பில் அமைச்சருக்கு அறிவுரை வழங்கி இருக்கவில்லை. | வீதி கட்டமைப்புகள் அபிவிருத்தி மதியுரை சபை நிறுவப்பட்டதன் பின்னர் உரிய நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. | அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளை கருத்தில் கொள்ளாது செயற்படல் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் தொடர்பில் தாபன விதி கோவையின் II ஆம் பகுதியின் XLVII ஆம் அத்தியாயத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுகாற்று நடவடிக்கை எடுப்பதற்கு உரிய ஒழுக்காற்று உத்தியோகத்தர்களுக்கு அறிக்கையிட வேண்டும். |
| (iv) | அதிகாரச் சட்டத்தின் 7(2) இன் கீழ் பின்வரும் பணிகளான,<br>- வீதி கட்டமைப்புகள் அபிவிருத்தி மற்றும் பராமரிப்புக்காக செயல் நடவடிக்கை திட்டம் ஒன்றினை தயாரித்தல்<br>- அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு பணிகளின் இணைப்பு மற்றும் பராமரிப்பு<br>- செயற்திட்டத்தினை ஏதேனும் தரப்பினருக்கு ஒப்படைத்தல் மற்றும் கண்காணித்தல்<br>- வீதி அபிவிருத்தி செயற்திட்டங்களை பொறுப்பெடுத்து செயல்படுத்துவதற்கு பரிந்துரைத்தல். | இந்த நிறுவனங்களுக்கு தகுதியான மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்து நியமித்த பின்னர் இதில் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்ட வீதி கட்டமைப்பு இணைப்பு குழு நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. | சட்டம் அமுல்படுத்தப்பட்ட திகதியிலிருந்து மதியுரை சபை நிறுவப்படாது அதிகாரச் சட்டத்தின் 6(2) ஆம் பிரிவின் கீழான பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் பாராளுமன்றத்திற்கு அறிக்கையொன்றினை சமர்ப்பித்து, வழங்கப்படும் அறிவுரைக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பின்னதுவ முதல் கொட்டாவ வரையிலான வீதி மென்மையான தரைப்பகுதிகள் ஊடாக (Soft Ground Areas) செல்வதால், 07 வருடங்களின் பின்னர் நிலக்கீல் மேம்பாடு (Asphalt Overlaying) செய்யப்பட வேண்டும் என | தற்போது அதற்கான நிதி ஏற்பாடுகள் இல்லாததால், கொட்டாவ தொடக்கம் தொடங்கொடை வரையிலான இரண்டு வெளிப் பாதைகள் | தொழில்நுட்ப விவரக்குறிப்புகளின்படி பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, கூட்டிணைந்த திட்டங்கள், |

| | | |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட போதிலும், 2011 ஆம் ஆண்டு நிர்மாணப் பணிகள் நிறைவடைந்து 12 வருடங்களின் பின்னர் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தெரிவு செய்யப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, இந்த வருடத்தில் அச்சுக்கல் பதிக்கப்பட்டு புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. | செயல்நடவடிக்கைத் திட்டங்கள் மற்றும் வரவு செலவுத் திட்டங்களை தயாரிப்பதில் தொடர்புடைய விதிகள் சேர்க்கப்பட வேண்டும். |
| (இ) வீதிகள் கி.மீ. 100,000 செயற்திட்டத்தின் 2020 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டதுடன், 2020 நவம்பர் 26 ஆந் திகதிய அமைச்சரவைப் பத்திரம் எண் 47/2020 இன் படி, 2024 ஆம் ஆண்டின் இறுதிக்குள் செயற்திட்டத்தை நிறைவு செய்ய திட்டமிடப்பட்டது. செயற்திட்டத்தை செயல்படுத்த தேவையான நிதி வசதிகளை பெற்றுக்கொள்ளல், அனுபவம் வாய்ந்த, திறமையான ஒப்பந்ததாரர்களை தேர்வு செய்தல், கட்டுமான மேற்பார்வை நிபுணர்களை நியமித்தல், திட்டத்திற்கு தேவையான மூலப்பொருட்கள் கண்டறிதல் போன்ற சிரமங்களால் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட 17,847.14 கி.மீட்டர்களில் 11,549 கி.மீட்டர்கள் இடைநடுவில் நிறுத்தப்பட்டன. மீளாய்வாண்டின் இறுதிக்குள் வீதி நிர்மாணத்திற்கான செயற்திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 167,305.62 மில்லியன் ஆகும். | அனுபவம் வாய்ந்த மற்றும் திறமையான ஒப்பந்ததாரர்களைத் தேர்ந்தெடுப்பதில் உள்ள சிரமம் மற்றும் கட்டுமான மேற்பார்வைக்கு நிபுணர்களை நியமிப்பதில் உள்ள சிரமம் குறித்து தெரிவிக்கப்பட்ட கருத்துகளுடன் உடன்படவில்லை. நிதி வசதிகள் மற்றும் மூலப்பொருட்களைப் பெறுவதில் சிரமங்கள் இருப்பதைப் பற்றி கூறப்பட்ட விடயங்களுடன் இணங்குகின்றேன். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு சொந்தமான வீதிகளின் பணிகள் நிறைவு செய்யப்பட்டு அந்த நிறுவனங்களுக்கு முறையாக ஒப்படைக்க வேண்டும். பணிகள் நிறைவு செய்யப்படாத வீதிகள் குறைந்த பட்சம் தற்போதுள்ள ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படக்கூடிய நிலைக்கு மீட்டெடுக்கப்பட வேண்டும் அல்லது செயல்பாட்டிற்குப் பிறகு குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு முறையாக ஒப்படைக்கப்பட வேண்டும். |

### 3.3 பிரதான பணிகளுக்கு முரணாண செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வீதிகளை பிரித்தல் மற்றும் நீர்ப்பாசன வரைபடத்தினை தயாரித்தல் மற்றும் மேல், வடமேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களுக்கு தற்போது காணப்படும் நீர்ப்பாசன கட்டமைப்பு மற்றும் தேசிய GIS மாதிரியில் தேவையான நீர்ப்பாசன மேம்படுத்தல்களை இனம்காணல் தொடர்பிலான விபரங்களை சேகரிப்பதை நோக்காக கொண்ட போக்குவரத்து இணைப்புகள் மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவ | சாரதிகள் மற்றும் கெப் வண்டிகளை வழங்குவதற்கு செயற்திட்டத்தின் போக்குவரத்து தேவைப்பாட்டின் அடிப்படையில் செயல்திட்ட பணிப்பாளரால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட GIS மாதிரி வரைபடத்தினை பதிவேற்றுவதற்காக | விடயப்பரப்பிற்கு புறம்பாக விலகல் கட்டளையை அங்கீகரித்த உத்தியோகத்தர்கள் தொடர்பில் தாபன விதி கோவையின் II ஆம் பகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுகாற்று நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டத்திற்கு உரியதாக ED & PMC SKILLS JV கம்பனியுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் இலக்கம் 01, 02, 03 மற்றும் 06 ஆகிய விலகல் கட்டளைகளின் மூலம் சாரதி சம்பளங்களை செலுத்துதல் மற்றும் கெப் வண்டி ஒன்றினை பெற்றுக் கொள்வதற்காக ரூபா 10.79 மில்லியன் பணம் செலவிடப்பட்டுள்ளதுடன் அந்த செலவினம் செயற்திட்டத்தின் விடய பரப்பிற்கு உரித்தற்றது என்பது அவதானிக்கப்பட்டது. | (Upload) இந்த Data Server கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இது ஒப்பந்தத்தின் விடய பரப்பிற்கு உரித்தானது ஆகும். | எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 100,000 கிலோ மீட்டர்கள் மாற்று வீதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம் | | |
| (i) | 100,000 கிலோ மீட்டர்கள் மாற்று வீதிகள் செயற்திட்டத்தின் கீழ் வீதிகளை தெரிவு செய்வதற்காக 2020 பெப்ரவரி 13 ஆம் திகதிய අමප/20/0142/221/005 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்திற்கு உரிய 2020 ஜனவரி 14 ஆம் திகதிய 2020/01 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அளவீடுகளுக்கு முரணாக மேல் மாகாண செயற்திட்ட அலுவலகத்தினால் தெரிவு செய்யப்பட்ட வீதிகளுக்காக ரூபா 1,826.09 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான புள்ளிகளை வழங்கும் நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிராததுடன், செயல்திட்ட நோக்கத்திற்கு புறம்பாக பாடசாலை உள்ளக வீதிகள் மற்றும் வெளி வாரி இடங்களில், பூங்கா வளாகம், பள்ளிவாசல் விஹாரைகள், வீடமைப்பு தொகுதிகள், போலீஸ் நிலையம் மற்றும் இராணுவ முகாம் ஆகியவற்றுக்கு உரிய பொது இடங்கள் மற்றும் இந்த நிறுவனங்களுக்கு உரிய உள்ளக வீதிகள் அபிவிருத்தி பணிகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இந்த இடங்கள் நாட்டின் தேசிய பாதுகாப்பு சுற்றுலா கைத்தொழில் மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கு முக்கியமான மற்றும் பொதுமக்களின் வாழ்க்கையுடன் தொடர்புபடும் இடங்கள் என்பதால் அவை பொது இடங்களாக அபிவிருத்தி செய்வதற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஒரு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் குறித்த செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | அமைச்சரவைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோல்களைப் பொருட்படுத்தாமல் வீதிகளை அமைப்பதற்கு ஒப்புதல் அளித்த உத்தியோகத்தர்கள் தொடர்பில் தாபன விதி கோவையின் II ஆம் பகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுகாற்று நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 100,000 கிலோமீட்டர்கள் நீளமான வீதி செயற்திட்டத்தின் கீழ் அபிவிருத்திக்காக தெரிவு செய்யப்பட்ட போதிலும் இடை நடுவே நிறுத்தப்பட்ட வீதிகளை போக்குவரத்துக்கு ஏற்ற நிலைமைக்கு உள்ளாக்குவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும், அதற்கு முரணாக மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 2,891.24 மில்லியனான புதிய 212.30 கிலோ மீட்டர்கள் நீளமான வீதினை அபிவிருத்தி செய்வதற்கு தெரிவு செய்யப்பட்டிருந்தது. | பெரும்பாலான வீதிகள் போக்குவரத்துக்கு பொருத்தமான நிலைமைக்கு (Motorable Condition) உள்ளாக்குவதற்கு தெரிவு செய்யப்பட்டதுடன், அவற்றுடன் தொடர்புடைய சில வீதிகளின் பகுதிகள் (100,000 கிலோமீட்டர் செயல்திட்டத்திற்கு உரிய) போக்குவரத்துக்கு பொருத்தமான நிலையில் காணப்படாத காரணத்தால் அபிவிருத்தி செய்யும் தேவை எழுந்துள்ளது. | அமைச்சரவை அங்கீகாரத்திற்கு முரணாக செயல்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பில் தாபன விதி கோவையின் II ஆம் பகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுகாற்று நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 எதிர்பார்த்த பூர்த்தி மட்டம் அடையப்படாமை

ஒவ்வொரு செயல்திட்டத்திற்கும் தனிப்பட்ட முகாமைத்துவ அலகுகொன்று காணப்படாத (Separate Project Management Unit) நெடுஞ்சாலைகள் பிரிவின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட செயல்திட்டங்களில் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிறைவடைந்த ஆண்டுக்கான செயல் முன்னேற்றம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | வீதிகளை விஸ்தரித்தல் மற்றும் மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டம் (Widening and Improvement of Roads) இன் கீழ் 132 கிலோமீட்டர்களை மேம்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்ததுடன், 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்காக 27.32 கிலோமீட்டர் வீதி அதாவது எதிர்பார்க்கப்பட்ட அளவில் 21 சதவீதமும் 04 பாலங்களும் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தன. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | எதிர்பார்த்த பூர்த்தி மட்டத்தினை செயற்திறனாக அடைய வேண்டும். |
| (ஆ) | கிராமிய பாலங்கள் செயற்திட்டம் | | |
| (i) | 2021 ஆம் ஆண்டில் 466 கிராமிய பாடங்களை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்ததுடன், 2023 ஜூன் 30 ஆம் திகதி அளவில் முழுமையாக பணிகள் நிறைவு செய்யப்பட்ட பாலங்களின் எண்ணிக்கை 84 மாத்திரம் ஆகும். அது ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட | 2021 முதல் காலப்பகுதியினுள் ஆரம்பிக்கப்பட்ட 84 பாலங்களை மாத்திரம் நிர்மாணிக்க தீர்மானித்த காரணத்தால் பணிகள் நிறைவு செய்யப்பட்ட எஞ்சிய பாலங்களிடையே முன்னுரிமை அடிப்படையில் | எதிர்பார்த்த பூர்த்தி மட்டத்தினை செயத்திறனாக அடைந்து கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மொத்த செயத்திட்டங்களின் எண்ணிக்கையில் 18 சதவீதமான குறைந்த விதத்தினை கொண்டிருந்தது. | காணப்பட்ட பாலங்களை மாத்திரம் நிர்மாணித்த காரணத்தால் புதிய மதிப்பீட்டின் கீழ் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட 271 கிராமிய பாலங்களின் உடன்படிக்கைகள் இரத்து செய்யப்பட்டிருந்ததுடன் அது மொத்த பாலங்களின் எண்ணிக்கையில் 58 சதவீதமான உயர் அளவினை கொண்டிருந்தது. இவ்வாறு உடன்படிக்கை இரத்து செய்யப்பட்டிருந்த 97 பாலங்களின் நிர்மாண ஒப்பந்ததாரர்களுக்கு 2023 ஜூன் 30 ஆம் திகதியில் உள்ள படியாக ரூபா 333 மில்லியன் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இன் பிரகாரம் செலவின கட்டுப்பாட்டுகள் தொடர்பிலான பிரமாணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், புதிய செயற்திட்டங்களை தற்காலிகமாக இடை நிறுத்துமாறு கூறப்பட்டுள்ளது. | எதிர்பார்த்த அடைவு மட்டத்தினை செயத்திறனாக அடைந்து கொள்ள வேண்டியதுடன், சிறந்த முகாமைத்துவத்துடன் நிதி ஏற்பாட்டினை பெற்றுக் கொள்வதுடன் செலவிடப்பட வேண்டும். |
| (iii) | தற்போது நடைமுறையில் உள்ள கிராமிய வீதி நிர்மாண செயல்திட்டங்களின் எண்ணிக்கை 111 ஆக காணப்பட்டதுடன் அவற்றுள் 60 பாலங்களின் செயல் முன்னேற்றம் 50 சதவீதத்திற்கும் குறைவான மட்டத்திலும் 51 பாலங்களின் செயல் முன்னேற்றம் 51 - 100 சதவீதத்திற்கு இடைப்பட்டதாகவும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | தேசிய வரவு செலவு திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இன் பிரகாரம் கிராமிய பாலங்கள் நிகழ்ச்சி திட்டத்தினை மறுசீரமைப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.<br><br>அதற்கமைய உயர்வான முன்னுரிமை உடைய 112 பாலங்கள் மாத்திரம் பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது | எதிர்பார்த்த பூர்த்தி மட்டத்தினை செயத்திறனாக அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். திறனின்மை தொடர்பில் பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தர்களை இனம் கண்டு அதற்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.5 எதிர்பார்த்த பெறுபேறுகளை (Outcome) பெற்றுக்கொள்ளாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொழும்பை அண்மித்த புகையிரத செயற்திட்டம் (Colombo Suburban Railway Efficiency Improvement Project)<br>எதிர்வரும் 20 வருட காலப்பகுதிக்காக இந்நாட்டு புகையிரத சேவையின் தேசிய போக்குவரத்து கட்டமைப்பிற்கு வழங்க வேண்டிய பங்களிப்பினை இனம்கண்டு அதற்காக கொழும்பு | | |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் காணப்படும் புகையிரத வீதி கட்டமைப்பினை அபிவிருத்தி செய்தல் இந்த செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாக காணப்பட்டது. 3425 ஆம் இலக்கமுடைய கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயல்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 1,654.54 மில்லியனுக்கு சமனான 11.36 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாக காணப்பட்டதுடன், அவற்றுள் ரூபா 1,454.50 மில்லியன் தொகைக்கு சமனான 9.99 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொல்களை நிதியீட்டம் செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கி இருந்தது. செயற்திட்டத்தினால் அதன் பணிகள் 2016 அக்டோபர் 28 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2022 திசெம்பர் 31 ஆம் திகதி அளவில் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (I) | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக ஆசிய அபிவிருத்தி வங்கியால் ரூபா 1,551.36 மில்லியனுக்கு சமமான 8.52 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்ததுடன், அந்தத் தொகையில் 95 சதவீதமான ரூபா 1,469.05 மில்லியன், சாத்தியவளக் கற்கைகள் மற்றும் விரிவான திட்டங்களுக்கான மதியுரை சேவைகளுக்காக செலவிடப்பட்டிருந்தது. 2021 மார்ச் மாதத்தில் இந்த செயற்திட்டத்திற்கு உரிய சாத்தியவளக் கற்கைகள் மற்றும் விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வரிசை அமைச்சுக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் புகையிரத கட்டமைப்பு அபிவிருத்தி செய்யும் எஞ்சிய நடவடிக்கைகளுக்காக அந்த அறிக்கையை பயன்படுத்துதல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | சாத்திய வள கற்கைகளை மேற்கொண்டுள்ள செயல்திட்டங்களை அரச முதலீடுகள் நிகழ்ச்சி திட்டத்திற்கு உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(II) களனி வெளி புகையிரத வீதியில் புகையிரத நுழைவு உரித்துக்குரிய பிரதேசத்தில் வாழும் குடும்பங்களை மீள்குடியேற்றல்

களனி வெளி புகையிரத வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக களனி வெளி புகையிரத நுழைவு உரித்தினுள் (RoW) வாழும் குடும்பங்களை மீளக்குடியமர்த்துவதற்கு தேவையான வீட்டு அலகுகளை நகர அபிவிருத்தி அதிகார சபையில் களனி வெளி புகையிரத வீதிக்கு அண்மித்ததாக 07 வீடமைப்பு தொகுதிகளில் 1,244 வீட்டு அலகுகள் ரூபா 5,412 மில்லியன் தொகைக்கு கொள்வனவு செய்வதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. அவற்றுள் 694 வீட்டு அலகுகளின் நிர்மாணங்கள் நிறைவு செய்யப்பட்டு திட்டத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் இந்த ஆண்டினுள் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ள எஞ்சிய 550 வீட்டு அலகுகளின் நிர்மாணங்கள் தொடர்ந்தும் இடம்பெற்றவாறு காணப்பட்ட காரணத்தால் அந்த வீடுகள் இதுவரையில் செயற்திட்டத்திற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| (i) புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் முறையே கொழும்பகே மாவத்த - நாவல கட்டம் 02 வீடமைப்பு தொகுதியின் 144 வீட்டு அலகுகள் மற்றும் கொழும்பகே மாவத்த - நாவல கட்டம் 01 வீடமைப்பு தொகுதியின் கீழ் 406 வீட்டு அலகுகள், 2024 மார்ச் 24 ஆம் திகதியில் உள்ளபடியாக வழங்குவதற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், 2023 திசெம்பர் 31 ஆம் திகதி அளவில் ரூபா 501.8 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2024 பெப்ரவரி 15 ஆம் திகதியில் உள்ளபடியாக இந்த வீட்டு | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் உரிய முறையில் வீடுகளைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். திட்டமிடப்பட்ட காலப்பகுதியினுள் செயற்திட்ட நடவடிக்கைகளை நிறைவு செய்தல் தொடர்பில் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் கீழான |

| | | | |
|---|---|---|---|
| | அலகுகளின் கட்டுமானங்களின் பௌதிக முன்னேற்றம் முறையே 80 சதவீதம் மற்றும் 39 சதவீதமாக காணப்பட்ட காரணத்தால் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட திகதியில் இந்த 550 வீட்டு அலகுகளை ஒப்படைக்க முடியாத நிலையில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | | கட்டமைப்புகளின் மீளாய்வின் போது விசேட கவனம் செலுத்தப்பட்டு எழுத்து மூலமாக அறிவுரைகள் வெளியிடப்பட வேண்டும். |
| (ii) | தற்போது தற்காலிகமாக நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ள நாவல கட்டம் 01 வீடமைப்புத் தொகுதியின் எதிர்கால திகதியொன்றில் விலை விலகல்களை சீராக்கிய பின்னர் வீட்டு அலகுகளின் விலைகளை தீர்மானிப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையினால் தீர்மானிக்கப்பட்டிருந்த காரணத்தால், உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட வீட்டு அலகொன்றில் ரூபா 5 மில்லியன் படியாக வீட்டு அலகுகளுக்கு ரூபா 10 மில்லியன் வரையிலும் விலை அதிகரிக்கும் அபாயம் காணப்பட்டது. அதன் போது 2018 ஆம் ஆண்டில் நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்த ஆரம்ப உடன்படிக்கையின் பிரகாரம் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட திகதியிலிருந்து 02 வருடங்களில் வீடுகளை நிர்மாணித்து நிறைவு செய்து செயத்திட்டத்தினை கையளிக்க வேண்டிய போதிலும் நிர்மானங்கள் தாமதமாகும் சந்தர்ப்பங்களில் மீண்டும் மீண்டும் காலம் நீடிப்புச் செய்யப்பட்டு புதிய புரிந்துணர்வு உடன்படிக்கைகளுக்கு கைச்சாத்திடப்பட்ட காரணத்தால் 06 வருடங்கள் கடந்திருந்த போதிலும் இதுவரையிலும் நிர்மாணங்கள் முழுமையாக நிறைவு செய்யப்பட்டிராத காரணத்தால் புகையிரத வீதியின் புகையிரத பிரவேச உரித்தில் வாழும் குடும்பங்களை மீள குடியமர்த்துவதற்கு உரிய நடவடிக்கைகள் தொடர்ந்தும் தாமதமடைவதுடன் இதன் காரணமாக கொழும்பை அண்டிய பிரதேசத்தில் காணப்படும் புகையிரத வீதி கட்டமைப்பினை அபிவிருத்தி செய்தல் தொடர்ந்தும் | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட காலத்தினுள் திட்டமிடப்பட்ட பணிகளை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் கீழான கட்டமைப்புகளின் மீளாய்வின் போது விசேட கவனம் செலுத்தப்பட்டு எழுத்து மூலமாக அறிவுரைகள் வெளியிடப்பட வேண்டும். |

தாமதமடைந்தவாறு காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) நாடளாவிய புகையிரத தொடர்பாடல் கட்டமைப்பினை மேம்படுத்தும் செயற்திட்டம்

கொழும்பை அண்டிய புகையிரத செயற்திறனை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் ஆரம்ப பூர்த்தி இலக்குகளாக புகையிரத தொழிற்பாட்டு செயற்திறனை அபிவிருத்தி செய்தல் முன்னுரிமை தேவைப்பாடாக இனம் காணப்பட்டு நிறுவப்பட்டிருந்த புகையிரத தொடர்பாடல் கட்டமைப்பினை மேம்படுத்தும் உப செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு, சர்வதேச விலை கேள்வி கோரப்பட்டு தனியார் கம்பனி ஒன்றுக்கு 7.49 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு இருந்தது. அத்துடன் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் 7.18 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் (ரூபா 1,901.27 மில்லியன்) தொகை செயற்திட்டத்திற்கு செலவிடப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தினை பூர்த்தி செய்து 2021 அக்டோபர் மாதமளவில் புகையிரத திணைக்களத்திற்கு கையளிக்கப்பட வேண்டும். ஒட்டுமொத்த செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட பெறுமதியான 11.16 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களில் 9.70 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் ஆசியா அபிவிருத்தி வங்கியினாலும், இலங்கை குடியரசின் நிதியத்தின் மூலம் ஐக்கிய அமெரிக்க டாலர் 1.46 மில்லியனும் நிதியீட்டுவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் இந்த உப செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் முகவர் ஆக போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சும் செயற்த்திட்டதினை நிறுவுவதற்கான முகவராக இலங்கை புகையிரத

திணைக்களமும் செயல்திட்ட முகாமைத்துவ அலகாக கொழும்பு நகரை அண்டிய புகையிரத செயல்திட்டம் ஆகியவை செயல்பட்டிருந்தன. இதன் கீழ் மக்களுக்கு மிகவும் செயற்திறனான புகையிரத சேவைகளை பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| (i) | புகையிரத இன்ஜின்களில் பொருத்துவதற்கு காணப்பட்ட ரூபா 274.15 மில்லியன் கிரய பெறுமதியுடைய தொடர்பாடல் உதிரி பாகங்களின் ஊடாக கடவுச் சொற்களை பயன்படுத்தி புகையிரத சாரதிகள் தொடர்பாடல் கட்டமைப்பிற்கு பிரவேசிக்க வேண்டியதாக காணப்பட்டதுடன் அதன் மூலம் புகையிரத கட்டுப்பாட்டு நிலையம் மற்றும் புகையிரத நிலையங்களின் புகையிரத போக்குவரத்து தொடர்பிலான தகவல்கள் இற்றைப் படுத்தப்படும். புகையிர பொது முகாமையாளரின் 2023 மே 02 திகதிய 09 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து பயன்படுத்துனர்களாலும் அவர்களுக்கு உரிய உள்ளீட்டு கடமை நேரங்களில் செயல்படுத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், புகையிரத சாரதிகள் அதற்கு முரணாக தமது விருப்பத்திற்கு இணங்க செயல் பட்டு உதிரி பாகங்களை பயன்படுத்தி கட்டமைப்பிற்கு பிரவேசிக்கவில்லை என்பது கணக்காய்வு பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது. தொடர்பாடல் உதிரி பாகங்களை தண்ணியக்கமாக பயன்படுத்துதல் தொடர்பில் உரிய கம்பனிக்கு மாதாந்த பராமரிப்பு அறிக்கை பிரகாரம் மேற்படி உபகரணங்களை பயன்படுத்திய சதவீதம் சராசரியாக 11 சதவீதம் மாத்திரம் ஆக காணப்பட்டது. அப்போது பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் மற்றும் ஏனைய காரணங்களின் அடிப்படையில் சில புகையிரத என்ஜின்களில் காணப்பட்ட இந்த | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளீடுகளை பயன்படுத்துவதற்கு உரிய நடைமுறைகள் தயாரிக்கப்பட வேண்டும். அந்த நடைமுறைகளை பின்பற்றாத உத்தியோகத்தர்கள் தொடர்பில் தாபன விதி கோவையின் II ஆம் பகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுகாற்று நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணங்கள் மற்றும் உதிரி பாகங்கள் உடைந்திருந்ததுடன் அவற்றை திருத்தியமைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதும் சில புகையிரத என்ஜின்களில் பொருத்தப்பட்டிருந்த உதிரி பாகங்களின் கடவுச்சொற்கள் தொடர்பில் சிக்கல்கள் காணப்படுகின்ற காரணத்தால் உபகரணங்களை உரிய முறையில் செயல்படுத்த முடியாது உள்ளதாகவும் சில உபகரணங்களின் ஒரு பகுதி மாத்திரம் புகையிரத இன்ஜின்களில் பொருத்தப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | | |
| (ii) | புகையிரத கண்காணிப்பு உத்தியோகத்தர்கள், புகையிரத நிலைய அதிபர்கள் மற்றும் ஜன்டின் கடமைகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்காக ரூபா 131.79 மில்லியன் கிரய பெறுமதி கொண்ட 1,951 கையடக்க தொலைபேசிகள் செயற்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்ததுடன், அதன் மூலம் உத்தியோகத்தர்கள் இடையே புகையிரத நிலையங்களுக்கு இடையே மற்றும் கட்டுப்பாட்டு நிலையத்துடன் தகவல் பரிமாற்றம் மேற்கொண்டு புகையிரத போக்குவரத்து தொடர்பான தகவல்கள் இற்றைப்படுத்தப்பட வேண்டிய போதிலும், கடமை நடவடிக்கைகளுக்காக அந்த தொலைபேசிகளின் பயன்பாடு ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்படுவதாகவும் இதன் காரணமாக புகையிரத சேவைக்கு பொருத்தமான வகையில் அந்த தொலைபேசி இணைப்புகளில் காணப்படும் தொழில்நுட்ப சிக்கல்கள் மற்றும் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய புதுப்பிப்புக்கள் மற்றும் மேம்படுத்தல்கள் என்ன என்பது இனம் காண முடியாது உள்ளதாகவும் அவதானிக்கப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | தொழில்நுட்ப உதிரி பாகங்களின் பயன்பாடு தொடர்பிலான நடைமுறைகள் தயாரிக்கப்பட்டு உரிய நோக்கங்களுக்கு பயன்படுத்தப்பட வேண்டும். கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் கீழான கட்டமைப்பு மீளாய்வின் போது விசேட கவனம் செலுத்தப்பட்டு எழுத்து மூலம் அறிவுரை வெளியிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | புகையிரத நிலையங்கள், சமிச்ஞை கூடங்கள் புகையிரத கடவைகள் ஆகியவற்றுக்காக ரூபா 71.91 மில்லியன் கிரயமான நிலையான தொலைபேசிகள் மற்றும் உதிரி பாகங்கள் பொருத்தப்பட்டு அதன் மூலம் புகையிரத கடமைகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் புகையிரத நிலையங்கள் கட்டுப்பாட்டு நிலையம் ஆகியவற்றுக்கு இடையே தொடர்பாடல் நடவடிக்கைகளை பேணி செல்வதற்கு உத்தேசிக்கப்பட்டது. தொழில்நுட்ப கோளாறு மற்றும் செயற்பாட்டு நலிவுகளின் காரணமாக செயற்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தொலைபேசிகளின் எண்ணிக்கையில் 40 சதவீதம் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்ட காரணத்தால் அந்த உதிரி பாகங்களின் செயல் திறனான பயன்பாடு இடம்பெறுவது இல்லை என்பது அவதானிக்கப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் உச்ச செயற்திறனுடன் பயன்படுத்தப்பட வேண்டும்.<br><br>பொறுப்புகளை புறக்கணித்து செயற்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பில் தாபன விதி கோவையின் II ஆம் பகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுகாற்று நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | செயற்திட்டத்தின் கீழ் புகையிரத கட்டுப்பாட்டு நிலையத்திற்காக கிரயம் ரூபா 8.16 மில்லியன் தொகையான டிஸ்பேச்சர் உதிரி பாகங்கள் மூலம் ஏனைய தொலைபேசிகளின் ஊடாக வழங்கப்படும் தகவல்களின் அடிப்படையில் கட்டுப்பாட்டு நிலையங்களில் புகையிரத போக்குவரத்து உள்ளடங்களாக தகவல்களை நாளதுவரையாக்குதல் இடம்பெற வேண்டிய போதிலும், கணக்காய்வு சந்தர்ப்பம் வரையிலும் புகையிரத சாரதிகள் செயத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்த உதிரி பாகங்களை பயன்படுத்தாத காரணத்தால் அனைத்து புகையிரத கட்டுப்பாட்டு மத்திய நிலையங்களிலும் இந்த உதிரி பாகங்கள் செயற்பாடற்று காணப்பட்டன. மேலும் பிரதான புகையிரத செயற்பாட்டு நிலையத்திற்காக முறையே ரூபா 7.99 மில்லியன் மற்றும் ரூபா 53.47 மில்லியன் செலவிடப்பட்டு வழங்கப்பட்டிருந்த System monitoring Device (SMD) மற்றும் | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் உச்ச செயற்திறனுடன் பயன்படுத்தப்பட வேண்டும்.<br><br>பொறுப்புகளை புறக்கணித்து செயற்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பில் தாபன விதி கோவையின் II ஆம் பகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுகாற்று நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | Voice Recording Device (VRD) ஆகிய கருவிகள் புகையிரத சாரதிகளால் கட்டுப்பாட்டிற்கு பிரவேசிக்க பயன்படுத்தாத காரணத்தால் தொடர்பாடல் கட்டமைப்பு செயல்படுத்தப்படாமையால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதிருந்தது. | | |
| (v) | உடன்படிக்கையின் பிரகாரம் கம்பனியால் நாடளாவிய ரீதியில் புகையிரத வீதி கட்டமைப்புகளை உள்ளடக்கும் வகையில் தொடர்பாடல் வலையமைப்பொன்றினை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், மலைநாட்டு புகையிரத வீதிகளில் ஒஹிய முதல் பட்டிபொல புகையிரத நிலையம் வரையான 12.5 கிலோமீட்டர் மற்றும் புகையிரத வீதி கட்டமைப்புக்கு உரிய சுரங்கங்களின் அண்மையில் காணப்படும் வலயங்களையும் உள்ளடக்கும் வகையில் தொடர்பாடல் கட்டமைப்பினை நிறுவுவதற்கு கம்பனியினால் இதுவரையிலும் நடவடிக்கை எடுத்திராத காரணத்தால் நாடளாவிய ரீதியில் தொடர்ச்சியான தொடர்பாடல் கட்டமைப்பினை நிறுவி இருக்கவில்லை. இதன் காரணமாக மேற்குறிப்பிடப்பட்ட வலயங்களில் தொடர்பாடல் கட்டமைப்பு செயல்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட காலத்தினுள் திட்டமிடப்பட்ட பணிகளை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (vi) | தொடர்பாடல் கருவிகள் மற்றும் உதிரி பாகங்களை திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்ட திகதியிலிருந்து 03 வருட உத்தரவாத காலமும் உள்ளடங்களாக 09 வருட சேவைக்கால உடன்படிக்கையினுள் பராமரிப்பு மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு உரியதாக வழங்கல் நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், தொடர்பாடல் உபகரணங்களின் பயன்பாட்டின் | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | உத்தரவாத காலத்தினுள் உரிய பராமரிப்பு மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு உரியதாக வழங்குநர் நிறுவனத்திடம் இருந்து நிறைவேற்றிக் கொள்ள முடியாமை தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களை இனம் காணுவதற்கும் |

| | | | |
|---|---|---|---|
| | போது ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறுகள் மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பில் புகையிரத திணைக்களத்தினால் அந்த நிறுவனத்திற்கு அறிவிக்காத காரணத்தால் சேவை படுத்தல் மற்றும் பராமரிப்பு உடன்படிக்கையின் பிரகாரம் உதிரி பாகங்களின் உத்தரவாத காலத்தினுள் இடம்பெறும் குறைபாடுகள் தொடர்பில் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்த நலன்களை இழக்க கூடிய அபாயம் காணப்பட்டது. | | அரசிற்கு ஏதேனும் நட்டம் ஒன்று ஏற்பட்டிருப்பின் அதனை அறவிடுவதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (vii) | இந்தக் கட்டமைப்பின் பராமரிப்பு மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் இலங்கை புகையிரத சேவைக்கு பொறுப்பேற்கப்பட்ட சந்தர்ப்பத்தில் தடையின்றி அந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்காக, கட்டமைப்புகள் அமைப்பு குறிப்பிடுகளின் தேவைப்பாடுகளுக்கு அமைய திட்டமிடப்பட்டு பொருத்தமான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியொன்று புகையிரத சேவைக்கு இணைப்புச் செய்வதற்கு இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிராத காரணத்தால், இந்த தொடர்பாடல் கட்டமைப்பு செயத்திறனாகவும் தொடர்ச்சியாகவும் நடைமுறைப்படுத்தல் தொடர்பில் சான்றுபடுத்தும் பொருட்டு பொருத்தமான உள்ளக கட்டுப்பாடுகளை நிறுவுதல் தொடர்பில் ஆரம்ப கண்காணிப்பு நடைமுறை ஒன்றினை போன்று பொருத்தமான பதவியணி ஒன்று திணைக்கள மட்டத்தில் இனம் காணப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.<br><br>அதற்கமைய தொடர்பாடல் கட்டமைப்பினை செயல்படுத்துவதன் ஊடாக எதிர்பார்க்கப்பட்ட சர்வதேச நியமங்களுக்கு இணைவாக இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குறுத்துகை ஆணைக்குழுவின் (TRC) மூலம் விதிக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க புகையிரத தொடர்பாடல் கட்டமைப்பினை உருவாக்குதல், | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) ஆம் பிரிவின் கீழான கட்டமைப்புகளின் மீளாய்வின் போது இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

மணித்தியாலத்திற்கு 120 கிலோமீட்டர் அல்லது அதனிலும் அதிகமான வேகமுடைய புகையிரதத்துடன் பொதுமக்களுக்கு மிகவும் செயற்திறனான புகையிரத சேவையினை வழங்குவதற்கு ரூபா 1,901.27 மில்லியன் கிரயத்துடன் நிறுவப்பட்ட புதிய புகையிரத தொடர்பாடல் கட்டமைப்பிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்படவில்லை என்பதும், தற்போது வரையிலும் நடைமுறைக்கு சாத்தியமான பயன்பாடு தோல்வியடைந்தமையின் காரணத்தால் அதன் மூலம் புகையிரத தொழிற்பாடுகளின் செயற்திறனை அதிகரிக்கும் இலக்கிடப்பட்ட அடைவு மட்டத்தினை அடைந்து கொள்ள முடியாது உள்ளமை அவதானிக்கப்பட்டது.

## 3.6. செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்யாது கைவிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கண்டி சுரங்க வீதி நிர்மாணித்தல் செயற்திட்டம்<br><br>பல வருடங்கள் தொட்டு கண்டு நகரில் காணப்படும் அதிக வாகன நெருக்கடிக்குத் தீர்வாக தன்னேகும்புர மற்றும் சுதுஹும்பொல இடையே 4.36 கிலோ மீட்டர் தூரத்தினைக் கொண்ட 04 சுரங்கப் பாதைகள், 03 பாலங்கள் மற்றும் 04 இடைமாறல்களைக் கொண்ட 5.56 கிலோ மீட்டர் நீளத்தினைக் கொண்ட 04 வழிச்சாலை வீதி ஒன்றினை 58 மாதங்களில் நிர்மாணிப்பதற்காக EDCF - கொரிய நிதி முகவர் நிறுவனத்துடன் 252.3 ஐக்கிய அமெரிக்க டொலர்கள் அதாவது இலங்கை ரூபா. 50,461 மில்லியன் செலவில் 2021 செப்டம்பர் மாதம் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் இந்த செயற்திட்டம் இரத்துச் செய்யப்பட்டு வேறு உயர் முன்னுரிமை செயற்திட்டத்திற்கு நிதி ஒதுக்குமாறு | | |

| | | | |
|---|---|---|---|
| | 2017 ஓகஸ்ட் 21 ஆம் திகதி பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவைக் குழுவினால் கோரப்பட்டிருந்தது என்பதால் அதுவரையில் செயற்திட்டம் செயலற்றுக் காணப்பட்டது. பின்னர், செயற்திட்டம் மற்றும் அதன் செயல்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் கண்டி சுரங்க வீதி நிர்மாணிப்பு செயறிதிட்டத்தின் சுற்றாடல் தாக்கங்களை மதிப்பீடு செய்வதற்காக (Environmental Impact Assessment) 2021 மார்ச் 25ஆம் திகதி வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் பேராதெனிய பல்கலைக்கழகத்துடன் உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. | | |
| (i) | 2017 ஆம் ஆண்டு தொடக்கம் செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான பின்புல வேலை நடவடிக்கைகள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் சுற்றாடல் தாக்க மதிப்பீடு மட்டும் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் மொத்த ஒப்பந்த பெறுமதியான ரூபா. 95.75 மில்லியனில், ரூபா. 78.36 மில்லியன் தொகை பேராதனை பல்கலைக்கழகத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. நாட்டில் நிலவிய சீரற்ற நிலைமையின் அடிப்படையில் கள நடவடிக்கைகள் தாமதமடைந்தமை, எரிபொருள் தட்டுப்பாட்டின் அடிப்படையில் துளை ஆய்வு நடவடிக்கைகளுக்கு (bore exploration process) தடை ஏற்பட்ட காரணத்தினால் 03 சந்தர்ப்பங்களில் இந்த ஒப்பந்தக் காலம் நீடிக்கப்பட்டு (EOT) இருந்தது. | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுடன் இணங்குகின்றேன். | சாத்தியக்கூறு ஆய்வு பூர்த்தி செய்யப்பட்டுள்ள செயற்திட்டங்கள் தேசிய அபிவிருத்தித் திட்டத்தில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |
| (ii) | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்படுதல், மீள் குடியேற்றத்திற்கான செயல்பாட்டு திட்டத்தினைத் தயாரித்தல் மற்றும் செயற்திட்ட நிர்வாக நடவடிக்கைகளுக்கு மொத்தமாக ரூபா. 90.75 மில்லியன் செலவில் உள்நாட்டு நிதியத்தின் மூலம் செலவிடப்பட்டிருந்ததுடன் 2.9 சதவீதமான பௌதீக முன்னேற்றம் மட்டுமே எட்டப்பட்டிருந்தது. | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுடன் இணங்குகின்றேன். | உடன்படிக்கைக்கு அமைய குறித்த நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | காணியினைக் கையகப்படுத்துதல், ஆலோசனை நடவடிக்கைகள் மற்றும் சிவில் வேலைகள் என்பவற்றை 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை நடவடிக்கைகளேனும் இதுவரையில் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை. | சுற்றாடல் ஆய்வு அறிக்கையின் இறுதி வரைவு மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடம் 2023 நவம்பர் மாதம் 8 ஆம் திகதி அனுப்பப்பட்டுள்ளது. | சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கைக்கு விரைவில் அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (iv) | 2023 திசெம்பர் 19 ஆம் திகதி இடம்பெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்ட அறிக்கை மற்றும் 2023 திசெம்பர் 04 ஆம் திகதி இடப்பட்ட தேசிய செயற்பாட்டுக் குழு கூட்டம் (National Operating Room (NOR) Committee Meeting என்பவற்றுக்கு அமைய, நாட்டில் நிலவும் மோதல் நிலைமை மற்றும் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக செயற்திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. அதற்கு அமைய இந்த செயற்திட்டத்திற்காக தற்போது வரையில் செலவிடப்பட்டுள்ள ரூபா. 90.50 மில்லியன் மொத்த செலவும் பயனற்ற செலவாகி உள்ளமை அவதானிக்கப்பட்டது. | அதற்காக செலவிடப்பட்டுள்ள மொத்த செலவும் பயனற்ற செலவாக ஏற்றுக் கொள்ள முடியாது என்பதும் அது நாட்டிற்கு எதிர்கால முதலீடாக அறிமுகப்படுத்தக் கூடியதாகும். | சுற்றாடல் ஆய்வு அறிக்கை வேலைகள் பூர்த்தி அடைந்ததன் பின்னர் தேசிய அபிவிருத்தித் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் கொழும்பு - இரத்தினபுரி - பெல்மதுல்ல அதிவேக வீதி செயற்திட்டத்திற்காக ரூபா. 10,258.71 மில்லியனும், புதிய களனி பாலம் தொடக்கம் அத்ருகிரிய வரையான தூண்கள் மீது நிர்மாணிக்கப்படும் அதிவேக வீதி செயற்திட்டத்திற்காக ரூபா. 1,239.6 மில்லியனும் உள்நாட்டு நிதியத்தின் மூலம் செலவிடப்பட்டிருந்ததுடன் மத்திய அதிவேக வீதி செயற்திட்டம் - 04 பகுதியும் பூர்த்தி செய்யப்படாது நிர்மாண நடவடிக்கைகள் கைவிடப்பட்டு இருந்தது. | பாரிய அளவிலான அபிவிருத்தி செயல் திட்டங்களை மறு திட்டமிடல் மற்றும் துரிதப்படுத்துதல் அதிகாரங்களைக் கொண்ட உத்தியோகத்தர் குழுவின் (RAMP) கலந்துரையாடலின் பெறுபேறாக இந்த மூன்று செயற்திட்டங்களையும் தற்காலிகமாக இடை நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. | மேற்கொள்ளப்பட்ட செலவுகளுக்கான பொருளாதார பலன்கள் ஏற்படும் என்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும். |
| (இ) | வரையறுக்கப்பட்டு அதிவேக வீதி போக்குவரத்து (தனியார்) நிறுவனம்<br><br>1981 இன் 73 இலக்க வீதி அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் கீழ் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் பேருந்து நிறுவனத்தினைப் பேணிச் செல்லுதல் பொருத்தமான விடயமாக இல்லாத போதிலும், பேருந்துக்களை | கருத்து தெரிவிக்கப்பட்டு இருக்கவில்லை. | அமைச்சரவைத் தீர்மானத்திற்கு முரணாக நிறுவனத்தினை ஆரம்பித்து செயல்படுத்துதல் மற்றும் பலவீனமான முகாமைத்துவம் தொடர்பில் |

| | | |
|---|---|---|
| ஈடுபடுத்துவதன் மூலம் அதிவேக வீதிகளில் பயணிகள் போக்குவரத்து தொடர்பான செயற்திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு முழுமையான உரிமைத்துவத்தினைக் கொண்ட நிறுவனமாக 2007 இன் 07 ஆம் இலக்க நிறுவன சட்டத்தின் கீழ் 2014 மே 06 ஆம் திகதி வரையறுக்கப்பட்ட அதிவேக வீதிப் போக்குவரத்து (தனியார்) நிறுவனம் கூட்டிணைக்கப்பட்டிருந்தது. எனினும், இந்த நிறுவனம் தோல்வியடைந்த காரணத்தினால் அந்த பேருந்துக்கள் இலங்கை போக்குவரத்து சபையிடம் ஒப்படைக்கப்பட்டு நிறுவனத்தினைக் கலைப்பதற்கு 2023 மார்ச் 23 ஆம் திகதி இலக்கம் 23/0394/608/033 கொண்ட அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டிருந்தது. | | பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களை இனம் கண்டு தாபன விதிக் கோவையின் II ஆம் பகுதியில் XLVII ஆம் அத்தியாயத்தில் 8 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 3.7. செயற்திட்டத்தினை நிறைவேற்றுவதிலான தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொழும்பு தேசிய நெடுஞ்சாலைகள் புனர்நிர்மாணம் மற்றும் மேம்பாட்டு செயற்திட்டம் | | |
| (i) | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியிடப்பட்ட முன்னேற்ற அறிக்கைக்கு அமைய, ஒருகொடவத்த அம்பத்தல வீதியின் II ஆம் கட்ட பகுதியினை நிறைவு செய்யும் கால எல்லையில் இருந்து 2 வருடங்கள் கடந்திருந்த போதிலும், ஒப்பந்தம் இன்னமும் 94.2 சதவீத முன்னேற்றத்தினை மட்டுமே பெற்றுக் கொண்டிருந்ததுடன், கால நீடிப்பு இன்றி செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு இருந்தது. | குறித்த செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையில் (தே. நீ.வ.ம.வ.ச.) புதிதாகக் குழாய் பொருத்தும் செயற்திட்டம் காரணமாக தாமதம் அடைந்திருந்ததுடன் கால நீடிப்புக்கான பெறுகை நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | உடன்படிக்கைக் காலம் முடிவடைவதற்கு முன்னர் முறையான அதிகாரம் கொண்ட அதிகாரிகளினால் குறித்த ஒழுங்கு முறைகளைப் பின்பற்றி உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ii) | ஆகக் குறைந்த விலை மனுவினைச் சமர்ப்பித்திருந்த மனுதாரரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலை மனு ஆவணத்திற்கு அமைய, மத்திய வீதி செயற்திட்டம் - 2 பகுதி மற்றும் தெற்கு அதிவேக வீதி விரிவாக்கம் | ரூபா. 1,061.51 மில்லியன் விலை மனுவை சமர்ப்பித்திருந்த நிர்மாண நிறுவனம் அதிவேக வீதி நிர்மாணம் தொடர்பான அனுபவத்தினை விலை | விலை மனுவை நிராகரிக்கும் போது குறித்த ஒழுங்கு விதிகளினுள் நடவடிக்கை எடுக்கப்பட்ட முறை |

| | | |
|---|---|---|
| போன்ற அதிவேக வீதி நிர்மாணிப்பில் அனுபவங்கள் அவர்களுக்கு இருந்த போதிலும் பௌதீக அளவு, சிக்கல்கள், முறைமைகள் மற்றும் தொழில்நுட்பம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட சமாந்தர செயற்திட்ட அனுபவம் இல்லை எனக் கருதி தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு ரூபா. 1,061.59 மில்லியனான விலை மனுவினை நிராகரித்திருந்தது. அதற்கமைய ரூபா. 1,070.65 மில்லியனுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அடுத்த குறைந்த விலை மனுதாரரைத் தெரிவு செய்திருந்ததுடன் அது தொடர்பில் குறித்த விலை மனுதாரரினால் செயற்திட்டத்திற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடுக்கப்பட்ட காரணத்தால் பிலியந்தலை - மஹரகம வீதி நிர்மாணம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. | மனுவில் உள்ளடக்கி இருக்க வில்லை. | தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) கண்டி நகரை அண்டிய புகையிரத செயல்திறனை மேம்படுத்தும் செயற்திட்டம் | | |
| கண்டி நகரை அண்டிய புகையிரத சேவையினை மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறு ஆய்வு மற்றும் விரிவான பொறியியல் திட்டம் என்பவற்றைத் தயாரிப்பதற்கு உரிய ஆலோசனை சேவையினைப் பெற்றுக் கொள்வதற்கு செயல்படுத்தப்பட்ட இந்த செயற்திட்டத்திற்கு ஐக்கிய அமெரிக்க டொலர் 5.3 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டு இருந்தது. அதற்கான ஒப்பந்தம் அமைச்சரவை அனுமதியின் அடிப்படையில் IDOM Consulting Engineering, Architecture, S.A.U.(Spain) in joint venture with samon corporation (Korea) நிறுவனத்திற்கு ஐக்கிய அமெரிக்க டொலர். 2.64 மில்லியன், ரூபா. 194.13 மில்லியன் மற்றும் யூரோ 1.39 மில்லியன் கொண்ட பெறுமதிக்கு 2019 நவம்பர் 28 ஆம் திகதி தொடக்கம் 18 மாத காலத்தினுள் பூர்த்தி செய்வதற்காக வழங்கப்பட்டிருந்தது. மேலே குறிப்பிடப்பட்ட செயற்திட்டத்தின் மூலம் இரட்டை மற்றும் மாற்று புகையிரதப் பாதைகளை நிர்மாணித்தல், புகையிரத நிலையங்களை மேம்படுத்துதல் மற்றும் | கருத்து தெரிவிக்கப்பட்டு இருக்கவில்லை. | தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 (1) (இ) பிரிவின் கீழான ஒழுங்கமைப்பு மீளாய்வின்போது இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு வெற்றிகரமான உலக கட்டுப்பாடுகள் அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டும். பொருளாதாரமற்ற வேதியில் செலவுகளை மேற்கொள்ளுதல் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

புகையிரத நிலைய சுற்றாடல் வசதிகளை மேம்படுத்தல் நடவடிக்கைகள் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. மேலே குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்காக குறித்த ஆலோசனை நிறுவனத்திடம் இருந்து நிதி, சுற்றாடல் மற்றும் சமூக பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு சாத்தியக்கூறு ஆய்வு அறிக்கை, விரிவான பொறியியல் திட்டம் மற்றும் விலைக் கேள்வி ஆவணங்கள் மற்றும் இறுதி அறிக்கை என்றவற்றை பெற்றுக் கொள்வதுடன் மீள்குடியேற்றத்திற்காக வசிக்கும் மக்களை மதிப்பீடு செய்வதற்கும் எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் இந்த நடவடிக்கைகளுக்கு 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரையான 05 ஆண்டுகளுக்கும் அதிக காலம் கடந்திருந்ததுடன், 2023 திசெம்பர் 31 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்த செலவுகள் ரூபா. 719.20 மில்லியன் ஆகும்.

இந்த செயற்திட்டத்திற்கு உரிய ஆரம்ப ஆராய்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டு வந்தபோதிலும், மொத்த செயற்திட்டத்தினால் இலக்காக கொள்ளப்பட்ட கடமைப் பொறுப்புகளை ஆரம்பிப்பதற்கு நிதி வழங்கும் முறைமைக்கு இதுவரையிலும் ஈடுபட்டிருக்கவில்லை. இதன் காரணமாக 05 வருடங்கள் முழுவதும் அவ்வப்போது தயாரிக்கப்பட்ட குறித்த ஆரம்ப ஆராய்ச்சி ரீதியான திட்டம் உள்ளிட்ட ஆலோசனை அறிக்கைகளுக்கு இதுவரையிலும் மேற்கொள்ளப்பட்டிருந்த செலவு போக்குவரத்து சேவையின் செயல் திறனுக்காகப் பயன்படுத்துவதற்கு உள்ள திறன் மிகவும் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.8. வெளிநாட்டு உதவி செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மத்திய அதிவேக வீதி செயற்திட்டம் - கட்டம் - 01 | | |
| (i) | கடவத்தை தொடக்கம் மீரிகம | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்த | நிபந்தனைகளின் |

| | | | |
|---|---|---|---|
| | வரையான வீதி நிர்மாண பொதி - I மற்றும் II இற்கு உரிய ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், கடன் உடன்படிக்கை சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியுடனான கைச்சாத்திடல் 2020 செப்டம்பர் 22 ஆம் திகதி வரையில் தாமதமடைந்து இருந்ததனால் வேலையை ஆரம்பித்தல் 2020 செப்டம்பர் 15 ஆம் திகதி வரையிலும் தாமதமடைந்திருந்தது. இன்னமும் சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கி கடன் வழங்குவதை தாமதப்படுத்தும் காரணத்தினால் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் பொதி I மற்றும் II இன் உண்மையான முன்னேற்றம் முறையே 39.65 சதவீதம் மற்றும் 35.37 சதவீதம் ஆகும். | விடயங்களுடன் இணங்குகின்றேன். | பிரகாரம் முறையான அனுமதியுடன் வேலைத் திட்டம் திருத்தப்படுதல் வேண்டும். |
| (ii) | இந்த பொதிகளின் முடிவடைந்த வேலைகளுக்கான ஒப்பந்தங்களுக்கு 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ரூபா. 29,014.99 மில்லியன் மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர் 145.20 மில்லியனும் செலுத்தப்படாத காரணத்தினால் உடன்படிக்கை நிபந்தனை 14.8 இன் பிரகாரம் ஒப்பந்தக்காரரினால் ரூபா. 8,206.57 மில்லியன் மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர் 4.282 மில்லியன் நிதிக் கட்டணம் கோரப்பட்டிருந்தது. | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுடன் இணங்குகின்றேன். | அரசாங்கத்தின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் உடன்படிக்கை நிபந்தனைக்கு அமைய ஒப்பந்த நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும். தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 (1) (இ) பிரிவின் கீழான ஒழுங்கமைப்பு மீளாய்வின் போது இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு ஆற்றல் வாய்ந்த உள்ளகக் கட்டுப்பாட்டினை அறிமுகப்படுத்துதல் வேண்டும். |
| (iii) | மீளாய்வாண்டினுள் செயற்திட்டத்திற்காக 5,245 காணித் துண்டுகள் கையகப்படுத்தப்பட்டிருந்த போதிலும், காணி கையகப்படுத்தும் சட்டத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரிமைகள் | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுடன் இணங்குகின்றேன். | செயற்திட்டத்திற்காகக் காணியைக் கையகப்படுத்துதல் மற்றும் நட்ட ஈடு செலுத்துதல் தொடர்பில் ஒழுங்கான முறையில் ஆவணப்படுத்தப்பட்ட தகவல்கள் பேணப்பட வேண்டியதுடன் அதற்குரிய |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்படைக்கப்பட்டிருந்தது அதில் 1,211 காணி துண்டுகளுக்கு மட்டுமே ஆகும். 2023 த்செம்பர் 31 ஆம் திகதியில் தாமத வட்டியாக ரூபா. 901.05 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன், இன்னமும் செலுத்தப்பட வேண்டிய தாமத வட்டி ரூபா. 220.45 மில்லியன் ஆகும். | | ஒழுங்கு முறைகள் தயாரிக்கப்படுதல் வேண்டும். தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 (1) (இ) பிரிவின் கீழான ஒழுங்கமைப்பு மீளாய்வின் போது இது தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டு ஆற்றல் வாய்ந்த உள்ளகக் கட்டுப்பாட்டினை அறிமுகப்படுத்துதல் வேண்டும். |
| (iv) | நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக ஒப்பந்தக்காரரினால் ஒப்பந்த நிபந்தனை 16.1 பிரிவின் பிரகாரம் இடைக் கொடுப்பனவு விலைப்பட்டியல் செலுத்துதல் தாமதமடைந்ததன் அடிப்படையில் செயற்திட்டத்திற்கு “Notice to Reducing Rate Work” சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. FIDIC நிபந்தனை 16.1 மற்றும் 8.4 இன் பிரகாரம் பொதி 01 இற்கான கால விரிவாக்கம் 2023 நவம்பர் 09 ஆம் திகதி வரையில் வழங்கப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. இதன் போது FIDIC நிபந்தனை 8.3 இன் பிரகாரம் திருத்தப்பட்ட வேலைத் திட்டம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான திருத்தப்பட்ட வேலைத் திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த நிலைமையின் கீழ் ஒப்பந்தக்காரரினால் மெதுவான முன்னேற்றத்தின் (Slow progress) கீழ் ஒப்பந்த நடவடிக்கைகளை நடத்திச் செல்லுதல் மேற்கொள்ளப்பட்ட போதிலும் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இந்த வருடத்தில் நிர்மாண முன்னேற்றத்தின் அதிகரிப்பு 1.46 சதவீதம் என்பது அவதானிக்கப்பட்டது. எதிர்காலத்தில் ஒப்பந்தக்காரரினால் | ஒப்பந்ததாரருக்கு சீனாவின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வங்கியின் மூலம் நிதி கிடைத்ததன் பின்னர் அந்த நிறுவனத்திடம் இருந்து திருத்தப்பட்ட வேலைத் திட்டத்தினைப் பெற்றுக் கொண்டு அதற்கமைய நிர்மாண நடவடிக்கைகள் செய்விக்கப்படும். | ஒப்பந்தக் காலத்தினை நீடிப்பதன் அடிப்படையில் சேவை வழங்குனருக்கு ஏற்படும் மேலதிக செலவினைத் தவிர்த்துக் கொள்வதற்கு உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டத்தினைக் கைவிட்டுச் செல்லல் அல்லது செயல்திட்டத்தினை நிறைவு செய்வதற்கு மேலதிக காலம் அதாவது, வளங்கள் செயலற்றிருத்தல் (Idling of Recourse's) மற்றும் Reduced ratc of work இல் ஏற்பதற்கு நேரிடும் செலவுகள் தொடர்பில் பல்வேறு கோரிக்கைகள் மேற்கொள்ளுதல் (Claims) அதிகரிப்பதைத் தவிர்த்துக் கொள்வதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் அமைச்சினால் பொதுத் திறைசேரியுடன் கலந்துரையாடப்பட்டு மாற்று செயல்முறைகள் எடுக்கப்பட வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது. மேலும், பொதி 01 மற்றும் பொதி 02 இல் வேலைத் தளத்தினை கையளித்தல் தாமதமடைந்ததன் அடிப்படையில் ஒப்பந்தக்காரர் கோரி இருந்த தொகை ரூபா. 2,598.76 மில்லியன் என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (v) | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் இந்த செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகளை நிறைவு செய்ய முடியுமாக இருந்திருப்பின் மொத்த செலவு மதிப்பீடு ரூபா. 158.39 பில்லியனாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டம் இடை நடுவில் நிறுத்தப்பட்ட காரணத்தினால் செயற்திட்டம் 2026 செப்டம்பர் மாதம் வரையில் நீடிப்பதற்கு நேரிடுமாயின் செயற்திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த செலவு ரூபா. 450.35 பில்லியன் வரையில் அதிகரிக்கும் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டம் தாமதமடைந்த காரணத்தினால் செயற்திட்ட நிர்மாணிப்புகளின் முழுமையான தர நிலைமை வீழ்ச்சி அடைவதற்கும் காரணமாகும் என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டத்தின் முக்கியத்துவத்தினைக் குறிப்பிட்டு முடிந்தளவு விரைவில் செயற்திட்டத்தினை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. சீனாவின் நுஓஜஆ வங்கியிலிருந்து நிதி கிடைத்ததன் பின்னர், ஒப்பந்தக்காரரின் மூலம் திருத்தம் செய்யும் நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும். | உடன்படிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் அரசாங்கத்தின் உரிமைகள் பாதுகாக்கப்படும் வகையில் மேலதிக செலவினைத் தவிர்த்துக் கொள்வதற்கு உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்த நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவ செயற்திட்டம் | | |
| (i) | போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவ செயற்திட்டத்தின் கீழ் வீதி பிரிக்கும் கொரிடோ வரைபடங்கள், வீதி ஓரங்கள் மற்றும் குறுக்கு மழை பாதைகள் GIS வடிவிலான கோவைகளாக ஊவா, கிழக்கு மற்றும் சப்ரகமுவ ஆகிய பிரதேசங்களில் ACAD படிவத்தில் தயாரிப்பதற்காக ரூபா. 190.77 மில்லியன் ஒப்பந்தமொன்று தனியார் நிறுவனத்திடம் வழங்கப்பட்டிருந்ததுடன், அது 2021 ஜூன் 24 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2023 பெப்ரவரி 23 ஆம் திகதி நிறைவு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் 85 சதவீதமான பௌதிக முன்னேற்றம் மட்டுமே காணப்பட்டதுடன் சேவை வழங்குனரின் செயலாற்றுகை மிகவும் பலவீனமாக இருந்ததுடன், ஒப்பந்தத்தின் விசேட நிபந்தனையான 3.8.1 பிரிவுக்கு அமைய ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து ரூபா. 9.5 மில்லியன் கலைத்தல் இழப்பீடாக அறவிடுவதற்கு செயல் திட்டத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தத்தினை நிறைவு செய்யும் திகதி 2023 ஓகஸ்ட் 31 ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளது. 2023 மார்ச் தொடக்கம் இதுவரையிலும் எதுவித கொடுப்பனவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த ஒப்பந்தம் தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சைகளைத் தீர்ப்பதற்கு பிணக்கு தீர்ப்பு சபை (DAB) நியமிக்கப்பட்டுள்ளது. | தொழில் வழங்குனரின் உரிமைகள் பாதுகாக்கப்படும் வகையில் ஒப்பந்த நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதைப் பரீட்சிப்பின் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். |
| (ii) | மேலே கூறப்பட்ட சேவை வழங்கும் நிறுவனத்திற்கு ரூபா. 161 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்தின் இறுதி விளைவினை அதிவேக வீதி கேந்திர திட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு முடியாதிருந்தது. ஒப்பந்தத்தின் பொது நிபந்தனைகளில் 3.1 பிரிவிற்கு அமைய, சேவை வழங்குனரினால் விவரக் குறிப்பு மற்றும் சேவை விபரத்திற்கு அமைய சேவைகள் | சேவை வழங்குனரினால் ஒப்பந்தத்திற்கு உரிய அறிக்கை வழங்கப்பட்டிருந்ததுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் நியமிக்கப்பட்ட குழுவின் மூலம் அந்த அறிக்கை நூலாய்வு செய்யப்பட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் சேவை வழங்குனருக்கு வழங்கப்பட்டுள்ளது. | தொழில் வழங்குனரின் உரிமைகள் பாதுகாக்கப்படும் வகையில் ஒப்பந்த நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதைப் பரீட்சிப்பின் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறைவேற்றப்பட வேண்டிய போதிலும், சேவை வழங்குனரினால் அது பின்பற்றப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒப்பந்த உடன்படிக்கைக்கு அமைய அறிக்கை பெற்றுக் கொள்ளப்படாது கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தமை கணக்காய்வில் சர்ச்சைக்குரியதாகக் காணப்பட்டது. | | |
| (இ) | கொழும்பு தேசிய நெடுஞ்சாலை புனர்நிர்மாணம் மற்றும் மேம்படுத்தல் செயற்திட்டம் | | |
| (i) | ஒப்பந்தத்தின் விசேட நிபந்தனை 128 மற்றும் 129 உப பிரிவுகளுக்கு அமைய, கையகப்படுத்தல் சான்றிதழ் வழங்கப்படும் தினத்தில் ஆய்வுக்கூட உபகரணங்கள் மற்றும் வீட்டுத் தளபாடங்கள் ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட வேண்டியதுடன் ஒப்பந்த முடிவில் அளவீட்டுக் கருவிகளை ஒப்பந்தக்காரரிடம் கையளித்தல் வேண்டும். 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் இந்த செயற்திட்டத்தின் கள ஆய்வுகூட கருவிகள் மற்றும் நில அளவை கருவிகளுக்காக ஒரே தடவையில் ரூபா. 15.66 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் இவ்வாறான அனுகூலமற்ற நிபந்தனைகள் ஒப்பந்தக்காரர்கள் மேலதிக நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கு காரணமாக கூடும் என்பது அவதானிக்கப்பட்டது. | ஒப்பந்தத்தினை முடிவுறுத்தும் போது உரிய ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் வீட்டுத் தளபாடங்களை வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையகப்படுத்துவதற்கு இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் வீட்டுத் தளபாடங்கள் தேவையான அளவினையும் விட அதிகார சபையிடம் உள்ளன என்பதால் இந்த உருப்படிகளை மீண்டும் ஒப்பந்த நிறுவனத்தின் வசம் வழங்கும் முறையில் விவரக் குறிப்பு தயாரிக்கப்பட்டுள்ளது. | விலை மனு ஆவணங்களுக்கு அனுமதி வழங்குவதற்கு முன்னர் குறித்த நிபந்தனைகளின் தாக்கங்கள் போதிய அளவில் மதிப்பீடு செய்யப்பட்டு மற்றும் முறையான அதிகார பலத்துடன் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| (ii) | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ் பிரகாரம், முதன்மையான மற்றும் பொதுவான உருப்படிகளுக்கு உடன்பட்டிருந்த அளவைப் பட்டியல் (BOQ) தொகையினை விஞ்சி ரூபா. 144.4 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | இந்த செயற்திட்டம் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையில் நீர்க் குழாய் பொருத்தல் காரணமாக தாமதமடைந்திருந்ததுடன் செயற்திட்ட நிர்மாண காலமும் அதற்கு அமைய நீடிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய அளவைப் பட்டியல் இலக்கம் 01 உருப்படிகளின் செலவு மதிப்பீட்டு தொகையை விட அதிகமாகும். | வீதி அபிவிருத்தி செயற்திட்டத்தினைத் திட்டமிடும்போது நீர் வழங்கல் சபை, மின்சார சபை போன்ற நிறுவனங்களுடன் இணைவதன் மூலம் மொத்த செலவினைக் குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 (1) (இ) பிரிவின் கீழான |

| | | | |
|---|---|---|---|
| | | | ஒழுங்கமைப்பு மீளாய்வின் போது இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு ஆற்றல் வாய்ந்த உள்ளகக் கட்டுப்பாட்டினை அறிமுகப்படுத்துதல் வேண்டும். |
| (ஈ) | ஏ - 017 வீதி புனர்நிர்மாணம் செய்தல் மற்றும் மேம்படுத்துதல் செயற்திட்டம் - இறக்குவானை சூரியகந்த செயற்திட்டத்தின் ஒப்பந்த நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பாகக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவை அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | ஒப்பந்த விவர குறிப்புகளில் 128 மற்றும் 129 உப பிரிவுகளுக்கு அமைய, கையகப்படுத்தல் சான்றிதழ் வழங்கப்படும் தினத்தில் ஆய்வுக்கூட உபகரணங்கள் மற்றும் வீட்டுத் தளபாடங்கள் ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட வேண்டியதுடன் ஒப்பந்த முடிவில் அளவீட்டுக் கருவிகளை ஒப்பந்தக்காரரிடம் கையளித்தல் வேண்டும். எவ்வாறு இருப்பினும், 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் கள ஆய்வுகூட கருவிகள் மற்றும் நில அளவை கருவிகளுக்காக ஒரே தடவையில் ரூபா. 49.08 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதற்கு அமைய பொறியியலாளரின் மதிப்பீட்டினை விஞ்சி ரூபா. 27 மில்லியன் தொகை செயற்திட்டத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. அனுகூலமற்ற ஒப்பந்த நிபந்தனைகள் ஒப்பந்தக்காரர்களுக்கு மேலதிக நலன்களைப் பெற்றுக் கொடுக்கக் காரணமாக கூடும் என்பது அவதானிக்கப்பட்டது. | ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் வீட்டுத் தளபாடங்கள் மீண்டும் ஒப்பந்த நிறுவனத்திற்கு கிடைக்குமாறு விபரக் குறிப்புகள் தயாரிக்கப்பட்டுள்ளன. | விலை மனு ஆவணங்களுக்கு அனுமதி வழங்குவதற்கு முன்னர் குறித்த நிபந்தனைகளின் தாக்கங்கள் போதிய அளவில் மதிப்பீடு செய்யப்பட்டு மற்றும் முறையான அதிகார பலத்துடன் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| (ii) | ஒப்பந்த பொதி மூன்றின் அளவைப் பட்டியலுக்கு (BOQ) அமைய சிவில் வேலைகளுக்கான 330 கொடுப்பனவு உருப்படிகளுக்கு | 330 கொடுப்பனவு உருப்படிகளிடையே அதிக தொகை னுயல றுழசமள இற்காக ஒதுக்கப்பட்ட உருப்படிகளாக உள்ளதுடன் | மதிப்பீட்டிற்கு அனுமதி வழங்குவதற்கு முன்னர் அத்தியாவசியமான உருப்படிகள் மட்டும் உள்ளன என்பதனை |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா. 1,296 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறு இருப்பினும், ஒப்பந்தக் காலத்தினை விஞ்சி ஒரு வருடத்திற்கும் அதிகமான காலம் கடந்திருந்த போதிலும் அது தொடர்பில் எது விதக் கொடுப்பனவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதற்கு அமைய மேலே கூறப்பட்ட கொடுப்பனவு உருப்படி கணக்காய்வில் சர்ச்சைக்குரியதாக இருந்தது. | ஏனைய உருப்படிகள் தொடர்பான நடவடிக்கைகள் செயற்திட்ட இறுதியளவில் பரீட்சிப்பு செய்யப்பட வேண்டி உள்ளன. | உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். |
| (உ) | பலவீனமான மற்றும் அகலம் குறைந்த 25 பாலங்களை மீள நிர்மாணித்தல் செயற்திட்டம் | | |
| (i) | கடன் உடன்படிக்கைத் திகதி தொடக்கம் 2022 ஆம் ஆண்டு இறுதி வரையிலும் 10 வருட காலம் கடந்திருந்த போதிலும், குவைத் தினார் (KWD) 10 மில்லியனுக்கு சமனான ரூபா 4,632 மில்லியனான மொத்த கடன் தொகையில் குவைத் தினார் (KWD) 6.83 மில்லியனுக்கு சமமான ரூபா. 4,233 மில்லியன் வரையில் 2023 ஆம் ஆண்டு இறுதி வரையிலும் செலவிடப்பட்டிருந்தது. ஒப்பந்த பொதி 01 இல் ஆலோசனை நிறுவனத்தின் பலவீனமான செயலாற்றுகை மற்றும் சிவில் வேலைகள் தாமதமடைந்தமை, கொவிட் - 19 தொற்றுநோய் நிலைமை மற்றும் 2022 ஜூன் 08 ஆம் திகதி தொடக்கம் குவைத் கடன் தொகையிலிருந்து கொடுப்பனவு நிறுத்தப்பட்டமை போன்ற காரணங்கள் இந்த நிலைமைக்கு நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தன. | கருத்துத் தெரிவிக்கப்பட்டு இருக்கவில்லை. | செயற்திட்ட நோக்கத்தினை நடப்பு காலத்தில் நிறைவேற்றிக் கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 (1) (இ) பிரிவின் கீழான ஒழுங்கமைப்பு மீளாய்வின் போது இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு ஆற்றல் வாய்ந்த உள்ளகக் கட்டுப்பாட்டினை அறிமுகப்படுத்துதல் வேண்டும். |
| (ii) | செயல்திட்டத்தின் 02 ஆவது பொதியில் ஒப்பந்தப் பணிகளை மட்டுப்படுத்தியதன் அடிப்படையில் ஒப்பந்தக்காரரினால் ரூபா. 63.25 மில்லியன் இலாபம் இழக்கப்பட்டமையையும் (Loss of Profit ) உள்ளடக்கி ரூபா. | கருத்துத் தெரிவிக்கப்பட்டு இருக்கவில்லை. | தொழில் வழங்குனரின் உரிமைகள் பாதுகாக்கப்படும் வகையில் ஒப்பந்த நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் தொடர்பானவை பரீட்சிப்பு மூலம் |

| | | | |
|---|---|---|---|
| | 151.47 மில்லியன் மொத்த செலவு உரிமை கோரல் விண்ணப்பம் (Cost Claim Application) 2022 ஏப்ரல் 22 ஆம் திகதி செயற்திட்டத்திடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2023 ஆம் ஆண்டு இறுதி அளவில் அதில் ரூபா. 9.44 செலுத்துவதற்கு செயற்திட்டம் இணங்கி இருந்தது. | | உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (ஊ) | மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் வீதி மற்றும் பாலங்களை விரிவுபடுத்தல் மற்றும் மேம்படுத்தல் செயற்திட்டம் | | |
| (i) | 2018 ஜுன் 07 ஆம் திகதி வெளிநாட்டுக் கடன் மானியத்துடன் ஏற்படுத்திக் கொண்டிருந்த உடன்படிக்கைக்கு அமைய, செயற்திட்ட காலம் 2021 செப்டம்பர் 28 ஆம் திகதியில் நிறைவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், செயற்திட்டம் 2022 செப்டம்பர் 28 ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டிருந்தது. மேலும், நீடிக்கப்பட்ட கால எல்லையினுள் ஒப்பந்தத்தினை பூர்த்தி செய்வதற்கு முடியாத காரணத்தினால், செயற்திட்ட காலம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் நீடிக்குமாறு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் 2022 ஒக்டோபர் 21 ஆம் திகதி வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திடம் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் குறித்த அனுமதி கிடைத்திருக்கவில்லை. | ஒப்பந்த கடன் கால எல்லையை நீடிப்பதற்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கு உட்பட்டு பெருந்தெருக்கள் அமைச்சினால் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு குறித்த கோரிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | செயற்திட்ட நடவடிக்கைகளை நடப்புக் காலத்தினுள் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். திட்டமிடப்பட்ட காலத்தினுள் செயற்திட்டத்தினை பூர்த்தி செய்ய முடியாமை தொடர்பில் முறையான பரீட்சிப்பு நடாத்தப்படுதல் வேண்டும். |
| (ii) | ஒப்பந்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா. 1,154.83 மில்லியனால் அதிகரித்திருந்தது. உடன்படிக்கை இடப்பட்ட ஒப்பந்த காலத்தினுள் ஒப்பந்தப் பணிகளைப் பூர்த்தி செய்யாமை இதற்கு நேரடியான தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்ததுடன், | நாட்டில் நிலவிய பல்வேறு நெருக்கடி நிலைமைகள் காரணமாக ஒப்பந்த நிறுவனத்திற்கு திட்டமிடப்பட்ட வகையில் செயற்திட்டத்தினை நிறைவு செய்வதற்கு முடியாதிருந்தது. | செயற்திட்ட நடவடிக்கைகள் ஒப்பந்த தாமதம் தொடர்பில் முறையான பரீட்சிப்பு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 (1) (இ) பிரிவின் கீழான |

| | | | |
|---|---|---|---|
| | ஆரம்பத்தில் செயற்திட்டத்திற்காக செலவிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த மொத்த செலவு ரூபா. 12,675 மில்லியனாக இருந்த போதிலும், செயற்திட்டம் நிறைவு பெறும்போது மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த செலவு ரூபா. 18,070 மில்லியனாக இருந்தது. | | ஒழுங்கமைப்பு மீளாய்வின் போது இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு ஆற்றல் வாய்ந்த உள்ளகக் கட்டுப்பாட்டினை அறிமுகப்படுத்துதல் வேண்டும். |
| (எ) | கொஃஹவல மற்றும் கெட்டம்பே மேம்பாலத்தினை திட்டமிடல் மற்றும் நிர்மாணித்தல் செயற்திட்டம் | | |
| (i) | 2018 ஆம் ஆண்டில் நிரல் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப மதிப்பீட்டுக்கு அமைய கொஹுவல மற்றும் கட்டம்பே மேம்பாலத்தினை நிர்மாணிப்பதில் இருந்து நாளொன்றுக்கு ரூபா. 4.26 மில்லியன் தொகையை தேசிய பொருளாதாரத்திற்கு மீதப்படுத்திக் கொள்ளக் கூடியதாக இருக்கும் என இனம் காணப்பட்டிருந்த போதிலும், நிர்மாண நடவடிக்கைகள் நிறைவடையாத காரணத்தினால் செயற்திட்டத்தின் பலன்களை எட்டுவதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. | பொருளாதார வீழ்ச்சி காரணமாக ஹங்கேரிய அரசாங்கத்தின் எக்ஸின் வங்கி கடன் தவணைகளை வழங்குவதை இடை நிறுத்தி இருந்தது. அதன் காரணமாக நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த ஒப்பந்த நிறுவனத்திற்கு பணம் செலுத்துவதற்கு முடியவில்லை என்பதனால் நிர்மாண நடவடிக்கைகளில் ஏற்பட்ட தாமதம் செயற்திட்டத்தின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் குறைவடைவதில் தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தது. | செயற்திட்ட நடவடிக்கைகள் நடப்பு காலத்தில் பூர்த்தி செய்வதன் மூலம் அதிகபட்ச பொருளாதார பெறுபேற்றினை கைப்பற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 (1) (இ) பிரிவின் கீழான ஒழுங்கமைப்பு மீளாய்வின் போது இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு ஆற்றல் வாய்ந்த உள்ளகக் கட்டுப்பாட்டினை அறிமுகப்படுத்துதல் வேண்டும். |
| (ii) | 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் கொஃஹவல கட்டம்பே மேம்பாலங்களின் பௌதீக முன்னேற்றம் முறையே 73.5 சதவீதம் மற்றும் 36 சதவீதம் ஆகும். இந்த குறைவான செயலாற்றுகைக்கு காணியினைக் கையகப்படுத்துதலில் ஏற்பட்ட தாமதம் மற்றும் ஒப்பந்ததாரருக்கு பணம் செலுத்தாமை போன்ற காரணங்கள் அனுகூலமற்ற வகையில் தாக்கத்தினை ஏற்படுத்தி இருந்தன. அதே போன்று மேம்பாலங்கள் இடை நடுவில் நிறுத்தப்பட்டதன் அடிப்படையில் அந்தப் | நிதி கிடைக்காததன் அடிப்படையில் நிர்மாண நடவடிக்கைகள் இடை நடுவில் நிறுத்தப்பட்டுள்ளது என்பதனால் செயற்திட்டத்தின் பௌதிக மற்றும் நிதி முன்னேற்றம் குறைவடைவதில் தாக்கம் ஏற்பட்டுள்ளது என்பதனைக் குறிப்பிடுகின்றேன். | செயற்திட்ட நடவடிக்கைகளை வினைத்திறனாக பூர்த்தி செய்வதன் மூலம் அதிகபட்ச பொருளாதார பெறுபேற்றினைக் கைப்பற்றிக் கொள்வதற்கும் பொது மக்களுக்கு ஏற்படும் சிரமங்களைக் குறைத்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரதேசங்களில் அதிக வீதி நெருக்கடி நிலவுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (iii) | செயற்திட்டம் 2024 ஏப்ரல் 30 ஆம் திகதி பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் செயற் திட்டத்திற்காக செலவிடப்பட்ட தொகை யூரோ. 20.155 மில்லியன் ஆகும். அதற்கு அமைய நிதி பயன்பாடு மொத்த கடன் தொகையின் வீதமாக 39.5 சதவீதம் ஆகும். | நிதி கிடைக்காததன் அடிப்படையில் நிர்மாண நடவடிக்கைகள் இடை நடுவில் நிறுத்தப்பட்டுள்ளது என்பதனால் செயற்திட்டத்தின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் குறைவடைவதில் தாக்கம் ஏற்பட்டுள்ளது என்பதனை குறிப்பிடுகின்றேன். | திட்டமிடப்பட்ட காலத்தினுள் செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தி செய்தல் தொடர்பில் தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 (1) (இ) பிரிவின் கீழான ஒழுங்கமைப்பு மீளாய்வின் போது இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு ஆற்றல் வாய்ந்த உள்ளகக் கட்டுப்பாட்டினை அறிமுகப்படுத்துதல் வேண்டும். |
| (ஏ) | கண்டி பல்வகைப் போக்குவரத்து முனைய அபிவிருத்தி செயற்திட்டம் | | |
| (i) | செயற்திட்டமானது 2021 மே 06 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட போதிலும் சிவில் மற்றும் ஆலோசனை வேலைகளுக்கான பெறுகை செயல்முறைகள் தாமதமடைந்த காரணத்தினால் செயற்திட்டத்தின் சிவில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்ட செயற்பாட்டு கையேட்டிற்கு அமைய 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் செயற்திட்டத்தினால் செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த ஐக்கிய அமெரிக்க டொலர் 30.50 மில்லியனுக்கு சமனான ரூபா. 5,772.12 மில்லியன் பெறுமதியில் செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா. 215 மில்லியன் மட்டுமே ஆகும். அது செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த பெறுமதியில் 3.72 சதவீதமான அளவிலும் குறைந்த பெறுமதியாகும். | ஒப்பந்தத்திற்காக ஆகக் குறைந்த விலைக் கேள்வி சமர்ப்பித்திருந்த நிறுவனத்தின் விலை உலக வங்கிக் கடன் உதவியின் கீழ் வழங்கப்பட்டிருந்த கடன் தொகையினை விஞ்சி இருந்தது என்பதனால், அதற்காக அமைச்சரவை அனுமதிக்கான அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிப்பதற்கு நேரிட்டிருந்தது. அதற்கு 06 மாதத்திற்கும் அதிக காலம் செலவிடப்பட்டது. | திட்டமிடப்பட்ட காலத்திலும் செயல்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தி செய்தல் தொடர்பில் தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 (1) (இ) பிரிவின் கீழான ஒழுங்கமைப்பு மீளாய்வின் போது இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு ஆற்றல் வாய்ந்த உள்ளகக் கட்டுப்பாட்டினை அறிமுகப்படுத்துதல் வேண்டும். |
| (ii) | நிர்மாண நடவடிக்கைகள் தாமதமடைந்ததனால் 2021 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் வியாபார நட்டமாக 825 பேருக்கு ரூபா. 712 | தற்பாதுகாப்பு வலயம் உள்ளடக்கப்பட்ட தொகுதியினுள் இருக்கும் 17 பேருக்கு செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் முடிவடையும் வரையில் | நிர்மாணத்தினை வினைத்திறனாக முடிவுறுத்துவதன் மூலம் மொத்த செலவினைக் குறைத்து கொள்ளுவதற்கும் |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் நட்ட ஈடாக செலுத்தப்பட்டிருந்தது. நிர்மாண நடவடிக்கைகள் முடிவடையும் வரையில் நட்டஈட்டுத் தொகையினைத் தொடர்ந்தும் செலுத்துவதற்கு நேரிடும் என்பது அவதானிக்கப்பட்டதுடன் மேலே குறிப்பிடப்பட்ட நட்ட ஈடு செலுத்தப்பட்ட நபர்களிடையே 17 பேருக்கு 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுக்காக முறையே ரூபா. 11.49 மில்லியன் மற்றும் ரூபா. 1.9 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் இன்னமும் ரூபா. 9.7 மில்லியன் செலுத்தப்பட வேண்டி உள்ளது. | நட்டஈட்டுத் தொகையினை வழங்குவதற்கு உலக வங்கி சமூக பாதுகாப்பு வேலைத் திட்டத்தின் கீழ் உரிமை மதிப்பீட்டுக் குழுவின் மூலம் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | திறமையின்மைக்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்களை இனம் காண்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஐ) | போக்குவரத்து செயற்திட்டங்களுக்கு வசதிகளை ஏற்படுத்தும் செயற்திட்டம் | | |
| (i) | செயற்திட்ட நிர்வாகக் கையேட்டிக்கு அமைய, ஆசிய அபிவிருத்தி வாங்கியினால் வீதி ஆக்கக் கூறுக்காக ஐக்கிய அமெரிக்க டொலர் 10 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறு இருப்பினும், 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ஐக்கிய அமெரிக்க டொலர் 2.53 மில்லியன் மட்டும் பயன்படுத்தப்பட்டிருந்தது. முன்மொழியப்பட்டிருந்த அதிவேக வீதி அபிவிருத்தி செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தாமை மற்றும் அத்துருகிரிய மற்றும் பேஸ்லைன் வீதிகளை இணைக்கும் கொங்கிரீட் தூண் மீது நிர்மாணிக்கப்படும் வீதி செயற்திட்டம் கைவிடப்பட்டமை போன்ற காரணங்களினால் அதற்குரிய பெறுகை ஆலோசனை செயல்பாடுகளை மேற்கொள்ளாமை இந்த குறைந்த நிதிப் பயன்பாட்டிற்கு முக்கியமான ரீதியில் தாக்கத்தினை ஏற்படுத்தி இருந்தது. | இணங்குகின்றேன். | நீண்ட காலத் திட்டத்திற்கு அமைய செயற்திட்டத்தினை தெரிவு செய்வதற்கும் அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட செயற்திட்டத்தினை நிச்சயமான நிதி உருவாகும் வழிகளின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்கும் தேசிய அபிவிருத்தி திட்டத்தில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | கடந்த பத்தாண்டு காலத்தினுள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அதிவேக வீதிகளை நிர்மாணித்தல் தொடர்பில் பெற்றுக் கொண்டிருந்த அறிவினைப் பயன்படுத்தி அதிவேக வீதி அபிவிருத்தித் திட்டத்தினை தயாரித்திருக்கக் கூடியதாக இருந்த போதிலும் அந்த செயல் அதிக முன்னுரிமை உள்ள செயல் அல்ல எனத் திறைசேரி செயலாளர் தீர்மானித்திருந்த காரணத்தினால் செயற்திட்டம் நிறைவு பெறும்போது அதன் பிரதான காரணியான அதிவேக வீதி அபிவிருத்தி திட்டத்தினைத் தயாரிப்பதற்கு தவறியிருந்தது. | இணங்குகின்றேன். | பெற்றுக் கொண்டிருந்த அறிவினை வீதி அபிவிருத்தித் திட்டத்தினைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தி இருக்க வேண்டியதுடன் தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 (1) (இ) பிரிவின் கீழான ஒழுங்கமைப்பு மீளாய்வின் போது இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு ஆற்றல் வாய்ந்த உள்ளகக் கட்டுப்பாட்டினை அறிமுகப்படுத்துதல் வேண்டும். |
| (ஓ) | உள்ளடக்கத்துடன் இணைக்கப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டங்கள் | | |
| (i) | முதல் இரண்டு வருடங்களில் வேலைத் திட்டத்தின் நோக்கமாகக கொள்ளப்பட்ட 1,096.8 கிலோ மீட்டர் நீள வீதியில் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 251.18 கிலோ மீட்டர் நீளமான வீதி மட்டுமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. அதனால் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 02 வருடங்களின் பின்னரும் சிவில் வேலைகளின் மொத்த பௌதிக முன்னேற்றம் 27.04 சதவீதம் மட்டுமாகும். | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றம் மற்றும் எட்டப்பட்டிருந்த முன்னேற்றம் என்பன தனித்தனியான ரீதியில் 35.22 சதவீதம் மற்றும் 27.04 சதவீதம் ஆகும். | இணங்கியிருந்த கால எல்லைக்குள் வெளிநாட்டு உதவி நிதியப் பயன்பாட்டிற்கான செயல்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ii) | செயற்திட்டத்தின் முதலாம் ஆண்டு வேலைத் திட்டத்திற்கு அமைய 07 மாவட்டங்களில் 24 லொட்களில் வீதி மறுசீரமைப்பு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தன. 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் 02 லொட்களில் மட்டும் வீதி புனர்நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் மீதி 22 பகுதிகளிலும் பௌதிக முன்னேற்றம் 15.45 சதவீதத்தில் இருந்து 99.3 சதவீதம் வரையில் உள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. மேலும், இரத்தினபுரி, | அப்போது நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக எரிபொருள் தட்டுப்பாடு, நிர்மாணப் பொருட்களுக்கான தட்டுப்பாடு, இறக்குமதி வரையறுக்கப்பட்டிருந்தமை மற்றும் போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டு இருந்தமை என்பதை மேலே கூறப்பட்ட ஒப்பந்தங்களில் கவனத்தில் கொள்ளத்தக்களவு தாக்கத்தினை ஏற்படுத்தி இருந்தன. | இணங்கியிருந்த கால எல்லைக்குள் வெளிநாட்டு உதவி நிதியப் பயன்பாட்டிற்கான செயல்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாத்தளை மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் 09 லோட்களின் ஆரம்ப ஒப்பந்த காலம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்திருந்த போதிலும் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை. | | |
| (iii) | 2021 ஓகஸ்ட் 16 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் CM: 34/2021 கொண்ட அமைச்சரவை பத்திரத்திற்கான 2021 ஓகஸ்ட் 16 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 21/1524/319/028 கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய செயற்திட்டத்தின் இரண்டாவது கூறான விவசாயிகளுக்கான வழங்கல் சங்கிலி மற்றும் அணுகலை மேம்படுத்துவதற்கான வேலைத் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தும் பொறிமுறை ஒன்று தயாரிக்கப்பட்டு தாபிப்பதற்கு விவசாய அமைச்சுடன் இணைந்து வழிமுறையொன்றினை தயாரிப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. முதலில் இந்த ஆக்கக்கூறுக்கு ஐக்கிய அமெரிக்க டொலர் 50 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அது 2023 மே மாதம் 09 ஆம் திகதி மீளமைப்பு செய்யும் பத்திரத்தில் ஐக்கிய அமெரிக்க டாலர் 15 மில்லியன் வரையில் குறைக்கப்பட்டு இருந்தது. எனினும் ஒன்றிணைக்கப்பட்ட வேலைத் திட்டம் ஒன்றினை இதுவரையிலும் தயாரிப்பதற்குத் தவறியிருந்தது. அதற்கு அமைய இரண்டாம் கூறுக்குரிய பணிகளை நடைமுறைப்படுத்துவதற்கு செயற்திட்டம் இதுவரையிலும் தவறியிருந்தது. | விவசாய அமைச்சின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த முன்மொழிவிற்கு தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் உலக வாங்கியினால் இறுதி அனுமதியினை வழங்குவதற்கு தாமதமடைந்தமை இந்த தாமதத்திற்கு காரணமாகும். | கொள்கை ரீதியிலான தீர்மானத்திற்கு இணங்கி செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டு எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (iv) | செயற்திட்ட மதிப்பீட்டுப் பதிவேட்டிற்கு அமைய, செயற்திட்டத்தின் 1.2 ஆம் | வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து எதிர்காலத்தில் PMU மூலம் | குறிக்கப்பட்ட கால சட்டத்தினுள் செயல்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| | துணைக் கூறின் கீழ் வீதி பிரிவின் நிறுவன மற்றும் கொள்கைக் கட்டமைப்பினை மேம்படுத்துவதற்கு ஐக்கிய அமெரிக்க டொலர் 5 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. எவ்வாறு இருப்பினும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 02 வருடங்கள் கடந்து இருந்ததுடன் மேலே கூறப்பட்ட கூறின் செயல்பாட்டினை செயல்படுத்துவதற்கு செயற்திட்டம் தவறி இருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. | மேலே இனம் காணப்பட்ட முன்மொழிவுகளை செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (v) | 1.3 துணைக் கூறின் கீழ் வீதிப் பிரிவின் மற்றும் சமூகத்தின் கொள்ளளவை மேம்படுத்துவதற்கு ஐக்கிய அமெரிக்க டொலர் 8.75 மில்லியன் தொகையும் ஒதுக்கப்பட்டு இருந்தது. செயற்திட்ட கால எல்லைக்குள் மேலே கூறப்பட்ட செயல்திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான திட்டமொன்று கணக்காய்க்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த நிதி ஒதுக்கீட்டில் ஐக்கிய அமெரிக்க டொலர் 7.25 மில்லியன் தொகை செயல்திட்ட செயற்பாட்டு செலவினைத் தீர்ப்பதற்கு போக மீதி வீதி பிரிவின் மற்றும் சமூகத்தின் கொள்ளளவு அதிகரிக்கும் நடவடிக்கைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 02 வருடங்கள் கடந்திருந்த போதிலும் கொள்ளளவு அபிவிருத்தி நடவடிக்கைகள் மிகவும் மெதுவான நிலைமையில் காணப்பட்டன. | 1.3 ஆம் இலக்க கூறின் கீழ் முன்மொழிக்கப்பட்ட செயல்பாடுகள் செயற்திட்டத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாத காரணத்தால், அனைத்து வீதிகளினதும் முகாமைத்துவத்தினை மேம்படுத்துவதற்குத் தேவையான செயல்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உரிய பிரிவுகளின் உதவியினைப் பெற்றுக் கொள்வதற்கு நேரிட்டிருந்தது. | குறிப்பிட்ட கால சட்டகத்திற்குள் செயல்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தினை நிறைவு செய்வதற்கு அதிகபட்ச முயற்சியினை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஓ) | ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு வேலைத்திட்டம் | | |
| (i) | ஒப்பந்த விவரக் குறிப்புகளில் 108.4 ஆம் உப பிரிவிற்கு அமைய வேலைத் திட்டத்தின் இறுதியில் பிரதான மற்றும் கள ஆய்வுகூடங்களில் ஆய்வு கூட | எதிர்வரும் ஒப்பந்தங்களின் போது இந்த உருப்படியினை அகற்றுவதற்கு உள்ள திறன் தொடர்பில் நடவடிக்கை | ஒப்பந்தத்தின் விசேட நிபந்தனைகளை அமுல்படுத்துவதற்கு முன்னர் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணங்கள் மற்றும் வீட்டுத் தளபாடங்கள் ஒப்பந்தக்காரருக்கு மீள வழங்கப்பட வேண்டிய போதிலும் RMC பொதி 17 இல் மற்றும் கிராமிய வீதி பொதி 16 இல் அந்த உருப்படிக்காக ரூபா. 397.77 மில்லியன் ஒரே தடவையில் கொடுப்பனவு (Lump Sum Payments) மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கு அமைய இந்த அசாதாரண ஒப்பந்த நிபந்தனையின் மூலம் ஒப்பந்ததாரருக்கு அதிக நலன்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய திறன் கிடைத்திருந்தது. | எடுக்கப்பட்டுள்ளது. | தொழில் வழங்குனரின் உரிமையைப் பாதுகாத்தல், நிதிக்கான பெறுமதியினை வைத்திருத்தல் மற்றும் ஒப்பந்தக்காரருக்கு அநாவசியமான நலன்களை வழங்குவதைத் தவிர்ப்பதற்கு விலை மனு ஆவணங்களை மீளாய்வு செய்யும் போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் பெறுகைக் குழு என்பவற்றினால் விசேட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். |
| (ii) | 2022 ஆம் ஆண்டில் RMC 04 பொதியின் கீழ் பெல்மதுல்ல - எம்பிலிபிடிய - நோனாகம வீதி ஒப்பந்தத்தின் மேலதிக வேலைப் பகுதியாக பலாங்கொடை - போவத்த - கல்தொட்ட வீதி 2022 ஆம் ஆண்டில் மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த வீதியின் முழு நீளம் 16 கிலோ மீட்டராக உள்ளதுடன் அந்த அளவு எந்த ஒரு பெறுகை முறைமையும் இன்றி தற்போதும் பெல்மதுல்ல - எம்பிலிபிடிய - நோனாகம வீதியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஒப்பந்தக்காரர்கள் 04 பேருக்கும் வழங்கப்பட்டுள்ளது. வேலைத் திட்டத்தின் ஆரம்ப வேலை திட்டத்திற்கு முரணாக குரகல விகாரையில் தேசிய வெசாக் விழாவின் பொருட்டு அதன் நுழைவாயிலாக இந்த வீதி மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. இது தொடர்பில் அமைச்சின் மூலம் ஆரம்ப விசாரணை நடத்தப்பட்டு உரிய அறிக்கை பணிப்பாளர் நாயகத்தினால் (பொறியியல்) 2023 நவம்பர் 30 ஆம் திகதி | செயற்திட்ட பெறுகைக் குழுவின் அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்காக இந்த தளம்பல் தொடர்பில் TEC அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டபோதும் அந்த மாற்றம் பரிந்துரை செய்யப்படவில்லை. | பெறுகை வழிகாட்டலின் நிபந்தனைகளைப் பின்பற்றுதல் வேண்டும். வழிகாட்டல்களுக்கு இணங்காமை தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் தாபன விதிக் கோவை II ஆம் பகுதியின் XLVII அத்தியாயத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் இந்த விசாரணையின் பின்னர் எடுக்கப்பட்ட மேலதிக நடவடிக்கைகள் தொடர்பில் சான்றுகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஔ) | இரண்டாவது ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு வேலைத்திட்டம் | | |
| (i) | 2023 ஜூலை 13 ஆம் திகதி வழங்கப்பட்ட போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கான அரச செலவு மீளாய்வுக் குழு (ரீநுசுஊ) அறிக்கைக்கு அமைய, எதிர்வரும் காலத்தினுள் இந்த வேலைத் திட்டத்தின் மூலம் தற்போது மறுசீரமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ள வீதிகளில் வாகன போக்குவரத்திற்கு ஏற்ற அளவு வரையில் மேற்கொள்ளப்பட வேண்டிய அத்தியாவசிய நடவடிக்கைகளை மட்டும் மேற்கொண்டு அந்த வீதிக்கு உரிய அரச நிறுவனத்திடம் மீளவும் ஒப்படைப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. எனினும் அதற்கு முரணாக, முன்னர் வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்காத கிராமிய வீதி பலவற்றின் நடவடிக்கைகளைப் புதிதாக ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது என்பது மாதிரி பரீட்சிப்பின் போது வெளிப்படுத்தப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்பட்டு இருக்கவில்லை. | குழுவின் பரிந்துரைகளுக்கு முன்னுரிமை வழங்காமை தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களை இனம் கண்டு தாபன விதிக் கோவை II ஆம் பகுதியின் XLVII அத்தியாயத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | ஒப்பந்தப் பொது நிபந்தனை 4.2 உப பிரிவின் பிரகாரம் ஒப்பந்தக்காரர்களினால் செயலாற்றுகை பாதுகாப்பு அவர்களது செலவில் வழங்கப்பட வேண்டிய போதிலும், ஒப்பந்தக்காரர்களுக்கு உரிமை கோரக்கூடிய வகையில் ஆரம்ப மற்றும் பொது உருப்படிகளின் கீழ் தனியான கொடுப்பனவு உருப்படி ஒன்று அளவைப் பட்டியல்களில் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. அதற்கு | கருத்து தெரிவிக்கப்பட்டு இருக்கவில்லை. | பெறுகை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் ஒப்பந்த நிபந்தனைகள் மீண்டும் மீளாய்வு செய்யப்பட வேண்டியதுடன் தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 (1) (இ) பிரிவின் கீழான ஒழுங்கமைப்பு மீளாய்வின் போது இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு ஆற்றல் வாய்ந்த உள்ளகக் கட்டுப்பாட்டினை அறிமுகப்படுத்துதல் |

| | | | |
|---|---|---|---|
| | அமைய 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் செயலாற்றுகைப் பாதுகாப்பு செலவு மீள் நிரப்பல் செய்வதற்காக ஊவா மாகாணத்தில் ஒப்பந்தக்காரர்களுக்கு ரூபா. 85.64 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | வேண்டும். |
| (iii) | ஒப்பந்த நிபந்தனைகளில் 108.4 மற்றும் 120.7 ஆகிய உப பிரிவுகளுக்கு அமைய வேலை திட்டத்தின் இறுதியில் அனைத்து ஆய்வுக்கூட, வீட்டு தளபாடம் மற்றும் நில அளவை உபகரணங்கள் ஒப்பந்தக்காரரிடம் மீள வழங்கப்பட வேண்டிய போதிலும், ஆய்வு கூட, தல பாடம் மற்றும் நில அளவை இயந்திரங்களுக்காக முறையே ரூபா. 518.99 மில்லியன் மற்றும் ரூபா. 14.13 மில்லியன் ஒரே தடவையிலான கொடுப்பனவாக 2023 டிசம்பர் 31ஆம் தேதி வரையில் செலுத்தப்பட்டிருந்தது. இதற்கமைய ஒப்பந்தக்காரருக்கு அனுகூலமான ஒப்பந்த நிபந்தனைகள் அனாவசிய நலன்களை பெற்றுக் கொடுப்பதற்கு காரணமாக உள்ளன என்பது அவதானிக்கப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்பட்டு இருக்கவில்லை. | ஒப்பந்தத்தின் விசேட நிபந்தனைகளை அமுல்படுத்துவதற்கு முன்னர் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினால் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும். தொழில் வழங்குனரின் உரிமையைப் பாதுகாத்தல் மற்றும் பொருளாதாரத் தன்மையை கவனத்தில் கொண்டு ஒப்பந்தக்காரருக்கு அநாவசியமான நலன்களை வழங்குவதைத் தவிர்ப்பதற்கு விலை மனு ஆவணங்களை மீளாய்வு செய்யும் போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் பெறுகைக் குழு என்பவற்றினால் விசேட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். |
| (க) | பதுளை செங்கலடி வீதி புனர்நிர்மாண செயற்திட்டம்<br><br>சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தினால் ( OFID) இரண்டு கட்டங்களின் கீழ் வீதி மறுசீரமைப்பு மற்றும் மேம்பாடு செய்வதற்காக ஐக்கிய அமெரிக்க டொலர் 60 மில்லியன் கடன் தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் முதலாம் கட்டத்திற்கு பதுளை தொடக்கம் பிபில வரையிலான (130 + 800 கிலோ மீட்டர் தொடக்கம் 190 + 800 கிலோ மீட்டர் வரை) வீதிப் பகுதியினை மறுசீரமைப்பு செய்து மேம்படுத்துவதற்கு 2015 | | |

ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்தது. இந்தப் பகுதி 3 பொதிகளாக பிரிக்கப்பட்டு போட்டி விலை மனு கோரல் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் மூவருக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த மூன்று பொதிகளில் லுணுகல தொடக்கம் பிபில வரையான (171 + 800 கிலோ மீட்டர் தொடக்கம் 190 + 800 கிலோ மீட்டர் வரை) பொதி K.D.Ebert & Sons Holdings (Pvt) Ltd ஒப்பந்தக்காரருக்கு 2017 ஜூன் 12 ஆம் திகதி ரூபா. 2,006.43 மில்லியன் ஒப்பந்த பெறுமதிக்கு 30 மாத காலத்தில் பூர்த்தி செய்யும் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரரின் பலவீனமான செயலாற்றுகை மற்றும் இணங்கியிருந்த கால சட்டகத்தினுள் ஒப்பந்தத்தினை பூர்த்தி செய்வதற்கு அவருக்கு முடியாதிருந்த காரணத்தினால் ஒப்பந்தம் 2021 ஜூன் 29 ஆம் திகதி முடிவறுத்தப்பட்டிருந்ததுடன் அதுவரையிலும் அதன் பௌதிக முன்னேற்றம் 60.32 சதவீதம் ஆகும். ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட சந்தர்ப்பத்தில் செயற்திட்டத்தினால் ஒப்பந்தக்காரருக்கு ரூபா. 1,204.95 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. மீதி கடன் தொகையைப் பயன்படுத்தி 10 மாதத்தினுள் அதனைப் பூர்த்தி செய்வதற்கு மேலே கூறப்பட்ட மீதி வேலைப் பகுதிகளை இரு பொதிகளாக ரூபா. 2,919.56 மில்லியனுக்கு மீண்டும் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

| | | | |
|---|---|---|---|
| (i) | இருதரப்பு உடன்பாட்டில் ஆரம்ப ஒப்பந்தத்தினை முடிவுறுத்தல் தொடர்பில் சட்டமா அதிபரின் கருத்து கூறப்பட்டிருந்தது. FIDIC நிபந்தனை ( ஒப்பந்தத்தில் 15ஆம் பிரிவு - பொதுவான நிபந்தனைகள்) பிரகாரம் இரு தரப்பு உடன்பாட்டுடன் ஒப்பந்தத்தினை முடிவருத்துவதற்கான ஏற்பாடு வழங்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டதுடன் அது சட்டமா அதிபரினால் அழுத்தமாக தெரிவிக்கப்பட்டு இருந்தது. | கருத்து தெரிவிக்கப்பட்டு இருக்கவில்லை. | தொழில் வழங்குனரின் உரிமைகள் பாதுகாக்கப்படும் வகையில் ஒப்பந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். நிபந்தனைகளை மீறிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் தாபன விதிக் கோவை II ஆம் பகுதியின் XLVIII அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | ஆரம்ப ஒப்பந்தத்தினை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்ளாமை, ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம் ஒப்பந்தத்தினை இரத்துச் செய்து நட்டத்தினை செயலாற்றுகை பிணையிலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை, ஒப்பந்த காலத்தினை அசாதாரணமான ரீதியில் நீடித்த காரணத்தால் ரூபா. 2,154.37 மில்லியனால் செயற்திட்ட செலவு அதிகரித்திருந்தது. | கருத்து தெரிவிக்கப்பட்டு இருக்கவில்லை. | சட்டமா அதிபரின் ஆலோசனைகள் மற்றும் ஒப்பந்த நிபந்தனைகளை மீறிய உத்தியோகத்தர்களுக்கு தாபன விதிக் கோவை II ஆம் பகுதியின் XLVIII அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | தூண்களின் மீது நிர்மாணிக்கப்படும் துறைமுக நுழைவு அதிவேக வீதி<br><br>ஒப்பந்த நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. | | |
| (i) | துறைமுக நுழைவு விமான வீதியினை நிர்மாணிப்பதற்கு உரிய ஆலோசனையாளரின் முன்னேற்ற அறிக்கைக்கு அமைய, ஒப்பந்தக்காரரினால் பொறுப்புக் கூற வேண்டிய தாமதம் காணப்படுவதுடன், எதிர்பார்க்கப்பட்ட நிறைவு செய்தல் தினமான 2024 செப்டம்பர் 08 ஆம் திகதியில் நடவடிக்கைகளை நிறைவு செய்தல் நிச்சயம் இல்லை | கொவிட் தொற்று நோய், இடத்தினை வழங்குவதில் தாமதம் மற்றும் சீரற்ற காலநிலை போன்ற காரணங்களின் அடிப்படையில் ஒப்பந்த நிறுவனத்திற்கு ஒப்பந்த காலத்தினை நீடிப்பு செய்வதற்கு உடன்படிக்கைக்கு இணங்க உரிமை உள்ளது. | ஒப்பந்த காலத்தினை நீடித்தல் மூலம் தொழில் வழங்குனருக்கு ஏற்படும் மேலதிக செலவினைத் தவிர்த்துக் கொள்வதற்கு உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | என்பது அவதானிக்கப்பட்டது. அதற்கு அமைய இறுதியாக கால நீடிப்பு அனுமதி வழங்கப்பட்ட 2024 மே மாதத்தின் பின்னர் தாமத கட்டணத்தினை அறவிடுவதற்கு செயற்திட்டத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டத்தினால் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி கால நீடிப்பு செலவாக ரூபா. 493.03 மில்லியன் தொகை செலுத்தப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (ii) | சமுத்திர வசதிகள் மத்தியநிலையக் கட்டடத்தினை பூர்த்தி செய்து இலங்கை துறைமுகங்கள் அதிகார சபைக்கு ஒப்படைப்பதற்கு தாமதமடைந்த காரணத்தினால், இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையில் தற்போது இருக்கும் பதவியணியினரின் நடமாட்டத்திற்கு மாற்றல் கட்டளை 03 இன் கீழ் செயற்திட்டத்தினால் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா. 221.53 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. | மாற்றல் இலக்கம் 15 மற்றும் 31 இன் மூலம் துறைமுகங்கள் அதிகார சபையின் பதவியணியினரின் நடமாட்டத்திற்காக முறையே ரூபா. 87.3 மில்லியன் மற்றும் ரூபா. 108.2 மில்லியன் வீதம் மாற்றலுக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. | ஒப்பந்த மாற்றல் முறையான அதிகார பலத்துடன் மேற்கொள்ளப்படுகின்றது என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும். தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 (1) (இ) பிரிவின் கீழான ஒழுங்கமைப்பு மீளாய்வின் போது இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு ஆற்றல் வாய்ந்த உள்ளகக் கட்டுப்பாட்டினை அறிமுகப்படுத்துதல் வேண்டும். |
| (iii) | 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளினுள் தொடர்ச்சியாக வெப்பநிலை அதிகரித்தமை, ABC உயர்ந்த மட்டத்தில் மாற்றமடைந்தமை, மேல் மற்றும் பக்க வெளிப்புறத்தில் வெடிப்புகள் ஏற்பட்டமை, கோபுரங்களின் குறைந்த பலம், சரிவுப் பாதுகாப்பிற்காக எடுக்கப்பட்டுள்ள பொருத்தமற்ற வழிவகைகள், bottom ducts பொருந்தாமை போன்ற குறைபாடுகளுக்காக வழங்கப்பட்டிருந்த 21 இணக்கமற்ற அறிக்கை (non - conformance report) 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் திருத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | இந்த இணக்கமற்ற அறிக்கைகளுக்கு (NCR) அமைய 22 குறைபாடுகளுடனான நிலைமைகள் அவதானிக்கப்பட்டுள்ளதுடன் அந்த குறைகளை திருத்தும் வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | இணங்காமை அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். ஒழுங்கான பரீட்சிப்பு நடாத்தப்பட்டு பலவீனமான கண்காணிப்பு தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு தாபன விதிக் கோவை II ஆம் பகுதியின் XLVIII அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.9. உள்நாட்டு நிதியங்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மத்திய அதிவேக வீதி செயற்திட்டம் - கட்டம் 03<br><br>பொத்துஹர தொடக்கம் கலகெதர வரையில் செல்லும் இந்த அதிவேக வீதிக்காக வழங்கப்பட்ட 2021 ஜனவரி 11 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் அமப/20/2072/319/021 கொண்ட அமைச்சரவை அனுமதிக்கு அமைய முழு நீளமான 31.7 கிலோ மீட்டரில் முதல் 12 கிலோ மீட்டரின் நிர்மாண நடவடிக்கைகள் 2021 ஜனவரி மாதத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் நேரடியாக நிறைவேற்றுவதற்கு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. | | |
| (i) | 2023 ஜுலை மாதத்தில் இருந்து நிர்மாண நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு 06 மாத காலத்தின் பின்னர், ஒப்பந்த பொதி 17 இல் 11 பொதிகளில் மிகவும் குறைந்த முன்னேற்றமே ( 20 சதவீதத்திலும் குறைந்த ) பதிவிடப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டுக்கான செயற்திட்ட செயல்பாட்டுத் திட்டத்திற்கு அமைய, 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 12 பொதிகளின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியதுடன் மீதி 05 பொதிகளின் பௌதீக இலக்கு 80 சதவீதத்திற்கும் 90 சதவீதத்திற்கும் இடைப்பட்டதாக இருக்க வேண்டி இருந்தது. மெதுவான முன்னேற்றத்தின் காரணமாக 07 ஒப்பந்தக்காரர்களுக்கு சரி செய்வதற்கான அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதுடன், அந்த நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்கு மற்றும் | 2023.07.04 ஆம் தேதி இடப்பட்ட அமைச்சரவை அனுமதியின் அடிப்படையில் அனைத்து பொதிகளுக்கும் ஒப்பந்த வேலை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு அந்த ஒவ்வொரு பொதிகளுக்கும் தற்காலிகமாகத் தயாரிக்கப்பட்ட நிர்மாண கால அட்டவணைகளுக்கு அமைய 07 பொதிகை தவிர ஏனைய அனைத்து கொடிகளும் குறிப்பிட்ட முன்னேற்றத்தினைக் கைப்பற்றி இருந்தது. | செயல்பாட்டு திட்டத்திற்கு அமைய ஒப்பந்த நடவடிக்கைகள் உரிய காலத்தில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 (1) (இ) பிரிவின் கீழான ஒழுங்கமைப்பு மீளாய்வின் போது இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு ஆற்றல் வாய்ந்த உள்ளகக் கட்டுப்பாட்டினை அறிமுகப்படுத்துதல் வேண்டும். |

முன்னேற்றத்தினை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு அமைய குறைந்த முன்னேற்றத்துடனான ஒப்பந்த பொதிகளின் மீதி வேலை கால நீடிப்பு செய்யப்பட்ட இறுதி தினத்திற்கு முன்னர் பூர்த்தி செய்தல் நிச்சயமில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ii) செயற்திட்டத்தின் I மற்றும் II ஆவது பகுதிகளுக்காக 4,163 காணித் துண்டுகளை கையகப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 2,395 காணித் துண்டுகள் ஐஐ ஆவது பகுதிக்கு உரியதாக இருந்ததுடன் II ஆவது பகுதிக்காக 2,345 காணித் துண்டுகளுக்காக 38 ஆம் பிரிவிற்கு வர்த்தமானி அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தது. மேலும், 1,719 காணித் துண்டுகளுக்காக ரூபா. 3,140.02 மில்லியன் நட்ட ஈட்டுத் தொகை மற்றும் 50 காணித் துண்டுகளுக்கு ரூபா. 15.31 மில்லியன் தாமத வட்டி என்பன 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் செலுத்தப்பட்டிருந்தது. 2,045 காணி துண்டுகளுக்கு தாமத வட்டி செலுத்தப்பட வேண்டியதுடன் நட்ட ஈட்டு விலைப் பட்டியலைத் தீர்ப்பதற்கு தாமதமானதால் அந்த செலவு இன்னமும் அதிகரித்துச் சென்றிருந்தது. எவ்வாறு இருப்பினும், செயற்திட்டத்தில் II ஆவது பகுதிக்காக கையகப்படுத்தி இருந்த காணித் துண்டுகளைப் பயன்படுத்துவதற்காக வேலைத் திட்டமொன்று / திட்டமொன்று இல்லை என்பது அவதானிக்கப்பட்டது. II ஆவது பகுதி தகுதியான முதலீட்டாளர் ஊடாக PPP/BOT செயற்திட்டமாக நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் எதிர்பார்க்கின்றது என நிதிக் கூற்றுகளில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2024 மார்ச் மாதம் வரையிலும் பெறுகை செயன்முறைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

செயற்திட்டத்திற்காகக் கையகப்படுத்தப்பட்டிருந்த காணிக்கான நட்ட ஈடு மற்றும் தாமத வட்டி செலுத்துதல் அரச நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் அந்த நிதி செயற்திட்டத்திற்கு கிடைக்கும் அளவிற்கு அமைய மேற்கொள்ளப்படுகின்றது. செயற்கிட்டத்தின் II ஆவது பகுதியை BOT/PPP மூலம் மேற்கொள்வதற்கு 2021 ஆம் ஆண்டில் பெறுகை ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய செயற்திட்ட முன்மொழிவுகள் முதலீட்டாளர்களிடம் இருந்து கிடைக்காத காரணத்தினால் 2022 மார்ச் மாதம் அந்த பெறுகை அமைச்சரவை அனுமதியின் பிரகாரம் இரத்துச் செய்யப்பட்டது. அதன் பின்னர் நாட்டில் நிலவிய பொருளாதார நிலையின் அடிப்படையில் இந்தப் பகுதிக்காக மீண்டும் பெறுகையினை மேற்கொள்ளுதல் தொடர்பில் நிதி அமைச்சின் மூலம் அறிவுரை வழங்கப்படும் வரையில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் நிதி நிலைமையின் அடிப்படையில் இந்தப்

செயல்பாட்டு திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதற்கமைய காணிகளைக் கையகப்படுத்துதல் தொடர்பில் குறித்த நட்ட ஈட்டுத் தொகை செலுத்துவதற்கான வேலைத் திட்டமொன்றினை விரைவில் நடைமுறைப்படுத்துதல் வேண்டும். அதன் மூலம் தாமத வட்டிக்கான செலவினைக் குறைத்துக் கொள்ளுதல் வேண்டும். செயற்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு முன்னர் நிதி உருவாகும் வழிகளைத் தீர்மானித்தல் வேண்டும். தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 (1) (இ) பிரிவின் கீழான ஒழுங்கமைப்பு மீளாய்வின் போது இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு ஆற்றல் வாய்ந்த உள்ளகக் கட்டுப்பாட்டினை அறிமுகப்படுத்துதல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | பகுதிக்கு பொருத்தமான செயல்படுத்தக்கூடிய முறைமை அரசாங்கத்தின் மூலம் தீர்மானிக்கப்படும். | |
| (ஆ) | கொம்பனித் தெரு புகையிரத நிலையத்திற்கு அருகில் மற்றும் உத்தரானந்த மாவத்தை புகையிரத வீதிக்கு மேலாக மேம்பாலம் நிர்மாணிக்கும் செயற்திட்டம்<br><br>கொம்பனித் தெரு பிரதேசத்தில் உள்ள பிரதான வீதியான ஜஸ்டிஸ் அக்பர் மாவத்தை, மலே வீதி, ஸ்ரீ உத்தரானந்த மாவத்தை மற்றும் பாலதக்ஷ மாவத்தை ஆகிய வீதிகளில் நிலவும் அதிக வாகன நெருக்கடியைத் தவிர்த்து போக்குவரத்தினை மேம்படுத்துவதற்காக இந்த வீதிகளை இணைத்து மேம்பாலத்தினை நிர்மாணிப்பதற்கு பிரேரணை செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய, கொம்பனித் தெரு, உத்தரானந்த மாவத்தை மற்றும் ஜஸ்டிஸ் அக்பர் மாவத்தை புகையிரத வீதிக்கு மேலாக 02 மேம்பாலங்களை நிர்மாணிப்பதற்கும், பாலதக்ஷ மாவத்தை சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தையை இணைத்து கொம்பனித் தெரு பேர வாவிக்கு மற்றும் புகையிரத வீதிக்கு மேலாக மேம்பாலம் ஒன்றினை நிர்மாணிப்பதற்கும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இது தொடர்பில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டது. | | |
| (i) | மேலே குறிப்பிடப்பட்ட 03 மேம்பால நிர்மாணிப்பு 2021 ஜூன் 07 ஆம் திகதி ஆரம்பிப்பதற்கும் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி அளவில் பூர்த்தி செய்வதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் நிர்மாணிப்பினைப் பூர்த்தி செய்வதற்கு செயற்திட்டம் தவறி இருந்ததுடன் திருத்தப்பட்ட பூர்த்தி செய்தல் தினமான 2024 மே 10 ஆம் திகதி எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பில் முறையான அனுமதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தினைப் பூர்த்தி செய்வதற்கு கொம்பனித் தெரு பொலிஸ் நிலையத்தின் 3 மாடி 07 கட்டடங்களைப் பெற்றுக் கொள்வது கட்டாயமாக உள்ளதுடன் பொலிஸ் இன்னமும் அந்த 07 கட்டடங்களை வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் வழங்கி இருக்காத காரணத்தால் நிர்மாண நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்ய முடியாது | செயல்பாட்டுத் திட்டத்திற்கு அமைய செயற்திட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். காணி கையகப்படுத்தும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டு மேலதிக செலவுகளைத் தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 (1) (இ) |

| | | | |
|---|---|---|---|
| | | உள்ளது. | பிரிவின் கீழான ஒழுங்கமைப்பு மீளாய்வின் போது இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு ஆற்றல் வாய்ந்த உள்ளகக் கட்டுப்பாட்டினை அறிமுகப்படுத்துதல் வேண்டும். |
| (ii) | பாலதக்ஷ மாவத்தை மற்றும் சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தையை இணைத்து கொம்பனித் தெருவில் பேர வாவிக்கு மற்றும் புகையிரத வீதிக்கு மேலாக நிர்மாணிக்கப்படும் மேம்பாலத்தினை நிர்மாணிப்பதற்காக பொலிஸ் திணைக்களத்திற்குச் சொந்தமான 42 வீட்டு அலகுகளைக் கொண்ட மூன்று மாடிக் கட்டடங்கள் 07 உள்ள நிலப்பிரதேசத்தினைக் கையகப்படுத்த வேண்டிய போதிலும், மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அதில் 20 வீட்டு அலகுகளைக் கையகப்படுத்துவதற்கு செயற்திட்டம் தவறி இருந்தது. மேலும், இந்த கையகப்படுத்தல்களில் நிலவும் தாமதம் செயற்திட்டத்தின் பலவீனமான பௌதிக முன்னேற்றத்திற்கு நேரடியாகத் தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. | பொலிஸ் திணைக்களத்திற்குச் சொந்தமான கையகப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள 42 வீட்டு அலகுகளைக் கொண்ட மூன்று மாடிக் கட்டடங்கள் 7 இல் ஆரம்பக் கட்டத்தின் கீழ் 22 வீட்டு அலகுகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் நகர அபிவிருத்தி அதிகாரசபை ஊடாக கொப்பனித் தெரு மெட்ரோ வீட்டு தொகுதியில் இருந்து வழங்குவதற்கும் மீதி 20 வீடுகள் 2023 ஆம் ஆண்டு இறுதியில் கொழும்பு அல்லது அதனை அண்டிய பிரதேசத்தில் வழங்குவதற்கும் வீதி அபிவிருத்தி அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் இலங்கை போலீஸ் திணைக்களம் இணங்கியிருந்தது. | காணி கையகப்படுத்தும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டு மேலதிக செலவுகளைத் தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 (1) (இ) பிரிவின் கீழான ஒழுங்கமைப்பு மீளாய்வின் போது இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு ஆற்றல் வாய்ந்த உள்ளகக் கட்டுப்பாட்டினை அறிமுகப்படுத்துதல் வேண்டும். |
| (iii) | உடன்படிக்கைக்கு அமைய, செயற்திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த செலவு ரூபா. 9,133.25 மில்லியனாக இருந்ததுடன் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா. 7,154.6 மில்லியன் உள்நாட்டு நிதியத்தின் மூலம் செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்கான 117-02-06-27 செலவுத் தலைப்பின் கீழ் ரூபா. 1,894.2 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா. 1,865.16 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் இந்த இரண்டு மேம்பாலங்களினது சிவில் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டு | பாலதக்ஷ மாவத்தை மற்றும் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தையை இணைத்து கொம்பனித் தெருவில் பேர வாவிக்கு மற்றும் புகையிரத வீதிக்கு மேலாக நிர்மாணிக்கப்படும் மேம்பால நிர்மாணிப்புகளின் பொதுவான நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம் முறையே 74.52 சதவீதம் மற்றும் 80.4 சதவீதமாக உள்ளதுடன் கொம்பனித் தெரு, ஜஸ்டிஸ் அக்பர் மாவத்தை மற்றும் உத்தரானந்த மாவத்தை ஊடாக புகையிரத வீதிக்கு | திட்டமிடப்பட்ட காலத்தினுள் செயற்திட்டத்தினைப் பூர்த்தி செய்வதன் மூலம் மேலதிக செலவினைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | மேலான மேம்பால நிர்மாணிப்புகளின் பொதுவான நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம் முறையே 77.28 சதவீதம் மற்றும் 84.14 சதவீதம் ஆகும். | |
| (இ) | காலி வீதிக்கு சமாந்தரமாக கடல் வழி வீதியினை (Marine Drive) பாணதுறை வரையில் நீடித்தல்<br><br>முன்மொழியப்பட்ட துறைமுக நகர அபிவிருத்தியுடனான இணைப்பு மற்றும் நுழைவினை மேம்படுத்துவதற்காக தற்போது இருக்கும் கடல்வழி வீதியினை (Marine Drive) காலி முகத்திடல் வரையில் நீடிப்பதற்கு முன்மொழியப்பட்டு உள்ளதுடன், அதே போன்று, தெகிவலை பிரதேசத்தில் காணப்படும் அதிக போக்குவரத்து நெருக்கடியினைத் தவிர்த்துக் கொள்வதற்கான மாற்று வீதியாகவும், கடல் வழி வீதியை தெகிவலை வரையில் நீடிப்பதற்கு முன்மொழியப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டில் ரூபா. 169 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. ரூபா. 232.15 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட செயற்திட்ட மொத்த செலவில் 455 நாட்களுக்குள் தெகிவலை கால்வாய்க்கு குறுக்காக உள்ள பாலத்தினை மீண்டும் நிர்மாணிக்கும் செயற்திட்டத்தினைப் பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்தக்காரர் இணங்கி இருந்தார். இது தொடர்பில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. | | |
| (i) | செயற்திட்டத்தின் ஒப்பந்த உடன்படிக்கைக்கு அமைய செயற்திட்டத்தினை முடிவுறுத்தும் திகதி 2021 செப்டம்பர் 13 ஆம் திகதியாக இருந்ததுடன், 2 வருடங்களுக்கும் அதிக காலம் கடந்திருந்த போதிலும், 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் சிவில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்த காலத்தினை நீடிப்பு செய்வதன் மூலம் தொழில் வழங்குனருக்கு ஏற்படும் மேலதிக செலவினைத் தவிர்க்கும் வகையில் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | ஒப்பந்தக்காரரினால் அவ்வப்போது காலத்தினை நீடித்தல் (EOT) கோரப்பட்டிருந்ததுடன், இதுவரையிலும் 06 சந்தர்ப்பங்களில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனால் 581 நாட்கள் காலத்தினால் செயற்திட்டம் தாமதமடைந்திருந்ததுடன் அனுமதி வழங்கப்பட்டிருந்த திருத்தப்பட்ட நிறைவு செய்யப்பட வேண்டிய தினம் 2023 ஏப்ரல் 20 ஆம் திகதி ஆகும். மேலும், 07 ஆவது கால நீடிப்பு (EOT - 07) தொழில் வழங்குனரினால் நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் 08 ஆவது கால நீடிப்புக்கு (EOT - 08 ) மேலதிக தகவல்கள் கோரப்பட்டிருந்தது. இதற்கமைய அனுமதியின்றி செயற்திட்டத்தின் சிவில் வேலைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. அதேபோன்று, பல்வேறு காரணங்களின் அடிப்படையில் செயற்திட்டத்தின் காலத்தினை நீடிப்பு செய்த காரணத்தினால் செயற்திட்டத்தின் செலவு அதிகரிப்பில் நேரடித் தாக்கம் ஏற்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்த காலத்தினை நீடிப்பு செய்வதன் மூலம் தொழில் வழங்குனருக்கு ஏற்படும் மேலதிக செலவினைத் தவிர்க்கும் வகையில் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (iii) | ஆரம்ப ஒப்பந்த காலத்திற்கு (15 மாதங்கள்) பொறியியல் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டிருந்த P-003 தொடக்கம் P - 008 வரையான செலவு உருப்படிகளின் மொத்த மதிப்பீட்டு செலவு ரூபா. 9.2 மில்லியனாக இருந்த போதிலும், 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா. 16.81 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட செயற்திட்ட செலவு 83 சதவீதத்தினால் விஞ்சி சென்றுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. மேலும், கொடுப்பனவு உருப்படி 103 (1) இன் கீழ் ஆரம்ப ஒப்பந்த காலத்திறகு பாதுகாப்பு சமிக்ஞை, விளக்குகள், போக்குவரத்துக் கட்டுப்பாடு உள்ளிட்ட வீதி பயன்பாட்டாளர்களின் பாதுகாப்பினை | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | வேலைத் தளத்தில் லொக் குறிப்புப் புத்தகம் பேணப்படுதல் வேண்டும். அதற்கமைய கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் கொடுப்பனவின் போது அதற்குரிய கழிவுகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உறுதிப்படுத்துவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த மொத்த செலவு ரூபா. 2.25 மில்லியனான போதிலும், 2023 திசெம்பர் 31 திகதி வரையில் அந்த மதிப்பீடு ரூபா. 3.04 மில்லியனை விஞ்சி செலுத்தப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. எதிர்பார்க்கப்பட்ட கால எல்லைக்குள் தீர்மானத்தினை நிறைவு செய்வதற்கு தவறியிருந்தமை மற்றும் செயற்திட்டத்தினை நிறைவு செய்யும் காலத்தை அவ்வப்போது நீடிப்பு செய்தமை இந்த நிலைமைக்கு முக்கியமான காரணமாக இருந்தது. இவ்வாறு செயற்திட்டம் 2 வருடங்களை விடத் தாமதமடைந்த காரணத்தினால் அரசாங்கத்திற்கு மேலதிக செலவு ஏற்படுவதை தவிர்க்க முடியாது என்பது மேலும் அவதானிக்கப்பட்டது. | | |
| (ஈ) | 100,000 கிலோமீட்டர் மாற்று வீதி அபிவிருத்தி செய்தல் வேலைத்திட்டம் | | |
| (i) | செயற்திட்டத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட சேவைகளுக்காக ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்துவதற்கு இருந்த தொகையினைச் செலுத்துவதற்காக திறைசேரியினால் இரு சந்தர்ப்பங்களில் ரூபா. 40,651.55 மில்லியன் பெறுமதியான பிணையங்கள் விடுவிக்கப்பட்டிருந்தன. அந்தப் பிணையங்களை விடுவிக்கும் சந்தர்ப்பங்களின் போது செயற்திட்டத்தினால் வெளித்தரப்பினருக்கு செலுத்துவதற்கு உள்ள பெறுமதி (பிணை) சரியாகக் கணக்கீடு செய்யப்பட்டிருக்காத காரணத்தினால் 11 சந்தர்ப்பங்களில் ஒப்பந்தக்காரர்கள் ஒன்பது பேருக்கு ரூபா. 121.17 மில்லியனுக்கு திறைசேரி பிணையங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த பெறுமதிக்கு சமனான தொகை பின்னர் செயற்திட்டத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. அந்த முறையில் கூடுதலாக | திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்திடமிருந்து அதற்குத் தேவையான நிதி மாற்றப்பட்டு நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு வழங்கப்பட்ட நேரத்தில் நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக மேற்கொள்ளுவதற்கு முடியாதிருந்தது. அதற்கமைய, ஒப்பந்தக்காரர்களின் விலைப்பட்டியல் பெறுமதிக்கு திறைசேரி பிணையங்கள் வழங்குதல் தொடர்பில் திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அறிவுரைகள் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளன. மிகவும் குறுகிய காலத்தினுள் தகைமைகளைப் பெற்றிருந்த 34 | மதிப்பீட்டினை அனுமதிக்கும் போது பொறுப்புக்கள் மற்றும் பிணைகளுக்கு உடன்படுவதற்கு முன்னர் நிதி எல்லைகளை விஞ்சி பொறுப்புக்கள் மற்றும் பிணைகளை ஏற்படுத்துதல் ஆகாது. அது தொடர்பில் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டு பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு தாபன விதிக் கோவை II ஆம் பகுதியின் XLVIII அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 (1) (இ) பிரிவின் கீழான ஒழுங்கமைப்பு மீளாய்வின் போது இது தொடர்பில் |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்த திறைசேரி உண்டியல்களுக்கு அரசாங்கத்தினால் செலுத்தப்பட்ட வட்டி மற்றும் முகப்பெறுமதியிலும் குறைந்த பெறுமதிக்கு வழங்கப்பட்ட காரணத்தினால் ஏற்பட்ட வித்தியாசம் என்பன அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டமாக அவதானிக்கப்பட்டது. | ஒப்பந்தக்காரர்கள் குறித்த தகவல்கள் அமைச்சுக்கு வழங்கப்பட்டதுடன் 2022.12.31 ஆம் திகதி வரையில் அதற்குரிய திறைசேரி பிணையங்கள் வழங்கப்பட்டுள்ளது. | விசேட கவனம் செலுத்தப்பட்டு ஆற்றல் வாய்ந்த உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை தாபிப்பதற்கும் அதனை அவ்வப்போது மீளாய்வு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ii) | நிர்மாணப் பாதுகாப்பு நிதியத்தினால் நிதி நிறுவனமொன்றின் பிணையினை பெற்றுக் கொள்ள முடியாத ஒப்பந்தக்காரர்களுக்கு அதாவது நிதி சாத்தியக்கூறு குறைவான ஒப்பந்தக்காரர்களுக்காக பிணை வழங்கல் மேற்கொள்ளப்படுவதுடன், இந்த செயற்திட்டத்திற்கு உரியதான 313 ஒப்பந்தக்காரர்களுக்கு ரூபா. 1,800 மில்லியன் செயலாற்றல் பிணையம் மற்றும் ரூபா. 452.2 மில்லியனுக்கு வேலை ஆரம்பித்தல் முற்பண பிணையம் வழங்கப்பட்டிருந்தது.<br>மீளாய்வாண்டு இறுதியில் 22 ஒப்பந்தக்காரர்களுக்கு உரிய வேலை ஆரம்பித்தல் முற்பணத்திற்காக இந்த நிதியத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 259.26 மில்லியனை அறவிடுவதற்கு அதிகார சபை நடவடிக்கை எடுத்திருக்காததுடன், குறித்த பெறுமதியினுள் 2 வருடங்களுக்கும் அதிக காலம் தொட்டு எதுவித செயலும் ஆரம்பிக்கப்பட்டிருக்காத 09 ஒப்பந்த பொதிகளுக்கு உரிய ரூபா. 52.73 மில்லியனும் உள்ளடக்கப்பட்டிருந்தது. | நிர்மாணப் பாதுகாப்பு நிதியம் (CGF) அரச திறைசேரியின் கீழ் தாபிக்கப்பட்ட நிறுவனம் ஆகும். அந்த நிறுவனத்தின் மூலம் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்படும் வேறு செயற்திட்டங்களுக்காக பிணை முறி பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. அதனால் 100,000 கிலோ மீட்டர் செயற்பட்டத்திற்கு வழங்கப்பட்டிருந்த ஒப்பந்தங்களுக்காக ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருந்த CGF பிணை முறிகள் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | உடன்படிக்கை நிபந்தனைகளை மீறும் ஒப்பந்தக்காரர்களின் அறவீடுகள் தொடர்பில் செயலாற்றல் பிணை முறி நிதியாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். இது தொடர்பில் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 (1) (இ) பிரிவின் கீழான ஒழுங்கமைப்பு மீளாய்வின் போது இது தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டு ஆற்றல் வாய்ந்த உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை தாபிப்பதற்கும் அதனை அவ்வப்போது மீளாய்வு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (iii) | 100,000 கிலோ மீட்டர் வீதி செயற்திட்டத்திற்கு உரிய முதலாவது திறைசேரி பிணைய வழங்கலின் கீழ் Access Engineering PLC நிறுவனத்திற்கு ரூபா. 4,542.99 மில்லியன் திறைசேரி பிணைய வழங்கல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அது 2022 திசெம்பர் 15 ஆம் திகதி காணப்பட்ட கையிருப்பு விலைப்பட்டியல் பெறுமதியை விட | Access Engineering PLC நிறுவனத்திற்கு ரூபா. 4,542.99 மில்லியன் பெறுமதிக்கு சமனான திறைசேரி பிணையங்கள் வழங்கப்பட்டிருந்தது 2022.12.15 ஆம் திகதி வரையில் அந்த நிறுவனத்தினால் 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட பொருட்கள் மற்றும் சேவை | இது தொடர்பில் பரீட்சிப்பொன்று மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் கொடுப்பனவு அறிக்கையினைப் பேணிச் செல்லுதல் தொடர்பில் தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 (1) (இ) பிரிவின் கீழான ஒழுங்கமைப்பு மீளாய்வின் போது இது தொடர்பில் |

| | |
|---|---|
| ரூபா. 306.43 மில்லியன் அதிகரிப்பாகும். பின்னர் குறித்த நிறுவனத்தினால் அந்த கூடுதலான திறைசேரி பிணையம் வழங்கப்பட்ட பெறுமதிக்கு ஈடு செய்யும் வகையில் விலைப்பட்டியல் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா. 10 மில்லியனுக்கு உரிய விலைப் பட்டியல் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு அமைய சரியான தகவல்கள் இல்லாது திறைசேரி பிணையத்தினை வழங்கியிருந்ததுடன் கூடுதலாக வழங்கப்பட்ட திறைசேரி பிணையங்கள் 491 நாட்களில் காலாவதியாகும் என அனுமானம் செய்தால் வட்டி ரூபா. 92.75 மில்லியன் உள்ளடங்களாக மற்றும் கூடுதலாக வழங்கப்பட்ட திறைசேரி பிணையங்களின் பெயரளவு பெறுமதி அண்ணளவாக ரூபா. 399.18 மில்லியன் நட்டம் இலங்கை அரசாங்கத்திற்கு ஏற்க நேரிடும் என்பது அவதானிக்கப்பட்டது. | வழங்கலுக்காக ஆகும். மாகாணத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்கள் மற்றும் செயற்திட்ட அலுவலகத்திற்கு அதுவரையிலும் கிடைத்திருந்த அனைத்து Access Engineering PLC விலைப் பட்டியல்களின் மொத்தம் ரூபா. 4,542.99 மில்லியனுக்கு சமனாகும். அவ்வாறு எனினும் திறைசேரி பிணையங்களுக்கு பயன்படுத்தப்பட்ட விலைப் பட்டியல்களைக் கணக்கீடு செய்யும்போது மாகாணத்தின் மூலம் வழங்கப்பட்ட கணக்கீட்டு அறிக்கைக்கு அமைய 2023 ஜனவரி வரையிலும் ரூபா. 260.99 மில்லியன் குறைவு காணப்பட்டது. செலுத்தப்பட்ட திறைசேரி விலைப் பட்டியல்களுக்கு உரியதாக மேற்கொள்ளப்பட்டிருந்த அனைத்து வழங்கல்களும் திறைசேரி பிணையங்கள் வழங்குவதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டிருந்த செயற்திட்டங்களுக்கானவை என்பதனால் இலங்கை அரசாங்கத்திற்கு இதன் மூலம் எதுவித நட்டமும் ஏற்பட்டிருக்கவில்லை. | விசேட கவனம் செலுத்தப்பட்டு ஆற்றல் வாய்ந்த உள்ளகக் கட்டுப்பாட்டினை அறிமுகப்படுத்துதல் வேண்டும். ஒப்பந்தக்காரர்களுக்கு தீர்ப்பதற்கு உள்ள பொறுப்புக்களை நிச்சயமாக இனம் கண்டு அந்த தொகையினை மட்டும் பிணையங்கள் மூலம் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அதன்போது கூடுதல் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தால் அது தொடர்பில் முறையான விசாரணை மேற்கொள்ளப்பட்டுப் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு தாபன விதிக் கோவை II ஆம் பகுதியின் XLVIII அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.10. பெறுகைகள்

100,000 கிலோ மீட்டர் மாற்று வீதி அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் பெறுகை வழிமுறைகள் தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.3.4. பிரிவுக்கு அமைய, விலை மனுதாரரின் அனுபவம் மற்றும் தகைமைகளை நிர்ணயிக்கும் போது பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைப்பாடுகள் எடையிடப்பட வேண்டிய முறைமை தொடர்பில் | பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.3.4 (A) பிரிவுக்கு அமைய விலை மனுதாரரின் அனுபவம் மற்றும் தகைமைகளை நிர்ணயிக்கும் போது பூர்த்தி | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஒழுங்கு விதிகளுக்கு முரணான ஒப்பந்த மதிப்பீடு மற்றும் வழங்கல் தொடர்பில் பொறுப்புக் கூற |

| | | | |
|---|---|---|---|
| | விரிவான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய போதிலும், இந்த செயற்திட்டம் ஆரம்பத்தில் முழு நாடும் உள்ளடங்கும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த 50 கிலோ மீட்டர் மற்றும் 100 கிலோ மீட்டர் வீதிகளின் நீளம் மற்றும் குறுக்கு வெட்டுகளின் அளவீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு (Longitudinal & Cross Section Survey) ஒப்பந்தக்காரர்களை தெரிவு செய்வதற்கு உரியதாக மேற்கொள்ளப்பட்ட பெறுகைகளுக்கு அமைய தனியார் நிறுவனமொன்றுக்கு மொத்தம் ரூபா. 79.26 மில்லியனான 50 கிலோ மீட்டர் நீளமான 10 ஒப்பந்தங்களும், மொத்தம் ரூபா. 121.45 மில்லியனான 100 கிலோ மீட்டர் நீளமான 08 ஒப்பந்தங்களும் வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறு இருப்பினும் அந்த ஒப்பந்தங்களை வழங்கும் போது குறித்த நிறுவனத்திடம் உள்ள கருவிகள் தொடர்பான மதிப்பீடு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. மேலும், குறித்த ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டிருந்த ஒப்பந்த அளவு மொத்த அளவீடான 2,975 கிலோ மீட்டரில் 44 சதவீதமாக இருந்தது. | செய்யப்பட வேண்டிய தேவைப்பாடுகள் தொடர்பில் விலைமனு ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்படும் அறிவுரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில் அளவீட்டு நடவடிக்கைகளுக்கு அத்தியாவசியமான உபகரணப் பட்டியல் மற்றும் அளவீட்டு நடவடிக்கைகளுடன் தொடர்பு பட்ட பதவி அணியினரின் தகைமைகள் தொடர்பில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அவை பூர்த்தி செய்யப்பட்டுள்ள முறைமை தொடர்பில் போதிய அளவான மற்றும் தரமான மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் தொழில்நுட்பக் குழு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. | வேண்டிய உத்தியோகத்தர்களை இனம் கண்டு முறையான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அதற்கு பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் தாபன விதிக் கோவை II ஆம் பகுதியின் XLVII அத்தியாயத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளரினால் தயாரிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.3.5. வழிகாட்டலுக்கு வழங்கப்பட்டுள்ள 39 மேலதிகத்தின் பிரகாரம் நெடுஞ்சாலைகள் விடயத்திற்கு உரிய CIDA தரப்படுத்தலுக்கு முரணாக, ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்படக் கூடிய ஒப்பந்த பெறுமதி எல்லைகள் ஆகக் குறைந்த ரூபா 75 மில்லியன் தொடக்கம் ஆகக் கூடிய ரூபா 300 மில்லியன் வரையில் அசாதாரண வீச்சில் உயர்த்தப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டத்தினை 5 ஆண்டுகள் போன்ற குறுகிய காலத்தினுள் நிறைவு செய்வதற்கான திட்டத்தினைத் தயாரிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது என்பதனால் அப்போது CIDA பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களின் கொள்ளளவு இந்த செயற்திட்டத்தினை குறித்த காலப் பகுதியிலும் நிறைவு செய்வதற்கு போதுமானது அல்ல என அடையாளம் காணப்பட்டிருந்தது. அதனால் இந்த செயற்திட்டத்தின் இலக்காக கொள்ளப்பட்ட | ஒழுங்கான மதிப்பீட்டின் மூலம் குறித்த நிரல் நிறுவனங்களில் காணப்படும் அரச கொள்கைகளுக்கு அமைய அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாது பெறுகை வழிகாட்டல் மூலம் நிர்ணயிக்கப்பட்டுள்ள எல்லைகளை விஞ்சி அமைச்சரவைக்கு விடயங்களைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் குறித்த நிபந்தனைகளுக்கு முரணாக நடவடிக்கை எடுத்தல் தொடர்பில் |

| | | | |
|---|---|---|---|
| | | நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்ளுவதற்கு இவ்வாறு ஒப்பந்தக்காரர்களின் கொள்ளளவு மற்றும் ஒப்பந்த பெறுமதி எல்லைகளை உயர்த்துவதற்கு அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. | முறையான விசாரணை நடத்தி பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் தாபன விதிக் கோவை II ஆம் பகுதியின் XLVII அத்தியாயத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல் மற்றும் தரப்படுத்துதல் என்பவற்றை மேற்கொள்ளுதல் 2014 இன் 33 ஆம் இலக்க நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தின் 13 (ஏ) பிரகாரம் மேற்கொள்ளப்படுவதுடன், அதன் போது ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய CIDA தரம் மற்றும் ஒப்பந்தம் வழங்கப்படும் பெறுமதி தீர்மானிக்கப்படும் போது ஒப்பந்தக்காரரின் நிதி கொள்ளளவு, தொழில்நுட்ப சாத்தியக்கூறு, இயந்திர உபகரணங்கள், அமைப்பினைத் தாபித்தல் தன்மை மற்றும் அமைப்பின் முகாமைத்துவம் ஆகிய காரணிகள் கவனத்தில் கொள்ளப்பட்டு புள்ளிகள் வழங்கப்படும் முறைமைக்கு அமைய தீர்மானிக்கப்பட்ட போதிலும் அமைச்சினால் தயாரிக்கப்பட்ட 2020 ஜனவரி 14 ஆம் திகதி மற்றும் 2020 நவம்பர் 26 ஆம் திகதி இடப்பட்ட அமைச்சரவைப் பத்திரங்களில் குறித்த எல்லைகளை உயர்த்தும் போது பரிசீலனை செய்யப்பட்ட மூலப் பிரமாணங்கள் கணக்காய்வுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், குறித்த மூலப்பிரமாணங்களை மாற்றுவதற்கு முன்னர் CIDA நிறுவனத்தின் இணக்கப்பாட்டினைப் பெற்றுக் கொள்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களின் கொள்ளளவு இந்த செயல்திட்டத்தில் குறித்த காலப்பகுதியினுள் நிறைவு செய்வதற்கு போதுமானதாக இல்லை என்பது அடையாளம் காணப்பட்டிருந்தது. மேலும், இந்த செயற்திட்டத்தின் மூலம் சிறிய அளவிலான ஒப்பந்தக்காரர்களுக்கு வீதி நிர்மாணித்தல் தொடர்பில் தேவையான அனுபவத்தினை பெற்று கொடுப்பதும் அதன் மூலம் எதிர்காலத்தில் வீதி நிர்மாணித்து துறையில் போட்டித் தன்மையை உயர்த்துவதும் எதிர்பார்க்கப்பட்டது என்பதனால் ஒப்பந்தக்காரர்களின் கொள்ளளவினை உயர்த்துவதற்கு அமைச்சர் அவை பத்திரத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஒழுங்கான மதிப்பீட்டின் மூலம் குறித்த நிரல் நிறுவனங்களில் காணப்படும் அரச கொள்கைகளுக்கு அமைய அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாது பெறுகை வழிகாட்டல் மூலம் நிர்ணயிக்கப்பட்டுள்ள எல்லைகளை விஞ்சி அமைச்சரவைக்கு விடயங்களைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் குறித்த நிபந்தனைகளுக்கு முரணாக நடவடிக்கை எடுத்தல் தொடர்பில் முறையான விசாரணை நடத்தி பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் தாபன விதிக் கோவை II ஆம் பகுதியின் XLVII அத்தியாயத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | ஒப்பந்த பொதிகளுக்கு உரியதாகத் தயாரிக்கப்பட்ட பொறியியல் மதிப்பீட்டை விலை மனுதாரரிடம் சமர்ப்பித்து அதற்கு ஆகக் கூடிய கழிவினைச் சமர்ப்பிக்குமாறு விலை மனு அழைப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கமைய, தெரிவு செய்யப்பட்ட 24 ஒப்பந்தப் பொதிகளுக்காக குறித்த மனுதாரர்களினால் வழங்கப்பட்டிருந்த கழிவுத் தொகை 0.19 சதவீதம் தொடக்கம் 13.56 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. பொறியியல் மதிப்பீடு தயாரிக்கும் போது 20 சதவீதத்திற்கு பொதுவான பணிகள் மற்றும் இலாபம் சேர்க்கப்பட்ட விலை அளவைப் பட்டியல் தயாரிக்கப்படுதல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் பொறியியல் மதிப்பீடு தயாரிக்கும் போது சரியானதாக அல்லாத பொறியியல் மதிப்பீட்டின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்ட காரணத்தால் 09 மாகாணங்களில் ஒப்பந்தம் வழங்கப்பட்டமைக்கு உரியதாக 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ஒப்பந்தக்காரர்களுக்கு ரூபா. 3,484 மில்லியன் அளவில் மிகை மதிப்பீட்டு பெறுமதி உள்ளடக்கப்பட்டிருந்தது என்பது மாதிரிக் கணக்காய்வு பரீட்சிப்பில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, குறித்த பொறியியல் மதிப்பீடு பிரசுரிக்கப்படாது விலை மனு கோருவதன் மூலம் ஒப்பந்தக்காரர்களை தெரிவு செய்தல் மேற்கொள்ளப்பட்டதாயின் நிறுவனத்திற்கு கழிவின் மூலம் உரித்தாகும் நலன்களை விட அதிக அனுகூலமான நிலைமை ஏற்பட்டிருக்கும் என்பது அவதானிக்கப்பட்டது. | மதிப்பீட்டை மீண்டும் பகுப்பாய்வு (Revisit) செய்யுமாறு குறித்த மாகாணப் பொறுப்புப் பணிப்பாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அவ்வாறு இருந்த போதிலும் ஒப்பந்த நிறுவனம் இது தொடர்பில் அவர்களது எதிர்ப்பினை எழுத்து மூலம் தெரிவித்திருந்ததாவது பொறியியல் மதிப்பீட்டுக்கு போட்டி ரீதியில் கழிவுத் தொகையினை வழங்கி செயற்திட்டத்தினைப் பெற்றுக் கொண்டுள்ளதனால் அந்த உடன்படிக்கையிடப்பட்ட தொகையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு இணங்க முடியாது என்பதாகும். அதற்கமைய பொறியியல் மதிப்பீட்டின் அடிப்படையிலான கழிவுத் தொகை என ஒப்பந்தம் வழங்கப்பட்டதனால் மிகை மதிப்பீடு செய்யப்பட்டமையோ அல்லது இதன் மூலம் அரசாங்கத்திற்கு நட்டமோ ஏற்பட்டிருக்கவில்லை. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ரூபா. 3,484 மில்லியன் மிகை மதிப்பீட்டுத் தொகை உள்ளடக்கப்பட்டுள்ளமை தொடர்பில் எமக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | உச்சபட்ச பொருளாதாரத் தன்மை கிடைக்கும் வகையில் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். பொறியியல் மதிப்பீடு தயாரிக்கும் போது சரியானதாக அல்லாத பொறியியல் மதிப்பீட்டின் அடிப்படையில் நடவடிக்கை எடுத்தமை தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் தாபன விதிக் கோவை II ஆம் பகுதியின் XLVIII அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.11. சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலக்கம் ஆர்ஏஎச்/ஏ/எம்ஓடீஎச்/எப்ஏ/2022/62 மற்றும் 2023 மே 22 ஆம் | CAO-3475 2019-04-10 ஆம் திகதியில் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் | அமைச்சுக்குச் சொந்தமான சொத்துக்களைப் |

திகதியிடப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்க அறிக்கைக்கு நெடுஞ்சாலைகள் அமைச்சு செயலாளரின் பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இலக்கம் MOH/ACC/13/2023/07 கொண்டதும் மற்றும் 2023 மே 31 ஆம் திகதி இடப்பட்ட கடிதத்தின் பிரகாரம். CAO - 3475 வாகனம் 2019 ஏப்ரல் 10 ஆம் திகதியில் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சுக்கு தற்காலிகமாக இணைக்கப்பட்டு மீண்டும் 2019 ஜுலை 10 ஆம் திகதியில் இந்த அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது எனவும், இலக்கம் KY-8445 கொண்ட வாகனம் நீதி அமைச்சுக்கு 2018 நவம்பர் 05 ஆம் திகதி எம்.டி.ஏ.6/8 படிவத்தின் மூலம் கையளித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறு இருப்பினும், இலக்கம் CAO - 3475 கொண்ட மோட்டார் கார் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சு வளாகத்திலும், நீதி அமைச்சுக்கு கையளிக்கப்பட்ட இலக்கம் KY - 8445 கொண்ட வாகனம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி நெடுஞ்சாலைகள் பிரிவின் சொத்துக்கள் பதிவேட்டினுள் இன்னமும் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஒன்றிணைந்த வீதி முதலீட்டு வேலைத்திட்டம்

வேலைத் திட்டம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களுக்கு அமைய, மொத்த செலவு ரூபா. 1,499.58 மில்லியனான 168 சைக்கிள்கள் மற்றும் 335 மோட்டார் வாகனங்கள் என்பன வேலைத் திட்டத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் 08 மோட்டார் வாகனங்கள் மற்றும் 09 மோட்டார் சைக்கிள் தவிர ஏனைய அனைத்து வாகனங்களும் இதுவரையிலும் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள

மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சுக்கு தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ள அந்த வாகனம் மீண்டும் 2019-07-10 ஆண்டுகதியில் இந்த அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் நிதி குத்தகை காலம் முடிவடைந்து அமைச்சின் பெயரின் கீழ் இந்த வாகனத்தினைப் பதிவு செய்து தருமாறு பிரதான நிதி உத்தியோகத்தருக்கும் பிரதியுடன் 2021-12-19 ஆம் திகதி விடப்பட்ட மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

KY-8445 மீதி அமைச்சிற்கு 2018-11-05 ஆண் திகதி இடப்பட்ட எம். டி. ஏ.6/8 படிவத்தின் மூலம் கையளித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பரிமாற்றம் செய்யும் போது இருப்பு, பயன்பாடு, உரிமை என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு முறையான பதிவேடுகளைப் பேணுதல் தொடர்பில் தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 (1) (இ) பிரிவின் கீழான ஒழுங்கமைப்பு மீளாய்வின் போது இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு ஆற்றல் வாய்ந்த உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை தாபிப்பதற்கும் அதனை அவ்வப்போது மீளாய்வு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | | |
| (i) | வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு வேலை திட்டத்தினால் ஒப்படைக்கப்பட்டிருந்த வாகனங்களிடையே 05 வாகனங்கள் ஜனாதிபதி செயலகத்திற்கும், 02 வாகனங்கள் பிரதமர் அலுவலகத்திற்கும் மற்றும் 06 வாகனங்கள் அமைச்சிக்கும் வழங்கப்பட்டிருந்தன. | செயற்திட்ட வேலை நடவடிக்கைகள் முடிவடைந்தமை அல்லது நிறுத்தப்பட்டதனால் அந்த பொதிகளில் சேவையில் ஈடுபட்டிருந்த வாகனங்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. | சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட நோக்கத்திற்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். வேறு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்களை ஒழுங்கான முறையில் ஒப்படைப்பதற்கு அல்லது வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் மீளப் பெற்றுக் கொள்வதற்குத் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ii) | வேலைத் திட்டத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா. 7.47 மில்லியன் செலவிலான கெப் வாகனம் 2019 திசெம்பர் 07 ஆம் திகதி விபத்துக்கு உட்பட்டிருந்தது. அந்த வாகனத்தினைத் திருத்துவதற்குத் தனியார் கராஜில் வைக்கப்பட்டிருந்ததுடன் திருத்த வேலைக்கான மதிப்பீடு ரூபா. 6.93 மில்லியன் ஆகும். கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருந்த தகவல்களுக்கு அமைய காப்புறுதி நிறுவனத்தினால் வழங்குவதற்கு இணங்கி இருந்த தொகை ரூபா. 4.00 மில்லியனாக இருந்ததுடன் அதற்கு அமைய மேலதிகமாக ஏற்க நேரிடும் தொகை ரூபா. 2.93 மில்லியன் ஆகும். நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் ஆரம்ப மற்றும் இறுதி விசாரணை நடாத்தப்பட்டுப் பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினர்களை இனம் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டதுடன் வாகனத்தினைத் திருத்தி வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. | இந்த வாகனத்தின் விபத்து தொடர்பான ஆரம்ப விசாரணை நடாத்தப்பட்டு ஆரம்ப அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வாகனத்தின் திருத்த வேலைகள் தொடர்பான இறுதியாக ஒப்பந்தக்காரர் மற்றும் திருத்த வேலைகளை கையேற்ற நிறுவனம் என்பவற்றுக்கிடையே 2024.03.28 ஆம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் திருத்த வேலைகளை 04 மாதங்களினுள் பூர்த்தி செய்து தருவதாக அந்த நிறுவனத்தினால் தெரிவிக்கப்பட்டு இருந்தது. | வாகன விபத்து தொடர்பான விசாரணையைத் தாமதப்படுத்துவதற்கு பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் தாபன விதிக் கோவை II ஆம் பகுதியின் XLVIII அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நட்டத்தினை பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | வேலைத் திட்டத்தினாலேயே கொள்வனவு செய்யப்பட்ட 335 வாகனங்களில் 318 வாகனங்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் இதுவரையிலும் வேலைத் திட்டத்தினால் வீதி மறுசீரமைப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை. அதனால், இந்த வேலைத் திட்டத்தின் மூலம் மீளாய்வாண்டினுள் செயற்திட்ட அலுவலகத்தின் மற்றும் மாகாண அலுவலகங்களின் பயன்பாட்டிற்காக 14 வாகனங்கள் வாடகைக்கு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்த வாகனங்களுக்கான வாடகையாக 2023 ஆம் ஆண்டினுள் ரூபா. 16 மில்லியனுக்கும் அதிக தொகை செலுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் ஒப்பந்த நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்ட காலத்தினுள் தேவையான வேலைகளை மேற்கொள்ளுவதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வாகனங்களைத் தேவையான அளவில் பெற்றுக் கொள்ளுவதற்கு முடியாததனால் 14 வாகனங்கள் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | விசாரணை நடத்தப்படுதல் வேண்டும். செயற்திட்ட நடவடிக்கைகளுக்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட வாகனங்கள் பயன்படுத்தப்படாது வாகனங்களை வாடகைக்கு பெற்றுக் கொள்வதற்குப் பரிந்துரை செய்த உத்தியோகத்தர்கள் தொடர்பில் தாபன விதிக் கோவை II ஆம் பகுதியின் XLVIII அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.12. இழப்புகள் மற்றும் சேதங்கள்

2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் பதிவழிக்காது முன் கொண்டுவரப்பட்ட வாகனம் விபத்துக்குள்ளான நட்டம் ரூபா. 26.28 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா. 0.36 மில்லியன் முன்னைய ஆண்டுகளில் ஏற்பட்ட நட்டம் மற்றும் கைவிடப்படல் என்பதுடன் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அந்த மீதிகளை அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கிராம வீதி அபிவிருத்தி பிரிவுக்கு சொந்தமான இலக்கம் KX - 5322 கொண்ட டொயோட்டா வகையான லேண்ட் க்ரூஸர் ஜீப் வண்டி 2022 திசெம்பர் 24 ஆம் திகதி விபத்துக்குள்ளாகி இருந்ததுடன் திருத்த வேலைகளுக்காக செலவாகும் தொகை ரூபா. 17.78 மில்லியன் ஆக இருந்தது. காப்புறுதி நிறுவனத்தில் இருந்து காப்புறுதி உரிமையைத் தீர்த்துக் கொள்வதற்கு 03 வழிகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதில் முதலாவது பரிந்துரையான ரூபா. 2.10 மில்லியன் தொகை அரசாங்கத்தின் மூலம் ஏற்கப்பட்டு இந்த வாகனத்தின் திருத்த வேலைகளை செய்வதற்கு 2023 ஜூலை 27 ஆம் திகதி பெறுகைக் குழு தீர்மானித்திருந்தது. இதற்கு அமைய | ரூபா. 2,098,697.33 தொகையே அரசாங்கத்தின் மூலம் ஏற்க நேரிட்டு இருந்த தொகையாக உள்ளதுடன், அது அமைச்சின் மூலம் வாகனத்தின் திருத்த வேலைகளை மேற்கொள்ளுவதற்கு பொது திறைசேரியிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டு டொயோட்டா லங்கா நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. அந்தத் தொகை ஓட்டுனரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய | இதற்கு உரிய நட்டத்திற்குப் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் தாபன விதிக் கோவை II ஆம் பகுதியின் XLVIII அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வாகனத்தின் திருத்த வேலைகளுக்காக அரசாங்கத்தினால் ஏற்க வேண்டிய ரூபா. 2.10 மில்லியன் தொகை அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டமாகக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | தொகையாக உள்ளதுடன், சாரதியினால் செய்யப்பட்ட மேன்முறையீட்டின் காரணமாக 2023.12.07 ஆம் திகதி வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மாகாணப் பொறுப்பு பணிப்பாளருக்கு ( மட்டக்களப்பு) மீண்டும் ஆரம்ப விசாரணை மேற்கொள்வதற்கு கட்டளையிடப்பட்டு அதற்கமைய ஆரம்ப விசாரணை அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அது முழுமையாக இல்லை என்பதனால் நிதிப் பிரமாணம் 104 (4) பரீட்சிப்புக்கு அமைய பரிந்துரை கோரப்பட்டுள்ளது. அந்த அறிக்கை கிடைத்ததன் பின்னர் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | |
| (ஆ) | கிராம வீதி அபிவிருத்திப் பிரிவிற்குச் சொந்தமான இலக்கம் KR - 5447 கொண்ட மோட்டார் வாகனம் 2023 ஏப்ரல் 03 ஆம் திகதி விபத்துக்குள்ளாகி இருந்ததுடன் அதன் நட்டம் ரூபா. 6.2 மில்லியனாக அறியப்பட்டிருந்தது. இந்த விபத்துக்கான காப்புறுதி நட்ட ஈட்டினைப் பெற்றுக் கொள்வதற்கு உரிமை கோரல் பத்திரம் காப்புறுதி நிறுவனத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் விபத்து ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் வாகனத்தின் சாரதியாகக் கடமையாற்றி இருந்த சாரதி உரிமை கோரிக்கை பத்திரத்தில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள சாரதி இல்லை என்பதனால் காப்புறுதி நட்ட ஈடு வழங்குதல் நிராகரிக்கப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு நட்டத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். பொறுப்புக கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் தாபன விதிக் கோவை II ஆம் பகுதியின் XLVIII அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | போக்குவரத்துப் பிரிவிற்குச் சொந்தமான விபத்துக்குள்ளான வாகனங்கள் தொடர்பில் ஏற்பட்டு இருந்து நட்டங்களின் ஒரு பகுதி மட்டுமே | இலக்கம் KA - 1279 கொண்ட வாகனத்தின் விபத்துக்குரிய திருத்த வேலை நடவடிக்கைகள் | அரசாங்கத்திற்கு ஏற்படும் நட்டம் தொடர்பில் பொறுப்பு கூற வேண்டிய |

| | | |
|---|---|---|
| காப்புறுதி நிறுவனத்தினால் மீள் நிரப்பல் செய்யப்பட்டிருந்ததுடன் காப்புறுதியின் மூலம் உள்ளடக்கப்பட்டிருக்காத ரூபா. 1.40 மில்லியன் நட்டங்கள் அதற்கு பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினர்களிடம் இருந்து இதுவரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அதே போன்று, இலக்கம் முயு - 1279 கொண்ட வாகனத்தின் சேத மதிப்பீடு மற்றும் மீளாய்வு ஆண்டு இறுதி வரையிலும் அறவிடப்பட வேண்டிய ரூபா. 1 மில்லியனான நட்டம் என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை. | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இந்த விபத்தினால் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்த மொத்த நட்டம் ரூபா. 1,299,950 ஆக உள்ளதுடன் ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் நிறுவனத்திடமிருந்து ரூபா. 300,000 உரிமை தொகையாக விடுவிக்கப்பட்டுள்ளது. காப்புறுதியினால் உள்ளடக்கப்பட்டிருக்காத ரூபா. 999,950 தொகை தொடர்பில் நிதிப் பிரமாணம் 104 (4) இறுதி விசாரணை அறிக்கையின் பரிந்துரைக்கு அமைய அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உத்தியோகத்தர்கள் தொடர்பில் தாபன விதிக் கோவை II ஆம் பகுதியின் XLVIII அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.13. சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

மத்திய அதிவேக வீதி செயற்திட்டம் - கட்டம் 03 தொடர்பில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஏப்ரல் 26 ஆம் திகதி இடப்பட்ட தேசிய வரவு செலவு சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இன் பிரகாரம் அரச செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதும் செயற்திட்டத்திற்குச் சொந்தமான வாகனங்கள் இருக்கும்போது வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட அனைத்து வாகனங்களுக்கும் 3 மாத காலப் பகுதிக்கு மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா. 3.15 மில்லியன் செலவு பொருளாதாரமற்ற செலவு என்பதும் அவதானிக்கப்பட்டது. | நாட்டில் நிலவிய நிலைமையின் அடிப்படையில் எரிபொருள் வழங்கல் சீர்குலைந்தமை மற்றும் எரிபொருள் விலையில் ஏற்பட்ட தளம்பல் அடிப்படையில் ஒரு சில வாகனங்களை முகாமைத்துவப்படுத்திச் செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது. இந்த நிலைமையில் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட வாகனங்களை முகாமைத்துவப்படுத்துவதற்கு நேரிட்டிருந்தது. | சுற்றறிக்கையுடன் இணங்காமை தொடர்பாகப் பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் முறையான விசாரணை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2022 ஏப்ரல் மாதம் தொடக்கம் 2023 ஜூலை மாதம் வரையிலான 15 மாத காலப்பகுதியினுள் செயற்திட்டத்தின் வேலைகள் நிறுத்தப்பட்டிருந்த போதிலும் செயற்திட்ட | செயற்திட்ட வேலைகளைத் தற்காலிகமாக நிறுத்துவதற்கு அறிவுரை வழங்கப்பட்டிருந்த காலப்பகுதியினுள் | 15 மாத காலப்பகுதி வேலைகள் நிறுத்தப்பட்டு இருந்த போதிலும் பதவியணியினரை |

| | | | |
|---|---|---|---|
| | பதவியணியினருக்கு இந்த காலப் பகுதியினுள் செயற்திட்ட கொடுப்பனவாக ரூபா. 21 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.<br>செயற்திட்டத்தில் எதுவித பௌதீக முன்னேற்றமும் இல்லாத இந்த காலப் பகுதியினுள் செயற்திட்ட கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வில் சர்ச்சைக்குரியதாக இருந்தது. | பதவியணியினர் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக அறிவுரை வழங்கப்பட்டிருக்காத நிலைமையின் அடிப்படையில் அவ்வப்போது அமைச்சின் மூலம் வழங்கப்படும் ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஈடுபடுத்துதல் தொடர்பாக அறிவுரை வழங்கி இருக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பில் தாபன விதிக் கோவை II ஆம் பகுதியின் XLVIII அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | செயற்திட்டம் இடைநிறுத்தப்பட்டிருந்த காலப்பகுதியில், மாதிரி பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்ட 03 மாத காலப் பகுதியினுள், உரிமையற்ற பதவி நிலை அல்லாத உத்தியோகத்தர்களினால் 05 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு 20,594 கிலோ மீட்டர் செலுத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பு அறிக்கையினை ஏற்றுக் கொள்வதுடன் வாகனங்களைப் பயன்படுத்தும் உத்தியோகத்தர்கள் அவர்களினால் பயன்படுத்தப்பட்ட கிலோ மீட்டர் அளவிற்கு கையொப்பம் இடப்பட வேண்டும் என்பதும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வாகன விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் கையொப்பமிடுதல் தொடர்பில் எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | வாகனங்களைத் தவறாக பயன்படுத்துதல் தொடர்பில் தாபன விதிக் கோவை II ஆம் பகுதியின் XLVIII அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஓட்ட அட்டவணையைப் பேணி செல்லுதல் மற்றும் வாகனப் பயன்பாடு தொடர்பில் தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 (1) (இ) பிரிவின் கீழான ஒழுங்கமைப்பு மீளாய்வின் போது இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு ஆற்றல் வாய்ந்த உள்ளகக் கட்டுப்பாட்டினை அறிமுகப்படுத்துதல் வேண்டும். |

### 3.14. கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழங்காமை

மீளாய்வாண்டினுள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்களுக்கு ஒரு மாதத்தினுள் பதில் வழங்கப்படாத 03 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. இந்த கணக்காய்வு விசாரணைகளுக்குக் கால நீடிப்பு வழங்கப்பட்டு இருந்த போதிலும் அந்த கால நீடிப்பு வழங்கப்பட்ட காலம் முடிவடைந்து 24 நாட்கள் தொடக்கம் 47 நாட்கள் வரையான கால தாமதத்தில் பதில் வழங்கப்பட்டிருந்தது.

| | கணக்காய்வு ஐயவினாக்கள் தொடர்பான விபரங்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சொத்துக்களைக் கையகப்படுத்துதல், பேணிச் செல்லுதல் மற்றும் அறிக்கையிடல். | பெரும்பாலான செயல்திட்டங்களை இடை நடுவில் நிறுத்துவதற்கு நேரிட்டமையும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்களுக்கு உரிய பதிவேடுகளைப் பரீட்சிப்பு செய்வதற்கு நேரம் எடுப்பதும் அந்த செயற்திட்ட பதவியணியில் பெரும்பாலானோர் சேவையைக் கைவிட்டுச் சென்றிருந்ததன் அடிப்படையில் ஒரு சில கணக்காய்வு விசாரணைகளுக்கு குறித்த தினத்தினுள் பதில் வழங்குவதற்கு முடியாதிருந்தது. | கணக்காய்வு விசாரணைகளுக்குத் தாமதமின்றி பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். இது தொடர்பில் தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 (1) (இ) பிரிவின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் தாமதமின்றி பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | கண்டி சுரங்க வீதி செயற்திட்டம் - Kandy Tunnel Construction Project | | |
| (இ) | Reconstruction of Bridge over Dehiwala Canal at Dehiwala for Marine Drive Extension Project. | | |

### 3.15. முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | A - 017 வீதி புனர்நிர்மாணம் செய்தல் மற்றும் மேம்படுத்துதல் செயற்திட்டத்திற்கு ( இறக்குவானை சூரியகந்த ) உரியதான அமைச்சரவைத் தீர்மானம் எடுக்கப்பட்டு 05 வருடங்கள் கடந்து இருந்த போதிலும் சூரியகந்த இன்னமும் முடிவான வர்த்தக மையமாக அபிவிருத்தி செய்யப்பட்டு இருக்கவில்லை. அதனால், காணியினைக் கைப்பற்றுவதற்காக மற்றும் பொதுப் பணிகள் செலவிற்காக ரூபா. 1,449.30 மில்லியன் உள்ளிட்ட ரூபா. 6,947.20 மில்லியன் ஆரம்ப செலவு மதிப்பீட்டுடன் இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் தேவைப்பாடு கணக்காய்வின் போது சர்ச்சைக்குரியதாகக் காணப்பட்டது. | நாட்டில் நிலவிய பலவீனமான பொருளாதார நிலைமை காரணமாக இதுவரையிலும் சூரியகந்த வர்த்தக மத்திய நிலையமாக அபிவிருத்தி செய்யப்படவில்லை. மேலும், இந்த வீதியினை நிர்மாணித்ததன் பின்னர் அந்த நிலைமை ஏற்படக்கூடும் என்பதை அனுமானிக்க முடியும். இந்த வீதியினை நிர்மாணித்ததன் பின்னர் சுற்றுலாப் பயணிகளின் ஈர்ப்பு அதிகரிப்பதுடன் இந்த நிலைமை சூரியகந்த பிரதேசத்தின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருக்கும். | சாத்தியக்கூறு ஆய்வு மற்றும் சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை என்பன பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் தேசிய அபிவிருத்தித் திட்டத்திற்கு உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) ஒன்றிணைந்த வீதி முதலீட்டு வேலை திட்டத்திற்கு 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் 05 மாகாணங்களில் 12 ஒப்பந்த பொதிகளின் வேலை நிறுத்தப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருந்த மொத்த பெறுமதி ரூபா. 2,793.41 மில்லியனான முற்பணத் தொகையை 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அந்த ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து அறவிடுவதற்கு முடியாதிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. | எட்டு (8) ஒப்பந்தங்களில் பிணைமுறி மூலமான அறவீட்டினை நிறுத்தி நீதிமன்ற தடை உத்தரவு பெற்றுக் கொண்டிருந்த காரணத்தால் முற்பணத்தினை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. உள்நாட்டு வங்கி நிதியத்துடனான செயற்திட்டத்தின் ஊடாக 4 ஒப்பந்தங்களில் இருந்து ரூபா. 447 மில்லியன் முற்பணத் தொகையினை அறவிடக் கூடியதாக இருந்தது. | இது தொடர்பில் முறையான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் வேலைகள் இடை நிறுத்தப்பட்ட ஒப்பந்தங்களுக்கு உரிய முற்பணம், பிணைமுறி என்பன குறித்த தினத்தில் அறவிட முடியாத தாமதத்திற்குப் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களை இனம் கண்டு தாபன விதிக் கோவை II ஆம் பகுதியின் XLVIII அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதலட

### 4.1. நிலையேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுவதன் முன்னேற்றம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கு 03 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்கு உரியதான இலக்குகள் மற்றும் சுட்டிகள் அமைச்சின் நெடுஞ்சாலைகள் பிரிவினால் அடையாளம் காணப்பட்டிருந்ததுடன் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைக்கு அமைய அந்த சுட்டிகளின் முன்னேற்றம் 80 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது. நிலைபேறான அபிவிருத்தி நோக்க இலக்கம் 12 இன் கீழ் அடையாளம் காணப்பட்டிருந்த இலக்கினை 2030 ஆம் ஆண்டளவில் எட்டுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2023 திசெம்பர் 31 ஆம் திகதியிலும் அந்த நோக்கத்தினை எட்டுவதற்கான முன்னேற்றம் 80 சதவீதம் மட்டுமே ஆகும். | சுற்றாடல் சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருந்த ஒரு சில பாரிய அளவிலான வீதி அபிவிருத்தி செயற்திட்டங்கள் நிலவிய பொருளாதார நெருக்கடி நிலைமையினுள் நிறுத்துவதற்கு நேரிட்டமையும் வீதி விரிவாக்கம் மற்றும் மேம்படுத்தல் போன்ற வருடாந்த பாதீட்டு நிதி ஒதுக்கப்படும் செயற்திட்டங்கள் அந்த வருடத்திலேயே பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதனால், சுற்றாடல் ஆய்வு அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படாது செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு நேரிட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டதன் காரணமாக | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களைத் திட்டத்திற்கு அமைய நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

2023 ஆம் ஆண்டில் 80 சதவீதத்திலும் குறைந்த முன்னேற்றம் பதிவிடப்பட்டிருந்தது.

## 5. மனிதவள முகாமைத்துவம்

### 5.1 இணைக்கப்பட்ட பதவியணி, உள்ளவாறான பதவியணி

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சில் மீளாய்வாண்டு இறுதித் தினத்தில் பதவியணி உள்ளடக்கம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. | | |
| (i) | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் நெடுஞ்சாலைகள் பிரிவில் இரண்டாம் நிலை பதவியான அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் 80 இற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த பதவிகளில் 07 மிகையாக உள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. | அரசாங்கத்தின் கொள்கை ரீதியான தீர்மானத்தின் அடிப்படையில் 2013 ஆம் ஆண்டில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 365 பேர் இந்த அமைச்சுக்கு இணைக்கப்பட்டுள்ளதுடன், அதற்கான பதவியணி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த உத்தியோகத்தர்கள் அனைவரையும் அமைச்சினுள் தடுத்து வைப்பதற்கு முடியாது என்பதனால் அவர்களது வசிப்பிடத்தை அண்டிய வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதேச அலுவலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ளனர். | அனுமதி வழங்கப்பட்ட எண்ணிக்கையினை விஞ்சி உத்தியோகத்தர்கள் இணைக்கப்படலாகாது. அமைச்சினுள் வைத்திருக்க முடியாத உத்தியோகத்தர்கள் தொடர்பில் குறித்த நியமன அதிகாரி வழங்கும் அறிவுரைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட முறைமைக்கு முரணாக அரச உத்தியோகத்தர்களைக் கூட்டுத்தாபனம் மற்றும் சபைகளில் சேவைகளில் ஈடுபடுத்தல் ஆகாது. |
| (ii) | வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு ஆச்சேர்ப்பு செய்யப்பட்ட 21 உத்தியோகத்தர்கள் அமைச்சின் நடவடிக்கைகளுக்காக இணைக்கப்பட்டுள்ளதுடன் அவர்களின் 07 உத்தியோகத்தர்கள் முகாமைத்துவ உதவியாளர்கள் என்பது அவதானிக்கப்பட்டது. இந்த இணைப்பு மீளாய்வாண்டிலும், அதற்கு முன்னைய ஆண்டுகளிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | அமைச்சின் பொதுவான நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்காக இந்த அமைச்சில் காணப்படும் சேவைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் சாரதிகள், அலுவலக உதவியாளர் சேவை மற்றும் ஏனைய வெற்றிடங்களுக்கு அரச உத்தியோகத்தர்கள் போதிய அளவில் இல்லை என்பதனால் வீதி | நிதிச்சட்ட நிறுவனங்களின் பௌதீக மற்றும் மனித வளங்கள் அமைச்சின் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படலாகாது. அமைச்சின் மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்களின் ஊழியர் எண்ணிக்கை தொடர்பில் முறையான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு உற்பத்தித் திறனாக |

| | | | |
|---|---|---|---|
| | | அபிவிருத்தி அதிகார சபையின் முகாமைத்துவ உதவியாளர்கள், சாரதிகள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் தற்காலிகமாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். | இணைத்தல்களை மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (iii) | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் போக்குவரத்துப் பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவரான பதவியணி தொடர்பான அவதானிப்புகளின் போது 12 பதவிகளுக்கான 52 வெற்றிடங்களும் 04 பதவிகளுக்கான 06 மிகையும் அவதானிக்கப்பட்டது. அந்த தகவல்களின்படி 04 சிரேஷ்ட தரப் பதவிகளுக்கான 06 வெற்றிடங்களும் ஒரு பதவிக்கான மேலதிகமும் காணப்பட்டதுடன் மூன்றாம் தரத்திற்கு உரிய நிர்வாக உத்தியோகத்தர் பதவியும், 17 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளும், 01 திட்டமிடல் வடிவமைப்பாளர் பதவியும், 07 முகாமைத்துவ உதவியாளர் பதவிகளும், 13 சாரதி பதவிகளும், 05 அலுவலக உதவியாளர் பதவிகளும் வெற்றிடமாக உள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. | 2023.12.31 ஆம் திகதி வரையில் வெற்றிடமாகக் காணப்பட்ட சிரேஷ்ட தரத்திலான பதவிகளை நிரப்புமாறு பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் மாகாண நிர்வாக அமைச்சிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. | மேலதிகமாக இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் விடுவிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மத்திய அதிவேக வீதி செயற்திட்டம் - கட்டம் 03 | | |
| | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியின்றி 10 பதவிகளுக்காக 31 பேருக்கு சம்பளம் மற்றும் ஏனைய படிகள் வழங்கப்படுகின்றன என்பது அவதானிக்கப்பட்டது. | ஆலோசனை சேவைப் பிரிவிற்கு பதவிகளை இணைக்கும் போது வீதி அபிவிருத்தி அதிகார சபையில் சேவையாற்றிய ஒரு சில உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் சேவையாற்றாத ஒரு சில பதவிகளுக்கு வெளியில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையை விஞ்சி ஆட்சேர்ப்பு செய்தல் அல்லது இணைத்தல் மேற்கொள்ளப்படலாகாது. |